# நெறிகள் ஆயிரம் படி



ஹிதாயத்துல்லாஹ் மீர்ஸா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெறிகள் ஆயிரம் படி

ஹிதாயத்துல்லாஹ் மீர்சா

மீர்சா வெளியீட்டகம்
105, தபாலக வீதி,
நிந்தவூர்-07,
சிறிலங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் பெயர் : **நெறிகள் ஆயிரம் படி**

ஆசிரியர் : ஹிதாயத்துல்லாஹ் மீர்சா

முகவரி : 105, தபாலக வீதி, நிந்தவூர்-07
தொலைபேசி: 0775381516
0775709904

வெளியீடு : மீர்சா பதிப்பகம்,
105, தபாலக வீதி, நிந்தவூர்-07

பதிப்புரிமை : © ஆசிரியருக்கே

முதல் பதிப்பு : செப்டம்பர் 2012

பிரதிகள் : 1000

அச்சுப்பதிப்பு : அந்-நூர் ஒப்செட்
அலியார் வீதி, கல்முனை-13
தொலைபேசி: 0776167535

அட்டைப்படம் : அந்-நூர் - கல்முனை

பக்கங்கள் : viii + 102

விலை : 350/=

**NERIKAL AA'IRAM PADI * Quotation**
* Author: Hithayathullah Meerza * © Hithayathullah Meerza
* Language: Tamil * First Edition September 2012
* Size: Demy 1 x 8 * Paper: 70gsm * Pages 108
* Copies: 1000 * Price: 350/= * Published By: Meerza Pathippagam, 105, Post Office Road, Nintavur-07, Sri Lanka.
* Phone: 0094775381516 & 0094775709904
* Printed by: An-Noor Offset, Kalmunai * Phone: 00 94 776167535

ISBN 978-955-52414-0-3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"நெறி" என்பது பெயர்ச் சொல்லானால் அதற்கு, வளைவு, சுருள், வழி, விதி (Rule), நல்லொழுக்கம், வீக்கம் எனப் பல பொருள்களும், வினைச் சொல்லானால் சினத்தால் புருவத்தை வளைத்தல், மலரின் புற இதழ்களை ஒடித்தல், கையால் அழுத்தல், சுருளாகு எனப் பல பொருள்களும் உண்டு என்பதை நம்மில் அனேகம் பேர் அறிந்திருக்கவில்லை. இதன் ஆசிரியரோ வழி (நல்வழி) அல்லது நல்லொழுக்கம் என்பதனை மையமாக வைத்துத்தான் இத்தொகுப்பினை தொகுத்திருக்கின்றார்.

சகோதரர் ஹிதாயத்துல்லாஹ் மீரசா அவர்கள் மனித நேயக் கருத்துக்களை மூலதனமாக வைத்து எழுதும் ஓர் உன்னதமான எழுத்தாளர்; சிந்தனையாளர். இவரது எழுத்துக்கள் பலதை வாசிக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றிருந்தேன். மனிதநேய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் இவரது கதைகள் கட்டுரைகள், கவிதைகள் மனதை மெல்ல வருடிச் செல்லும் தென்றல் காற்றைப் போன்ற நடையைக் கொண்டு மிளிர்கின்றன.

இங்கு "நெறிகள் ஆயிரம் படி" எனும் நெறிகள் அறிவுரைகள் பல அடங்கிய ஒரு தொகுப்பினை ஆசிரியர் அவர்கள் தொகுத்துத் தந்துள்ளது தமிழ் கூறும் நல்லுலகுக்கு கிடைத்த ஒரு அறநெறிப் பெட்டகம். அதில் நுழைந்து எழுபவர்கள் புடம்போட்ட தங்கமாய் மின்னி எழுவார்கள் என்பது எனது கருத்தாகும்.

எவ்வாறு ஒரு நிர்வாணமான ஓர் உடலுக்கு ஆடை அணிகலன்கள் அணிவித்தால் அது அழகாக மிளிருமோ அதுபோல இந்த நெறிகள் ஆயிரம் படி எனும் நூலுக்கு நான் அணிவிக்கும் இவ் அணிந்துரை இதற்கு ஒரு படி மெருகூட்டும் என்பது எனது கணிப்பாகும்.

மேலும் இத்தொகுப்பில் ஒரு சில நெறிகள் திரும்பத் திரும்ப வாசித்து மனசிலே பதிய வைத்து பாராட்டத் தகுந்த உயரிய கொள்கைகளையும், அறிவுரைகளையும் கொண்டிருப்பது இத்தொகுப்பின் சிறப்பம்சங்களில் ஒன்று. அவற்றில் சில "ஒரு நல்ல புத்தகத்தை படிக்கும்போது ஒரு புதிய நண்பனை அடைந்ததுபோல் இருக்கும். அதனை இரண்டாவது முறை படித்தால் பழைய நண்பனை சந்தித்தது போன்ற ஆனந்தத்தைக் கொடுக்கும். "மணித்தியாலங்கள் இருக்கின்றன என்று நிமிடங்களை வீணாக்கி விடாதே", "காட்டில் அருகில் வாழ்ந்தபோதிலும் ஆற்றின் அருகில் வாழ்ந்தபோதிலும் விறகையோ, நீரையோ வீணாகச் செலவழிக்காதே". "உண்மை வாசற்படி தாண்டுவதற் குள் பொய் ஊரைச் சுற்றி வந்துவிடும்". "உழைக்கும் மனிதனின் உறக்கம் மிகவும் இனிமையானது". "பெரியதை அறியுமுன் சிறியதை முற்றிலும் புரிந்து தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்".. "இளமைப் பருவம்தான் நாம் ஏதாவது செய்வதற்கும் நாம் எவரோ ஒருவராக உருவாவதற்கும் ஏற்ற காலம்". இன்னொன்று குறுக்கத் தன்மை; இன்னுமொன்று இதன் எளிய நடை. மற்றொன்று இதில் காணப்படும் சந்த வெளிப்பாடுகள். இவையெல்லாம் சேர்ந்து இத்தொகுப்பின் பெறுமதிக்கு மேலும் வலுவூட்டுகின்றன; சொல்லப்படும் கருத்துக்களை வளமாக்குகின்றன. வாசகர்களின் மனதில் நீருற்றுகின்றன. பூப்பூப்பிக்கின்றன; மொத்தத்தில் அவை நறுமணம் பரப்பி நிற்கின்றன.

உள்ளே சென்று முகர்ந்து பாருங்கள் உண்மை விளங்கும் என வாசகர்களை வேண்டி, ஆசிரியரை வாழ்த்தி முற்றுப்புள்ளி இடுகின்றேன். நன்றி.

**டாக்டர் ஆ. முகம்மது ஜாபீர்,**
பதிவு வைத்திய அதிகாரி,
மாவட்ட வைத்தியசாலை, நிந்தவூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"நெறிகள் ஆயிரம் படி" என்னும் மணிமொழிகளை நூலில் கோர்த்து மாலையாக உங்கள் கரங்களில் சூடப்பட்டிருக்கின்றன. இந்த நூல் மாலையின் மணம் நிச்சயமாக உங்களின் மனத்தையும், மூளையையும் ஆட்படுத்தி வாழ்வில் புத்தூக்கம் ஏற்படுத்தும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை.

இந்நூலில் குறிப்பிடப்பட்டிருக்கும் பொன்மொழிகள், பழமொழிகள், தத்துவங்கள் வாழ்வியல் அனுபவங்கள். இவை யாவும் நான் பல நூறு புத்தகங்களில் இருந்து பல வருடங்களாகப் படித்து அவற்றை எனது வாழ்வில் அனுபவித்து வெற்றி கண்ட கல்விப் பேரூற்று. எனவே இவற்றையெல்லாம் ஒன்று திரட்டி நூல் வடிவப்படுத்தினால் மக்களின் வாழ்வுக்கு நற்பாதை காட்டும் என்பது எனது அவாவாக இருந்தது.

ஒரு சிறு துண்டு மாணிக்கத்தைப் பெற வேண்டுமாக இருந்தால் எவ்வளவோ பெரிய கடினமான பாறைப்படலத்தை தோண்டி அவற்றில் எத்தனையோ விதமான கூழாங்கற்களை அரித்தெடுத்து, கழுவி, பட்டை தீட்டும்போதுதான் உண்மையான ஒளி சிந்தும் ஒரு சிறு மாணிக்கத்தைப் பெறலாம். இது போன்றுதான் ஒரு மனிதனின் நீண்ட கால வாழ்விலோ அல்லது மிக நீண்ட அத்தியாயங்களைக் கொண்ட நூல்களிலோ ஒரு பொன்மொழியைக் காணலாம்.

பொன்மொழிகள் என்பதும், வாழ்வியல் அனுபவம் என்பதும் வெறுமனே வருவதில்லை. ஒரு எழுத்தாளன்கூட தான் எவ்வளவு எழுதிக் குவித்தாலும் ஒரு பொன்மொழி என்பதை அவரால் அறுதியிட்டு எழுத முடியாது. ஆனால் அனுபவத்தின் மூலம் கிடைக்கப்பெறும் அசரீரிதான் மனிதனுக்கு மாணிக்க மொழியாக ஒளி வீசி மானிலமெங்கும் சுவைபடப் பேசப்படும்.

எனது வாழ்வில் எனக்கு ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி எனக்கு ஒரு பொன்மொழியை ஏற்படுத்தியது. ஆற்றில் நண்பர்களோடு நீராடி விளையாடிக் கொண்டிருந்தோம். அப்போது ஒருவர் நீர் அள்ளுவதற்காக இரும்பு வாளி ஒன்றைக் கொண்டு வந்தார். அந்த வாளியை அவரிடம் வாங்கி நீரை அள்ளி நான் விளையாட்டாக நண்பன் ஒருவனுக்கு வீசினேன்; வாளி என் பிடியில் இருந்து விடுபட்டு ஆற்றில் தாண்டுவிட்டது. ஆற்று நீர் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. ஓடிக் கொண்டிருந்த ஆழமான ஆற்றில் நண்பர்கள் அனைவரும் வாளியை தேடிக்கொண்டிருந்தோம். வாளி தென்படவில்லை. அப்போது ஏதோ மிதந்து கொண்டு போனது. அதைப் பார்க்க அதன் அருகே போனேன். அது ஒரு தென்னை மட்டையாக இருந்தது. அப்போது எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனையுடன் பழமொழி ஒன்று தோன்றியது. சந்தேகமும் பீதியும் ஏற்பட்ட எனக்கு "ஆற்றில் அம்மிக் குளவியை தவறவிட்டவன் மிதந்து போவது அதுதானா என்று பார்த்தானாம்". இது போன்ற சந்தர்ப்பங்களில்தான் பொன்மொழிகள் என்பது உருவாக காரணமாக அமைகின்றன. சூழலும், கவித்துவமும் நிகழ்ச்சிகளைப் பிரதிபலிக்கின்றது. இந்த நூலுக்கு "நெறிகள் ஆயிரம் படி" என்னும் பெயர் வைத்துள்ளேன். அதற்கு இரண்டு காரணங்களை மையமாக வைத்துத்தான் அந்தப் பெயரை சூடியிருக்கின்றேன்.

முதலாவதாக "நெறிகள் ஆயிரம் படி" – த்து வாழ்வில் அறிவை விருத்தி செய்வதாகும். இரண்டாவதாக "நெறிகள் ஆயிரம் படி" – யைத் தாண்டி மேலேறிச் சென்று வாழ்வில் மேன்மையடைவதாகும்.

மேலும் இந்த நூலில் வரும் தத்துவ நெறிகளை நான் பல வருடங்கள் படித்து சுவைத்து நினைவில் வைத்திருந்ததும் புத்தகங்களில் வாசித்தவைகளும்தான். எனவே, இந்த தத்துவங்களை சொன்ன அறிஞர்கள் சிலர் நினைவில் இருக்கின்ற காரணத்தால் அந்த அறிஞர்களின் பெயர்களை அந்த தத்துவங்களில் குறிப்பிட்டிருக்கின்றேன். சில தத்துவங்களைச் சொன்ன இன்னார் என்று சரியாக நினைவு இல்லாத காரணத்தால் தத்துவத்தை மட்டும் எழுதியிருக்கின்றேன்.

பெரும்பாலும் எவர் சொன்னார் என்பதல்ல பிரச்சினை; எவர் எதைச் சொன்னார் என்பதுதான் பிரச்சினைக்குரியது. இதில் சில பொன்மொழிகள் "அழகிய கனி; அதன் உள்ளே அழுகல். பார்த்தீர்களா? பொய் எவ்வளவு வேசம் போடுகிறது என்று". "காலம் என்பது மூலதனத்தின் பொற்பேழையாகும்". "பணத்தைப் பற்றி நீ கவனமாய் இரு; பணம் உன்னைக் கவனித்துக் கொள்ளும்". "வெற்றியின் முக்கால் பாகம் ஒழுங்கு முறைதான்" என்பன போன்ற மிகவும் மனதைத் தொட்டு வாழ்வை சுவைபட மேன்மைப்படுத்தும் வண்ணமாக அமையப் பெற்றிருக்கின்றது.

மேலும் இந்த நூலுக்கு தனது ஓய்வற்ற நிலையிலும் நேரம் எடுத்து நெறிகள் ஆயிரத்தையும் படித்து கணனிப் பிழைகளையும், புரியாத தர்க்க நெறிகளுக்கு கோடிட்டு, மேன்மையானவற்றை குறிப்பிட்டு, மிகவும் சிறப்பாக அணிந்துரை எழுதித் தந்த மாவட்ட பதிவு வைத்திய அதிகாரி டாக்டர் ஆ. முகம்மது ஜாபிர் அவர்களுக்கு நன்றி கூறுவதோடு, கணனி வடிவப்படுத்தியதில் ஆர்வமாய் இருந்த எஸ்.எம். சகாப்தீன் அவர்களையும் மகிழ்வித்து, இந்நூல் வெளிவர பெரிதும் உதவியாக இருந்த கல்முனை நகரபிதா கலாநிதி சிராஜ் மீராசாகிப் அவர்களுக்கும் நன்றி செலுத்தியவனாக வாசக நேயர்களின் அறிவு மலர, ஆக்கம் வளர்ச்சியடைய வேண்டி இறைவனை இறைஞ்சுகிறேன்.

**ஹிதாயத்துல்லாஹ் மீர்சா**

தொகுப்பாசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்றும்

என்மனம் நிறைந்த

ஆசிரிய ஆசான்

ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர்

மணிப்புலவர்

மருதூர் ஏ. மஜீது

அவர்களுக்கு

இந்நூல்

சமர்ப்பணம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01. அனைத்து மதங்களும் ஏதாவது ஒரு காரணம் பற்றி நமது வணக்கத்துக்கு உரியவையாக விளங்குகிறது. இதையறிந்து நடப்பவன் தன் மனத்தை உயர்த்துவதோடு, பிறருடைய மதங்களுக்கும் சிறந்த சேவை செய்தவனாகிறான். (அசோக மன்னன்)

02. மற்றவர்களுடைய விதியை மாற்றியமைப்பதற்கு முன் இறைவனே உன்னிடம் வந்து, "அடியானே! உன்னுடைய விருப்பம் என்ன சொல்; நிறைவேற்றித் தருகின்றேன்" என்று கூறும் வண்ணம் உன்னுடைய எண்ணம் பலமானதாக இருக்கட்டும். (இமாம் ஷாபிஈ)

03. கெட்டவை செய்ய வாய்ப்புக் கிடைக்காத பொழுது எல்லோரும் நல்ல மனிதர்களே. ஆனால், கெட்டவை செய்ய வாய்ப்புக் கிடைக்கும் பொழுது எவன் அவற்றைச் செய்யாது வெருண்டோடுகின்றானோ அவனே பாவம் செய்வதைவிட்டும் தன்னைக் காத்துக் கொள்வான். (பிளேட்டோ)

04. உற்சாகத்தை இழப்பதும் ஒரு வகையில் மரணம் போலத்தான். தோற்கடிக்கப்படுவதற்கு முன்பே தோல்வியை ஒப்புக் கொள்வதைப் போன்றது அது.

05. நல்லதைத் தருபவர்களே சிறந்ததைப் பெறுவார்கள்.

06. அருள் அற்றவை அனைத்தும் நம் பெரும் முயற்சியால் பெற்றவை. அருளானவை எல்லாம் தானே நம்மிடம் வந்து சேர்ந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. அழகிய கனி; அதன் உள்ளே அழுகல். பார்த்தீர்களா? பொய் எவ்வளவு வேசம் போடுகிறது என்று. (ஷேக்ஸ்பியர்)

08. ஒரு கவலையை நீங்கள் தூக்கி எறிந்தால் அந்தக் கவலை உங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்குமே அல்லாமல் உங்கள்மீது திணிக்கப்பட்டதாக இருக்காது.

09. இனிமையான நண்பர்கள் நம்முடைய மகிழ்ச்சியை இரண்டு மடங்காக மாற்றுகிறார்கள். அதேநேரத்தில் துன்பத்தைப் பாதியாகக் குறைக்கின்றார்கள்.

10. அழகிய ஆத்மா உள்ளவன் அழகிய விசயங்களைப் பற்றித்தான் பேசுவான்; ஆனால் அழகிய விசயங்களைப் பேசக்கூடியவன் அழகிய ஆத்மாவைக் கொண்டவன் எனச் சொல்ல முடியாது.

11. நீண்ட காலம் வாழவேண்டும் என்பதில் எல்லோருக்கும் விருப்பம். ஆனால் வயதாவதிலோ எவருக்குமே விருப்பமில்லை.

12. உலகம் ஒரு புத்தகம். நீங்கள் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியும் அதில் ஒரு புதிய பக்கத்தைத் திறந்து வைக்கும்.

13. காதலும். அரசியலும் சூதாட்டம் போன்றது. இரண்டிலும் பொய்யும் பித்தலாட்டமும் செய்தால்தான் வெற்றிபெற முடியும்.

14. எந்த ஒரு மதத்திற்கும் ஏகபோக உரிமை கிடையாது. எல்லா மதங்களிலும் எல்லா நன்மைகளும் உண்டு. (அக்பர் சக்கரவர்த்தி)

15. புத்தகங்களும், நண்பர்களும் குறைவாக இருந்தாலும் நல்லவையாக இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நிறுவையில் போடும்போது அதிக கனமாக இருப்பது நற்பண்பு.

17. யாழின் நரம்புகள் தனித்தனியே இருந்தாலும் அவை மீட்கப்படுகையில் ஒரே இசையைத்தான் எழுப்புகின்றன.

18. தூக்கம் வந்துவிட்டால் தலையணை தேவை இல்லை. காதல் வந்துவிட்டால் அழகே தேவையில்லை.

19. ஒரு மனிதனுக்கு இறைவன் நல்லது செய்ய வேண்டும் என்று நினைத்தால் அவனுக்கு நல்லதொரு மனிதனை நண்பனாக்கி விடுகின்றான்.

20. ஒரு மனிதன் அன்போடும், பாசத்தோடும் தன் நண்பனை, சகோதரனைப் பார்க்கும் பார்வை வணக்கத்தில் சேர்ந்தது.

21. கேட்கப்படும்போது கொடுப்பது நல்லது; கேட்காமலே புரிந்து கொண்டு கொடுப்பது அதைவிட நல்லது.

22. வாஞ்சைக் குணமும் வள்ளல் தன்மையும் உள்ளவன் எந்த நிலையிலும் மகிழ்ச்சியானவனே.

23. கல்வி செய்யுட் கோவையுடன் துலங்குகிறது; தக்க நல்லொழுக்கத்தினால் உற்றமடைகிறது.

24. நம்பிக்கையாளர்களின் உயிர்கள் தூரத்திலிருந்தே ஒன்றையொன்று சந்தித்துக் கொள்கின்றன - அவர்கள் ஒருவரையொருவர் பார்க்காவிட்டாலும் சரி.

25. நீ எவ்வாறு வளர்க்கப்பட்டிருந்தால், இவ்வாறான நிலைமையை அடைந்திருப்பேன் என்று கருதுகின்றாயோ, அவ்வாறே உன் குழந்தையை வளர்த்துக் கொள்.

26. காதல் என்பது ஆத்மாவின் அடித்தளத்தில் இருந்து உருவாக வேண்டும். மாறாக உடல் அழகில் இருந்தல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. கண்ணீரைத் துடைப்பவனைவிட கண்ணீர் விடாமல் பார்த்துக் கொள்பவனே உற்ற நண்பன்.

28. அறியாமையுடன் சகோதரத்துவம் கொண்டிருப்பவர்களை நண்பர்களாகத் தேர்ந்தெடுக்காதீர்கள்.

29. "என்ன வாழ்க்கை" என்று உங்களிடம் சொல்லியிருப்பார்கள். சலித்துப் போனவர்களின் அந்தக் கூற்றை நீங்களும் களைத்துப்போன வேளையில் எதிரொலிக்கின்றீர்கள்.

30. உன் குறைகளை உனக்கு எடுத்துச் சொல்பவர்கள் உன் நண்பர்களும் எதிரிகளும் மட்டுமே.

31. உண்மையை விரும்புபவன் அதை அறிந்தவனை விட சிறந்தவனாகிறான்; அதை விரும்புபவனைவிட உண்மையில் மகிழ்வு துய்ப்பவன் உத்தமனாகிறான்.

32. சுறுசுறுப்பான தேனீக்கும் சுறுசுறுப்பான மனிதர்களுக்கும் துக்கப்பட நேரமில்லை.

33. உன் வெற்றி தன்னம்பிக்கையிலும், முயற்சியிலும் என்பதை அறிந்து கொள்.

34. மூடர்களுடன் ஏற்பட்டிருக்கும் நட்பைத் துண்டிப்பது இறைவணக்கத்தைச் சேர்ந்தது.

35. மூடர்களை ஏறிட்டுப் பார்ப்பது தவறு.

36. நேர்மையுணர்வு பெற்றவர்களைத் தேர்ந்தெடுங்கள். அவர்களின் நிழலில் நீங்கள் வாழலாம்.

37. சரித்திரங்களைப் படிப்பதோடு நின்றுவிடாமல் சரித்திரங்களை உருவாக்க வேண்டும்.

38. அதிகக் கெட்டிக்காரன் சந்தைக்குப் போனால் விற்கவு மாட்டான்; வாங்கவுமாட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. நீங்கள் செழுமையில் இருக்கும்போது உங்களை நண்பர்கள் அறிவார்கள். வறுமையில் நண்பர்கள் யார் என்பதை நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

40. எவ்வளவுக்கெவ்வளவு ஆழமாக துன்பம் உங்களை செதுக்குகின்றதோ அந்த அளவிற்கு நீங்கள் இன்பம் பெறுவீர்.

41. சிந்திக்காமல் படிப்பது மனதில் குழப்பத்தை தோற்றுவிக்கும். படிக்காமல் சிந்திப்பது மனதின் சமநிலையைக் கெடுத்து விடக் கூடியது. (கன்பூசியஸ்)

42. அறிவைக் காட்டிலும் கற்பனை கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தவை. (அல்பிரட் ஐன்சடீன்)

43. வெளியே காட்டிய கோபம் மன்னிப்புக்கு வழிதேடும். உள்ளடக்கிய கோபம் பழிக்கு வழிதேடும்.

44. உன் உள்ளத்தின் உண்மையை வாயிலே திற. தீமையை விலக்கிவிடு.

45. ஆடை இல்லாதவன் அரை மனிதன்; ஆசை இல்லாத மனிதன் முழு மனிதன்.

46. எழுத்தாளர் மேதாவிபோல் ஆலோசிக்க வேண்டும். ஆனால் சராசரி மனிதனுக்கு அர்த்தம் விளங்கும்படி தெளிவாக எழுத வேண்டும்.

47. புத்தகம் நம் மௌன நண்பன்.

48. நல்ல தீர்மானம் கொண்டிருக்கின்றானே அவனே சரியாக அமைந்த மனிதன்.

49. எத்தனை முறை வேண்டுமானாலும் யோசித்துப் பார்த்துக்கொள்! ஆனால் தீர்மானித்து விட்டாயானால் அது இறுதிமுறையாக இருக்கட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

50. நமது நன்மையான நண்பர்கள் யார் தெரியுமா? புத்தகங்கள்தான்.

51. எதைச் செய்தாலும் முன்னெச்சரிக்கையாக முடிவைப்பற்றி எண்ணிப்பார்த்துச் செய்யுங்கள்.

52. தீர்மானம் என்பது சர்வ வல்லமை உள்ளது.

53. வேலையில் ஈடுபட்டிருப்பவனுக்கு செய்தியை கேட்டுக் கொள்ள நேரமில்லை.

54. நல்லவளாக இருப்பதைவிட அழகியாக இருப்பதையே ஒவ்வொரு பெண்ணும் விரும்புகிறாள்.

55. அதிஷ்டம் என்ற சொல் எப்போதும் துணிச்சல் உள்ளவர்களின் பக்கமே நிற்கும்.

56. வெற்றி பெறுபவர்கள் சந்தேகப்படுவதில்லை. சந்தேகப் படுபவர்கள் வெற்றி பெறுவதில்லை. (நெப்போலியன்)

57. உண்மையான நட்பு ஆரோக்கியத்தை போன்றது. அதனை இழந்துவிடும் வரை அதன் மதிப்பை நாம் அறிவதில்லை.

58. இறைவனின் அருளைப்பெற முதற்படி உயிர்க்கருணை வேண்டும்.

59. உன் வாழ்நாளை ஒரு சந்தர்ப்பம் என நினைத்து வளமாக்கிக் கொள்.

60. தேவையில் நமக்கு இருக்கும் ஒரே உதவி தீர்மானம்தான்.

61. தேவையில்லாமல் நிறைய நண்பர்களை பெற்றிருப்ப வனுக்கு ஒருவனும் உண்மையில் நண்பன் இல்லை.

62. மனதில் ஒன்றைப் புதைத்து வைத்தால் அது நஞ்சு; மனம் திறந்து அதை ஏற்றுக்கொண்டால் அது மருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63. இன்பத்தையும், மகிழ்ச்சியையும், ஓய்வையும் தேடி அலையாதீர்கள். அவ்வாறு அவற்றை அடைந்தால் அவை நிச்சயமாக நம் கைப்பிடிக்கு அகப்படாது. (கன்பூசியஸ்)

64. நல்லவற்றில் நம்பிக்கை கொள்ளாதவன் தீயவற்றை நம்பிக்கை செய்ய அஞ்சவே மாட்டான்.

65. மற்றவர்கள் நீண்ட உறக்கத்தில் ஆழ்ந்து இருக்கும்போது, வெற்றியாளர்கள் விழித்து உழைக்கிறார்கள். (நெப்போலியன்)

66. பணம் தேடுவது அவ்வளவு கஷ்டமன்று; அதை முறையாக செலவழிப்பதே கடினம்.

67. உன்னத நூல்களின் சிறப்புப் பற்றி சொல்வதைவிட அதனைப் படிப்பதற்கு ஆர்வத்தை தூண்டுவதே நல்லது.

68. தன் வாழ்வில் இலட்சியம் வேண்டும், இலட்சியம் இல்லாத மனிதன் மிருகத்துக்குச் சமம்.

69. எங்கே சினம் இருக்கின்றதோ அந்த இடத்தை விட்டு அப்புறம் போக வேண்டும்.

70. நினைவாற்றலைப் போற்றும் கல்வி மக்கள் கேட்கும் கேள்விகளுக்கு பதில் அளிக்க உதவும். ஆனால் சிறந்த ஆசிரியனாக இயங்க உதவாது.

71. முற்காலங்களில் மாணவர்கள் தம்பொருட்டே கல்வி கற்று வந்தார்கள். இன்று மாணவர்கள் பிறர் பொருட்டு கல்வி கற்கிறார்கள். (கன்பூசியஸ்)

72. நன்றியுள்ள மனிதன் எது சொன்னாலும் நம்பலாம்; அவன் துரோகம் செய்யமாட்டான்.

73. நாளை நாளை என்று நாட்களை நகராமல் நசுக்காதே, காலம் பொன்னானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. பதற்றம் இல்லாமல் இருப்பதுதான் வெற்றிக்கு வழி

75. மனதாலும், சொல்லாலும், செயலாலும் எந்த ஓர் உயிருக்கும் துன்பத்தை உண்டாக்காமல் இருப்பதே அகிம்சை. (புத்த பகவான்))

76. உன் நண்பனை வறுமை நேரத்தில் கண்காணித்துக் கொள்.

77. சேர்ந்த செல்வத்தை மறைக்கலாம், சேர்ந்துள்ள வறுமையை மறைக்க முடியாது.

78. ஒரு நல்ல புத்தகத்தை படிக்கும்போது ஒரு புதிய நண்பனை அடைந்ததுபோல் இருக்கும். அதனை இரண்டாவது முறை படித்தால் பழைய நண்பனை சந்தித்தது போன்ற ஆனந்தத்தை கொடுக்கும்.

79. கழுவாத காலோடு பூசையறைக்குள் நுழைவதைவிட செருப்புப் போட்டுக் கொண்டு நுழைவது ஒன்றும் தவறல்ல; களங்க மனம் படைத்தவனைவிட கொலைகாரன் ஒன்றும் கொடியவனல்ல. (கண்ணதாசன்)

80. தான் கற்றதை மறவாமல் இருப்பதும் மேலும் மேலும் சகல விடயங்களையும் கற்று வருவதும்தான் ஆசானுக்கு அழகு.

81. நாம் எச்சரிக்கையுடன் இருந்தால் இந்த உலகில் வெற்றிகரமாக வாழமுடியும் என்ற நம்பிக்கையை பெறமுடியும்.

82. தியாகம் செய்ய வேண்டும் தியாகம் இன்றி விடுதலை இல்லை.

83. போலிப் பண நோட்டுக்களை மனிதன் உண்டாக்குகிறான். போலி மனிதர்களை நல்ல பண நோட்டுக்கள் உண்டாக்குகின்றன. (பேர்னாட்சா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

84. ஆண்கள் கபட உணர்ச்சியற்றும் கற்பு ஒழுக்கத்துடனும் உள்ளவரையில் பெண்கள் பயப்படத் தேவையில்லை. (ராஜாஜி)

85. உங்களுக்கு சிறந்த நண்பர்கள் வேண்டுமா? நண்பர்களுடன் அன்பாகப் பழகுங்கள். அத்துடன் எதிரிகளுடன் மிகப் பண்பாகப் பழகுங்கள்.

86. வெற்றி பெறும் ஒவ்வொரு செயலும் ஒரு குறிக்கோளாகி விடுகின்றது.

87. மனிதன் சோம்பேறி ஆகும்போது அவனின் புத்தி என்ற தீபம் அணைகின்றது.

88. கல்வி கற்பதைக் காட்டிலும் ஒழுக்கமே சிறந்தது.

89. சோம்பேறிக்கு எந்த வேலையும் கஷ்டம். ஊக்கமுள்ளவனுக்கு அந்த வேலையே எளிது.

90. எழுந்திரு; உலகத்தோடு இயங்க உன் தோள் கொடுத்து உதவு. எத்தனை நாட்களுக்கு இந்த வாழ்வு? இவ்வுலகிலே மனிதனாய் பிறந்ததற்கு ஏதேனும் ஒரு நினைவுச் சின்னத்தை நீ விட்டுச் செல்ல வேண்டும். இல்லையேல் உனக்கும் கல்லுக்கும் மரத்துக்கும் என்ன வித்தியாசம்? (விவேகானந்தர்)

91. தன் குறை எது எனக் கண்டுபிடித்தல் அறிவின் சிகரமாகும்.

92. எப்படி வேண்டுமானாலும் சமையுங்கள்; ஆனால் அன்பாய் பரிமாறுங்கள்.

93. தோல்வியில் ஏற்படும் கண்ணீரையும், வெற்றியின்போது ஏற்படும் மனமகிழ்ச்சியையும் ஒன்றாகக் கருதுங்கள்.

94. விருப்பு வெறுப்பின்றி எதையும் அணுகினால் வெற்றி நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

95. நல்ல நண்பனைத் தேடுமுன் நல்ல புத்தகங்களைத் தேடிக் கொள்வது நல்லது.

96. உன் இளமையின் ரகசியம் வெற்றியாக வேண்டுமென்றால் நீ செலவிடும் ஒவ்வொரு நிமிடமும் வீணாக்கப்படல் கூடாது.

97. மதம் என்பது பெரிதல்ல; மதத்தில் சொல்லப்படும் கருத்துக்களை எடுத்துக் கொள்வதே பெரிது.

98. புத்தகம் என்பது வாய் திறக்காத சொற் பொழிவாளர்; மௌனம் வகிக்கும் மகாகவி; தனிமையை தூரமாக்கும் நண்பன்; மற்றொரு உலகுக்கு அழைத்துச் செல்லும் சிம்ம சொர்ப்பணம்.

99. ஆசைகள் விருப்பு வெறுப்பு இல்லாத நிலையை அடையும் நாளே ஓய்வு நாள்.

100. மீண்டும் எம்மால் இறந்த காலங்களையும். நாக்கு மொழிந்து விட்ட வார்த்தைகளையும் பெற்றுக்கொள்ள முடியாது.

101. உனது விரோதி யார்? கேள்வி எழுமானால், வறுமைதான் முதல் விரோதி எனப் பதில் வரும்.

102. புத்தகம் இல்லாத வீடு உயிர் இல்லாத உடலைப் போலாகும்.

103. பணத்தின் மிகப் பெரிய பயன் அதை இல்லாதவருக்கு கொடுத்து மகிழ்வதாகும்.

104. அடிக்கடி தவறு செய்பவன் அப்பாவி; ஒரே தவறைத் திரும்பத் திரும்பச் செய்பவன் மூடன்; ஒரு தவறுமே செய்யாதவன் மரக்கட்டை; தன்னையறிந்து திருத்திக் கொள்பவனே மனிதன். (கண்ணதாசன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

105. உள்ளத்தில் உறுதியான தீர்மானத்துடன் இருப்பவன் தனக்கேற்ற முறையில் உலகையே அமைத்துக் கொள்வான். (பேர்னாட்சா)

106. வாழ்வில் ஒரு நோக்கங்கொண்டு அசௌகரியங்களுக்கு இடையிலும் அந்த நோக்கத்தில் உறுதியாயிருப்பதே வாழ்வில் வெற்றி பெறுவதற்கான அவசிய சிந்தனையாகும்.

107. உதவிகளை விடத் துன்பங்கள்தாம் - சௌகரியங்களை விடத் தடைகள்தாம் மனிதர்களை உண்டுபண்ணுகின்றது.

108. சண்டைக்குப்போகாதே! சண்டை என்று வந்து விட்டால் உன்னை எப்போதும் நினைத்திருப்பது போல் நடந்து கொள். (சேக்ஸ்பியர்)

109. காலம் என்பது ஆழ்கடல் போன்றது. அதை பயன்படுத்திக் கொள்வதே முத்து எடுப்பதற்குச் சமனாகும்.

110. மதம் என்று சொல்லி மனிதனை வெறுப்பவன் மதம் பிடித்தவன். மதத்தை மதிப்பவன் தெளிவான மனிதன்.

111. நீங்கள் எந்த எண்ணத்துடன் மனைவியுடன் வாழ்கின்றீர்களோ, அந்த குணமுடைய குழந்தைகள்தான் பிறக்கும். (இமாம் ஷாபிஈ)

112. பணத்திற்காக மட்டும் மணம் முடிப்பவனைப் போன்ற அயோக்கியனுமில்லை. காதலுக்காக மட்டும் மணம் முடிப்பவனைப் போன்ற முட்டாளுமில்லை. (டாக்டர் ஜான்சன்)

113. குழந்தையின் வருங்கால விதியை முடிவுசெய்வது எப்பொழுதும் தாயின் வேலையாகவே இருக்கின்றது. (போனபாட் நெப்போலியன்)

114. குழந்தைகள் இல்லறத்திற்கு புதிதாக வந்துசேர்ந்த பிரயாணிகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

115. பணத்தை மிச்சம்பிடித்து பிள்ளையைக் கெடுத்துவிடாதே.

116. பணம் பேச ஆரம்பிக்கும் பொழுது நியாயம் மௌனம் சாதிக்கும்.

117. பணப் பை பெருக்கப் பெருக்க ஒருவனுடைய கன்னமும் பெருக்கிறது. பணப்பை சிறிதாக சிறிதாக கன்னமும் வற்றி விடுகிறது.

118. பணம் வந்ததும் அறிவற்ற மூடன்கூட அறிவாளி போன்று ஆகிவிடுகின்றான். அவனது வாயில் இருந்து வரும் முட்டாள்தனமான வார்த்தைகள்கூட சமூகச் சட்டங்களாய் ஆகிவிடுகின்றன.

119. இடப்படும் ஆணையானது தவறாக இருந்தால், மகன் தந்தையையும், அமைச்சன் அரசனையும் சற்றும் தயங்காது எதிர்க்கலாம். (கன்பூசியஸ்)

120. மணித்தியாலங்கள் இருக்கின்றன என்று, நிமிடங்களை வீணாக்கிவிடாதே.

121. கெட்டவனுடன் நட்புக்கொள்வதைவிட தனித்திருப்பது மேல், தனித்திருப்பதைவிட நல்லவனுடன் நட்புக்கொள்வது சிறந்தது.

122. அநியாயக்காரர்களை ஏறெடுத்துப் பார்க்காதீர்கள்; நீங்கள் செய்யும் நற்காரியங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும்.

123. ஒரு நூல் இதயத்திலிருந்து வெளிவந்திருந்தால் அது மற்ற இதயங்களுள் புகுதற்கு வழிசெய்து கொள்ளும்.

124. நீங்கள் சொன்ன விடயம் பொய்யாகிவிட்டால் அதற்காக வருந்தாதீர்கள். ஏனென்றால் அதன் மூலம் ஒரு உண்மையை நீங்கள் தெரிந்து கொள்கின்றீர்கள்.

125. தங்கத்துக்கு அரசர்கள் கூட தங்களின் தொப்பியைக் கழற்றி மரியாதை செய்கின்றனர். (ஜேர்மன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126. கொழுத்த பணப் பைக்கு நரகத்தின் காவலர்கள்கூட அடிபணிகிறார்கள். (யப்பான்)

127. பணம் யாருடைய கையில் இருக்கின்றதோ அது அவனுக்கு ஆற்றல் அளிக்கின்றது.

128. பணமில்லாத மனிதன் இறக்கையில்லாத பறவைக்கு சமமேயாவான்.

129. கெட்டவனின் தொடர்பால் கற்றவனுக்கு துன்பம் ஏற்படுகிறது.

130. நல்ல நண்பன் உன் தப்பை உடனே சொல்லிவிடுவான். அதன் பின் அவன் நல்ல நண்பனாகத் தொடர்வது சந்தேகம்.

131. நல்லதை நினை; நல்லதை சொல்; நல்லதை செய். இவை உன்னை மட்டுமன்றி நாட்டையும் காக்கும்.

132. படிப்பவன் புத்தகத்தை மூலையில் போட்டான் என்றால், அது எழுதியவனின் தவறேயாகுமே தவிர, படித்தவனின் தவறு அல்ல.

133. ஆணுக்கு காதல் உண்டாவது கண் வழியாக. பெண்ணுக்கு காதல் உண்டாவது காது வழியாக.

134. நல்ல குணமுள்ள மனைவி கிடைத்தால் விமானத்தில் போவது போலும், முரட்டு மனைவி கிடைத்தால் கட்டை வண்டியில் போவது போலும் இருக்கும்.

135. பெரியார்கள் நேர்மையாக நடந்துகொள்ளாவிடின் அவர்களுடைய மக்களும் சந்ததிகளும் போக்கிரிகளாகி விடுவர்.

136. திருமணம் என்பது கதவு தாழிடப்பட்ட ஒரு கோட்டை. அதற்குள் வெளியே உள்ளவர்கள் உள்ளே புக முயல்கின்றார்கள். உள்ளே உள்ளவர்களோ வெளியே வர விரும்புகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

137. உண்மை என்றுமே மனித இயல்பை விட்டு விலகுவது கிடையாது. உண்மையானது மனிதப் பண்பிடம் இருந்து பிரிந்து காணப்பட்டால் அதை உண்மை எனக் கூறுவதே தவறு.

138. இரண்டு கைகளைப் போன்றவர்கள் நண்பர்கள். அவை ஒன்றை ஒன்று தேய்த்துக் கழுவுகின்றது.

139. பணம் வாழ்க்கையை நடத்துவதற்கு ஒரு சாதனம் என்று எவன் கருதுகின்றானோ அவனே உண்மையான விவேகியாவான்.

140. காட்டின் அருகில் வாழ்ந்தபோதிலும் ஆற்றின் அருகில் வாழ்ந்த போதிலும் விறகையோ, நீரையோ வீணாகச் செலவழிக்காதே.

141. வருவாய் இல்லாத படிப்பு நொண்டித் தன்மையுள்ளது. படிப்பில்லாத வருவாய் குருட்டுத் தன்மையுள்ளது.

142. பிச்சைக்காரர்கள் குதிரையில் ஏறிவிட்டால் அவர்கள் குதிரையை விரட்டுகின்ற விரட்டில் குதிரை செத்துவிடும். (வில்லியம் சேக்ஸ்பியர்)

143. பணக்காரனாயிருந்து ஏழையானவனிடம் ஊழியம் செய்யலாம்; ஆனால் ஏழையாய் இருந்து பணக்காரனான வனிடம் ஒருபோதும் ஊழியம் செய்ய முடியாது.

144. அறச் சிந்தனையுள்ள மனிதர்கள் செல்வத்தின் பலனை நுகர்கிறார்கள். அவர்களைத்தான் மகிழ்ச்சியும் புகழும் வந்தடைகின்றது.

145. ஈயாதவர்கள் பணத்தைச் சேர்த்தும் துன்பத்தையும் துயரத்தையும் காண்கிறார்களேயன்றி இன்பத்தை காண்கிறார்கள் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

146. கற்ற கல்வி வித்தைகளை மற்றவனுக்கு புகட்டு. இல்லையெனில் கற்றறிந்தும் விழி இழந்தவனுக்கு சமமே.

147. ஒரு மனிதன் மற்றொரு மனிதனுக்கு கண்ணாடி போன்றவன். முன்னவன் பின்னவனின் குறையைக் கண்டால் அவன் உடனே அதனை அழிக்க வேண்டும்.

148. ஒரு மனிதன் மற்ற மனிதனைப் பற்றி உங்களிடம் அவதூறு கூறினால் அவன் நிச்சயமாக உங்களைப்பற்றி மற்றவர் களிடமும் அவதூறு கூறுவான்.

149. உலோபியின் வாயில் தங்கக் குழம்பால் ஆகிய கடலை ஊற்றிய போதிலும்போதும் நிறுத்து என்று அவன் கூறமாட்டான். இன்னும் வேண்டும்; இன்னும் வேண்டும் என்றுதான் கூறுவான்.

150. தாராள சித்தம் உள்ளவனாக இரு. அப்போதுதான் பிறர் உன்னுடைய எண்ணத்தை தலைமேல் தாங்கி செயலாற்றும் தகுதி உடையவனாய் இருப்பாய்.

151. உன் வீட்டு முற்றம் தண்ணீர் வேட்கையுடன் இருக்கும்பொழுது வெளியே தண்ணீரைக் கொண்டுபோய் ஊற்றாதே.

152. வெற்றி கொள்ளப்படும் துன்பங்கள் நமக்கு பாடம் பயிற்றுவது மட்டுமல்ல, எதிர்காலத்தில் நாம் ஈடுபடும் செயல்களில் நமக்கு ஊக்கம் அளித்து உற்சாகமும் அளிக்கின்றன.

153. வாழ்வில் ஜெயிக்க நண்பன் தேவை. ஆனால்; வாழ்நாள் முழுவதும் ஜெயிக்க எதிரி தேவை. (மகா அலெக்சாந்தர்)

154. புதையல் என்பது பேராசை! உழைப்பு என்பது உயரிய ஆசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

155. நல்லெண்ணத்துடன் தம் சகோதரர்களை பாராட்டாதவர்கள், அவர் செய்த உதவிகளுக்கு நன்றி செலுத்தமாட்டார்கள்.

156. எவ்வித நீண்ட பிரயாணமும் முதல் அடி வைத்ததில் இருந்தே துவங்குகிறது.

157. பணம் நல்ல பணியாளன். ஆனால் அதனையே நம்மீது ஆதிக்கம் செய்ய அனுமதித்துவிட்டால் அது கெட்ட எஜமானாகிவிடும்.

158. நம்முடன் மற்போர் புரிகின்றவன் நம் நரம்புகளை பலப்படுத்துகின்றான். நம் திறமையை கூர்மையாக்குகின்றான்.

159. துன்பங்கள் நம் மனத்தைப் பலப்படுத்துகின்றன. உடல் உழைப்பு உடலைப் பலப்படுத்துவது போன்று.

160. நம் வலிமை நாம் ஈடுகொடுக்கும் எதிர்ப்பின் அளவு விகிதத்தில் இருக்கும்.

161. உங்களின் பாதையில் துன்பங்களிருந்தால் அதற்காக நீங்கள் அவற்றிற்கு நன்றி செலுத்த வேண்டும். அவைதான் உங்களின் ஈடுகொடுக்கும் வலிமையைத் தாங்கும் சக்தியை சோதிக்கின்றன.

162. துன்பம்தான் ஆண், பெண் இருபாலாரின் திறன் மலரும் களம்.

163. இயற்கையானது அருள் நிரம்பியது. அது தன்னுடைய குழந்தைகளை மனிதனாகவோ, விலங்காகவோ இருந்த போதிலும் சரிதான். அவற்றின் ஆற்றலுக்கு அதிகமாக சோதிப்பதில்லை.

164. தேவையும் திறனும் அடுத்தடுத்து உறைகின்றன.

165. பலவீனன் கூடத் துன்பத்துடன் போராடப் போராட பலவானாய் ஆகிவிடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

166. மனிதர்களை உண்டுபண்ணுபவை உதவிகள் அல்ல: தடைகள்தாம்.

167. தோல்வி ஒரு கல்வி. முன்பிருந்ததினும் சிறந்த ஒன்றை நோக்கி எடுத்து வைக்கப்படும் அடியாகும்.

168. தோல்வி ஒருவகைப் பள்ளி. அங்கு எப்போதும் உண்மை வலியுறுத்தப்படுகின்றது.

169. தோல்வியில் படிப்பினைகள் மலிந்து கிடக்கின்றன.

170. முயற்சியில் வெற்றி பெறவேண்டுமாயின் துன்பங்களையும், தடைகளையும், தோல்விகளையும் நாம் வெற்றி கொண்டாக வேண்டும்.

171. கவனத்தை நேராக, ஒரே விசயத்தில் செலுத்தும் திறனே மிக மேலான மேதைத் தன்மையின் மிக நிச்சயமான அடையாளம்.

172. கவனமின்மையால்தான் மனிதர்கள் தோல்வியுறுகிறார் கள்.

173. ஆசிரியர்களின் வேலை சிறுவர்களுக்குப் பயிற்றுவது அன்று; அவர்களுக்குப் படிப்பில் பிரியம் உண்டாக்குவதே.

174. அபாயத்தோடு வாழ். எதற்கும் பயப்படாதே. எல்லாம் சரியாகிவிடும். (வின்ஸ்டன் சேர்ச்சில்)

175. அதிஷ்டமானது மனிதர்களுக்கு மிகவும் அதிக நன்மையைச் செய்ய விரும்பும் பொழுது, அது அவர்களுக்கு பயமுறுத்தும் கண்களுடன் உக்கிரமாய்ப் பாய்கின்றது.

176. என்று நீ ஒரு பெண்ணின் மீது காதல் கொள்கின்றாயோ, அந்த நொடி முதல் நீ மனதால் பலகீனம் அடைகின்றாய். (வில்லியம் சேக்ஸ்பியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

177. ஊழியம் செய்யாதவர்களால் அதிகாரம் செய்யமுடியாது.

178. புன்முறுவலுக்குப் பின் அயோக்கியன் மறைந்து கிடக்கின்றான். (வில்லியம் சேக்ஸ்பியர்)

179. ஒருவன் புன்முறுவல் பூக்கலாம்; ஆனால் அவன் அயோக்கியனாகவும் இருக்கலாம். (வின்ஸ்டன் சேர்ச்சில்)

180. அயோக்கியமான புன்முறுவலைவிட முரட்டுத்தனமான அமைதி மேலானது.

181. எவர் எமக்கு அதிகமான மரியாதை செய்கின்றனரோ, அவர் நம்மிடமிருந்து ஏதோ ஒன்றைக் கேட்டுப் பெறவோ, ஏமாற்றிப் பெறவோ எண்ணியுள்ளனர்.

182. அனுபவம் ஒரு மனிதனுக்கு ஏற்படுவதன்று, தனக்கு அது ஏற்படவேண்டுமென்று அதன் மேல் போய் விழுந்தால்தான் அதுவும் ஏற்படுகின்றது. (அல்டோல் ஹக்கில்)

183. என் பிறப்பால் உலகம் ஏதாவது உயர வேண்டும் என்று நினைப்பவன்தான் உண்மையான ஆக்கவல்ல அறிஞன்.

184. மேதைத் தன்மை என்று அழைக்கத் தகுந்தது ஏதாவது ஒன்று இருக்குமானால் அது விசயத்துள் மனதைப் பதிப்பதுதான்.

185. ஆற்ற இயலாச் செயல்கள் என்று எதுவுமில்லை. ஒரு செயலை ஆற்ற இயலாது தோற்பதற்குக் காரணம் கவனக் குறைவுதான்.

186. ஒவ்வொரு செயலையும் இரண்டு தடவை செய்வதாய் இருந்தால் அதனை நாம் நல்ல முறையில் செய்து முடிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

187. அனுபவம் என்பது அறிவின் தந்தை. ஞாபகசக்தி என்பது அதன் தாய்.

188. ஒருவன் தன்னுடைய அனுபவங்களிலிருந்து அறிவு பெறவில்லை என்றால் அவனைப்போல் முட்டாள் வேறு யாருமில்லை.

189. ஓர் இடத்தில் ஒருவன் தடுக்கி விழுந்தால் அதைப்பற்றிப் பாதகமில்லை, ஆனால் இரண்டாம் முறையும் தடுக்கி விழுவானாயின் அது மன்னிக்க முடியாத குற்றமேயன்றி வேறில்லை.

190. நீண்டநாள் பழக்கங்களை அகற்றுவது என்பதே அரிதேயாகும்.

191. உடைக்க முடியாத அளவு உரம் பெறும் வரையில் உணரமுடியாத அளவு மெல்லியவனாய் இருப்பதே பழக்கமெனும் சங்கிலிகள்.

192. முதலில்தான் நாம் பழக்கங்களை உருவாக்குகின்றோம். பின்னரோ பழக்கங்கள்தாம் நம்மை உருவாக்குகின்றன.

193. சிலரின் எண்ணமோ விண்ணில் பறக்கும்; ஆனால் அவர்களின் இதயமோ சாக்கடையில் கிடக்கும். (இமாம் ரூமி)

194. ஒரு செயல் தொடர்ந்து புரியப்பட்டால் அதுவே பழக்கமாகி விடுகிறது; அந்தப்பழக்கத்தை அனுமதித்துவிட்டோமானால் அது நிதானமாய் உரம் பெறத் தொடங்கிவிடும்.

195. ஒரு கழுதைகூட ஒரே கல்லில் இரண்டு தடவை முட்டிக்கொள்ளாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

196. எவன் அதிக விடாமுயற்சியுள்ளவனோ அவனுக்கே சொந்தமாகும் வெற்றி.

197. சகல வலிமையும் அமைந்த ஒன்று உண்டு என்றால், அது விடாமுயற்சிதான்.

198. மனிதன் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் முயலுங்கள். முயலுங்கள். மீண்டும் மீண்டும் முயலுங்கள்; முதலில் நீங்கள் வெற்றிபெறாவிட்டால் முயலுங்கள்; முயலுங்கள். மீண்டும் மீண்டும் முயலுங்கள்.

199. ஒருவனை மற்றொருவன் முதற் தடவையாக ஏமாற்றி விட்டால் அது ஏமாற்றியவனுக்கு இழிவு. ஆனால், இரண்டாம் தடவையும் அவன் ஏமாற்றப்பட்டால் அது ஏமாற்றப்பட்டவனுக்கு இழிவு.

200. அனுபவம் என்பது உண்மையைச் சோதித்துப்பார்க்கும் உரைகல். அது எப்பொழுதும் மனிதர்களுடைய தத்துவங் களை துகள் துகளாக ஆக்கிக் கொண்டிருக்கிறது.

201. ஒருவன் பொறுப்பை தட்டிக் கழிக்கலாம். ஆனால், அதை தட்டிக் கழித்ததனால் ஏற்பட்ட பலனை அனுபவிப்பதையும் அவனால் தட்டிக்கழித்து தப்பிக்க இயலாது.

202. பொறுமை எனும் நெல்லிக் கனியை தின்ற வாய் முதலில் கசக்கத்தான் செய்யும். பின்பு இனிக்கும்.

203. நம்பிக்கையுள்ளவன் எதையும் துன்பமாகக் கருதமாட்டான்.

204. விடாமுயற்சியாலும், அறிவோடு கூடிய விடாக் கவனத்தாலும் வெல்ல முடியாதது எதுவுமே கிடையாது.

205. பெரும் செயல்கள் பலத்தால் செய்யப்படவில்லை; விடாமுயற்சியால் தான் ஆற்றப்பட்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

206. ஒருமுறை துவங்கப்பட்ட ஒரு செயல் வெல்லப்படாதவரை விடப்படவே கூடாது.

207. பெரும் விளைவுகள் அனைத்துமே உழைப்பாலும் விடா முயற்சியாலுமே விளைந்திருக்கின்றன.

208. மேன்மையான குணம் உள்ளவன் தன்னையே நம்பி வாழ்வான்; அற்பனோ பிறரை நம்பியே வாழக்கூடியவன்.

209. ஒரு நாடு இரும்பை வசப்படுத்தின், அது விரைவில் தங்கத்தையும் வசப்படுத்தி ஆளும்.

210. ஒரு நாடு சமாதானத்தை விரும்புமாயின் அது எப்பொழுதும் சண்டைக்கு தயாரான ஆயுத பலத்துடன் இருக்க வேண்டும். (லத்தீன்)

211. பெரியார்கள் அடியெடுத்து வைக்கப் பயப்படும் இடங்களில் பேதைகள் விரைந்தோடிப் பெருமை அடைந்துவிடுவார்கள்.

212. அதிகமாகச் சிரிக்கும் மனிதன் அவன் மனதில் மிகப் பெரிய காயத்தை வைத்திருப்பான். (சார்லி சாப்லின்)

213. புதிதாக மலர்ந்த ரோசாப்பூ அழகாக இருக்கிறது. பயத்திலிருந்து மலர்ந்த நம்பிக்கை பிரகாசமாயிருக்கிறது.

214. ஒருவனைப் புதைப்பதற்கு குழிதோண்டி தயாராக வைத்திரு. அவன் சாகமாட்டான்.

215. ஒருவன் காதில் நீ இரகசியமாகக் கூறிய வார்த்தைகள் ஆயிரம் மைல்களுக்கு அப்பாலும் கேட்கின்றன.

216. தவறான சிந்தனைகளும் செயல்களும் செய்வது ஒருவனுக்கு கடினமானவையாக ஆகிவிட்டால் அவன் மிக மேலான ஒழுக்கமும் தூய ஆன்மீக அறிவும் அடைந்தவனாய் ஆகிவிடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

217. சிறிய நன்மைகளைப் பெறும் முயற்சியில் பெரிய நன்மைகளை அடையத் தவறியவர்களாகின்றோம்.

218. சரியானதைச் செய்வதைவிட தவறானதைப் புரிவதே எளிதானது என்று கூறப்படுகின்றது.

219. புனிதமுள்ளவனாய் இருப்பதைவிட பாவியாய் இருப்பதே எளிதானது என்றும் சொல்லப்படுகின்றது.

220. தீய செயல்கள் நமக்கே துன்பம் தரும். அவற்றை செய்வது எளிது. நன்மையான நல்ல செயல் என்று எது கருதப்படுகின்றதோ அதனைச் செய்வது மிகவும் கடினம்.

221. உங்களின் நண்பனை தூய உள்ளத்துடன் கண்டிக்க வேண்டும். அவனை அன்புடன் நன்நெறியில் செலுத்த முயல்தல் வேண்டும். அவன் உங்களின் முயற்சிக்கு இணங்காவிடில் அகன்று விடுங்கள். உங்களைப் பழிப்பிற்கு ஆளாகச் செய்து கொள்ள வேண்டாம்.

222. நாம் பாராட்டக்கூடிய, நாம் பார்த்த வியக்கக்கூடிய அரிய செயல்கள் அனைத்தும் விடாமுயற்சி என்னும் எதிர்க்க முடியா வலிமையின் உதாரணங்கள்தாம்.

223. வெற்றிக்கான நிபந்தனைகள் மிகவும் எளிதானவைதாம் அவையாவன, கொஞ்சநேர உழைப்பு, கொஞ்சநேர பொறுமை ஆனால் எப்போதும் நம்பிக்கையோடு இருக்க வேண்டும். முன்வைத்த காலை பின்வைக்கக் கூடாது.

224. சோம்பல் பாவத்தின் தாதி, தீமையின் தாய், சாத்தானின் சகோதரன்.

225. சோம்பல் எல்லாத் தீமைகளின் ஊற்று. உற்பத்தி ஸ்தானம்.

226. சோம்பேறி சாத்தானையே தனக்கு தீமை செய்யுமாறு தூண்டிவிடுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

227. சோம்பல் என்பது பல துயரங்களுக்கும் சேர்த்து இடப்பட்ட கூட்டுப்பெயர்.

228. சோம்பலைவிட துயரத்திற்கு வேறு பெரிய காரணம் எதுவுமே கிடையாது.

229. சோம்பேறித்தனத்தால் விளையும் தீமைகளை விலக்குவதற்கு உழைப்பைப்போல் அவ்வளவு நிச்சயமான பரிகாரம் எதுவுமே கிடையாது.

230. வேகமாக நடந்துசெல். நீ தூரதிஷ்டத்தை பற்றிப்பிடித்துக் கொள்வாய். மெதுவாக நடந்து செல். தூரதிஷ்டம் உன்னைப் பற்றிப்பிடித்துக் கொள்ளும்.

231. அவசர அவசரமாக நடந்து செல்பவன் நல்ல பாதையில் கூட அடிக்கடி தடுக்கிவிழுவான்.

232. அவசரமானது கோபத்தின் ஆரம்பம். அது சுய சிந்தனையில் முடிகிறது.

233. வேளை அறிந்து பேசு. அதுபோல நாளை அறிந்து பிரயாணம் செய்.

234. தனிமரம் தோப்பாகாது. ஆனால் தோப்பாவதற்கு தனிமரம் துணைபுரியும்.

235. நேர்மையான மனிதன் தான் செய்வதைவிட பல விசயங்களைப் பற்றி மிதமான அளவில் பேசுவானேயா னால் அவன் இதயம் துன்பம் துய்க்கும்.

236. பலவீனத்துக்கு வலிமை வழங்குவது விடாமுயற்சிதான். அதுவே வறுமைக்கு உலகின் செல்வத்தையெல்லாம் திறந்துவிடுகிறது.

237. பிறர் உங்களுக்கு எதைச் செய்யக்கூடாது என நீங்கள் கருதுகிறீர்களோ, அதையே நீங்கள் அவர்களுக்கு செய்யாதீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

238. எவர் விடாமுயற்சியுடன் செயலாற்றுகிறார்களோ அவர்கள் வெற்றி முடி அணிவிக்கப்படுவர்.

239. எதிலும் கவனத்தோடு இருப்பவர்கள் வாழ்வில் தவறுகள் செய்வதில்லை.

240. உயிர் வாழும் மனிதனைப் புதைப்பவர்களும் சோம்பேறிகள்.

241. முயற்சி ஆற்றாது முடங்கிக் கிடக்கும். சோம்பல் ஒரு வித தற்கொலைக்கு சமமாகிவிடுகிறது.

242. சோம்பல் உயிர்வாழும் மனிதனின் பலிபீடம்.

243. சோம்பல் துருவைப்போல் மனிதனை அரித்துவிடும்.

244. சோம்பல் எல்லோரையும் வீழ்த்திவிடும்.

245. சோம்பல் ஒருவனை கந்தைகளால் போர்த்தும்.

246. இறப்பதின் திறவுகோலே சோம்பல்தான். எல்லாத் தீமைகளின் மூலமும் அதுதான்.

247. சோம்பல் எவ்வளவு மெதுவாக நடக்கிறதோ, வறுமை அதனை மிக வேகமாக தாண்டிச் சென்றுவிடும்.

248. அடைய விரும்பும் குறிக்கோளை விட, மீறுவதும் குறைவதும் தவறு.

249. மனதில் தோன்றும் எண்ணங்கள் சிலவற்றை ஒதுக்கித் தள்ளுங்கள்! ஏனெனில் எண்ணங்களில் சில தவறானவை. துப்பறியாதீர்கள்! மற்றவர்களைப்பற்றிப் புறம் பேசாதீர்கள்.

250. உண்மையான குரு யாரென்றால் உண்மையை அறிந்தவர்; தன்னை அண்டிய சீடர்களின் நலனுக்காக இடைவிடாது பாடுபடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

251. இதமான பேச்சுக்களை எவன் கேட்கவில்லையோ அவன்தான் உண்மையான செவிடன்.

252. சிக்கனத்தை தன் வாழ்வில் கடைப்பிடிக்காதவன் வருத்தமுறும் நாட்கள் வெகுதொலைவில் இல்லை.

253. இந்தப்பிரபஞ்சம் யாருக்கு வசப்படுமென்றால், பிரியமாகப் பேசக் கற்றுக் கொண்டு தர்மத்தை அனுஸ்டிப்பவனுக்கு. (புத்த பகவான்)

254. விவேகமானவர்களைக் கவர்வது நல்ல கவிதையும் மெய்ஞானமுமாகும்.

255. பயன் யாருக்கு கிடைக்குமென்றால், முயற்சி செய்கின்றவனுக்கே.

256. தன்னையொருவன் நன்குணர்ந்து தன்னடக்கம் கொண்டு அழகு எனும் தத்துவத்தின் சட்டதிட்டங்களுக்கு உட்படும் பொழுதுதான் மனிதன் தன்னுடைய வாழ்வில் நெறி யினைக் காண்கின்றான்.

257. பொருளின் மீதுள்ள பேராசையை விடு. உழைப்பால் அடைந்ததை வைத்துக் கொண்டு திருப்தி அடை.

258. உண்மை உள்ளவர்களுக்கு கவலைகள் இல்லை. அறிவில் சிறந்தவனுக்கு தயக்கம் இல்லை. உள்ளத் துணிவு உள்ளவனுக்கு அகத்தில் அச்சம் இருக்க இடமில்லை.

259. நட்பினால் உருப்பெறும் உரிமைகளையும், கடமை களையும் நீங்கள் தேவையின் அளவுக்கேனும் தெரிந்து கொள்ள வேண்டும்.

260. வெவ்வேறான இரு பாதைகளைப் பின்பற்றிச் செல்கின்றவர்கள் ஒன்று கூடி ஆலோசனை நடத்த முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

261. குப்பை மேட்டில் கீரைகள் கொழுத்து வளர்வது போல், சில இடங்களில் கவர்ச்சியான பிள்ளைகள் பிறந்து வளர்வார்கள். ஆனால் அவர்களிடம் மானம், பண்பு, அறிவு, ஒழுக்கம் போன்றவை இராது. (முகம்மது நபி (ஸல்)

262. கோபம் ஏற்படுவதற்குரிய சூழ்நிலை உருவாகிய பிறகும் ஒருவன் கோபப்படவில்லையென்றால், அவன் கழுதைக்கு நிகரானவன். (இமாம் ஷஆதி)

263. மன்னிப்புக் கேட்ட பிறகும் ஒருவன் மன்னிக்கவில்லை யென்றால் அவன் சாத்தான்.

264. ஒருவன் கூறும் வார்த்தைகளைக் கேட்டு அவனை மதிப்பிட்டு விடக்கூடாது. பண்பட்ட உலகில் பண்பட்ட மனித நெறிகளைக் காண்கின்றோம். பண்படாத உலகில் வெறும் பகட்டான பேச்சுக்களை மட்டும்தான் காணமுடியும்.

265. ஒரு மனிதன் தன் சகோதரனுக்கு இரகசியமாக அறிவுரைகள் கூறினால் கூறியவன் கேட்பவனைக் காப்பாற்றி விட்டான். ஒரு மனிதன் தன் சகோதரனுக்கு நாலு பேர் மத்தியில் வைத்து அறிவுரை கூறினால், கூறுகின்றவனைக் கேட்கின்றவன் அவமானப்படுத்தி விட்டான். (இமாம் சாபீஈ)

266. விரைவாக கோபங்கொண்டு விரைவாக அதனை மறப்பவனே உண்மையான மனிதன்.

267. நண்பர்களை ஓரளவு விரும்புங்கள். ஒருநாள் அவர்கள் உங்களுக்கு பகைவர்களாகக்கூடும். விரோதிகளை அளவுக்குமேல் வெறுத்து விடாதீர்கள். ஒருநாள் அவர்கள் உங்கள் நண்பர்களாகக் கூடும்.

268. உன் நண்பன் உன் பகைவனுக்கு பணிந்து நடந்தால், உன் பகைமையில் அவனும் பங்கு கொண்டவனாகின்றான். (இமாம் சாபீஈ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

269. ஒரு நல்ல புத்தகத்தின் சிறப்பை எழுதிக்கொண்டே போனால் அதற்குக் கடைசிப் பக்கமே கிடையாது.

270. நாய்களின் பிரார்த்தனைகள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டால் வானம் எலும்பு மழைதான் பெய்யும்.

271. பட்டு நூல்களால் வண்ணமான ஆடைகளைப் பெறலாம். பயன்மிகு நூல்களால் திண்ணமான வாழ்வைப் பெறலாம்.

272. மெல்லிய இதயம் நெடுநாள் வாழும்.

273. ஆழமான நதி அமைதியாக ஓடும்.

274. உனது எல்லா நாள்களிலும் தயாராக இரு. எல்லோரையும் சம உணர்வோடு சந்தி. நீ பட்டறைக் கல்லானால் அடிதாங்கு. நீ சுத்தியலானால் அடி. (விஞ்ஞானி அபுல் கலாம்)

275. திறந்திருக்கும் வீடு உள்ளே நுழையுமாறு நாயைத் தூண்டுகின்றது.

276. திறந்து வைத்திருக்கும் கதவு துறவியைக்கூடக் கெடுத்து விடும்

277. விடா முயற்சியின் விரோதி பொறுமை இன்மையே.

278. தண்டனையை ஏற்றுக் கொள்ளுங்கள், பரிசு வரப் போகின்றது. பரிசை ஏற்றுக் கொள்ளுங்கள், தண்டனை வரப்போகின்றது. எது வந்தாலும் அமைதியாக இருங்கள். எதுவுமே வராது.

279. கொய்யாப் பழத்தை அறுக்கும் முன்பே அதற்குள் விதை இருப்பது உனக்குத் தெரிய வேண்டும். ஒருவனுடன் பழகும் முன்பே அவனைப் பற்றி புரிந்து கொண்டு விட வேண்டும்.

280. உன் கொள்கையை யாராவது எதிர்த்தால் அவர்கள்மீது வருந்தாதே. என் வினை என்னை எதிர்க்கின்றது என்று சாந்தி அடைந்துகொள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

281. பிரச்சினை என்று ஒன்று இருந்தால் தீர்வு என்ற ஒன்றும் நிச்சயம் உண்டு.

282. அவசரம் புயல், சூறாவளியைப் போன்றது. அது உடைக்கும்; மோதிச் சிதைக்கும்

283. அறிவற்ற அவசரம் தவறுக்குச் செல்லும் நேரடிப் பாதையாகும்.

284. அவசரத்தைப் போல் அவ்வளவு மோசமானது எதுவுமே கிடையாது.

285. அவசரம் தன் கால்களுக்கு தானே தாழிட்டுக் கொள்கின்றது.

286. அதிக அவசரம் என்பது எப்பொழுதுமே மிக மோசமான வேகம்.

287. அவசரம் பலவீன மனங்களின் அடையாளம்.

288. எவனுடைய மனமும் செயலும் தூய்மையாக இருக்கின் றதோ அவனே தூயவன்.

289. சாமர்த்தியமானவன் யாரென்றால் பெண்களின் நடை யினால் வஞ்சிக்கப்படாதவன்.

290. பயமெனுங் கண்களுடன் நீ வருங்காலத்தைப் பார்க்க வேண்டாம். துணிவே துணை.

291. தீர்மானமின்மை ஓராயிரம் பயங்களை உண்டு பண்ணுகிறது.

292. அவசரத்தை விடவும் கூடிய மிகப்பெரும் தீமை தீர்மானமின்மை ஆகும்.

293. பிடிவாதம் - ஒருவனை, ஒருவனின் வாழ்வை, ஒருவனின் முன்னேற்றத்தை, முடமாக்கிவிடும் - வாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

294. மனிதனின் உண்மையான வரம்பு நிதானமேயாகும். அந்த வரம்பைக் கடந்து நாம் ஒரு தடவை சென்றுவிடின் நம்மைக் காவல் செய்யும் வானவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள்.

295. நிதானம் என்ற எல்லைக்கு அப்பால் செல்லக் கூடிய எதுவும் நிலையற்ற அடித்தளத்தைப் பெற்றிருக்கின்றது.

296. குழந்தை வளர்ப்பு என்பது ஓர் அரும் பெரும் கலை. அதனை அதிகமான பெற்றோர் உணர்வதில்லை.

297. உன்னை தாழ்த்திப் பேசும்போது ஊமையாய் இரு; உயர்த்திப் பேசும் போது செவிடனாய் இரு; வாழ்வில் எளிதில் வெற்றி பெறுவாய். (விவேகானந்தர்)

298. பகைவன் என்று ஒருவனைப் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றாயோ, அவன்தான் பகைவர்களுள் மிகப் பயங்கரமானவன்.

299. மரணத்துக்கு அஞ்ஞாதவர்களே உயிர்வாழத் தகுந்தவர்கள். ஆபத்தும் கஷ்டங்களும் ஏற்பட வேண்டும். அதுவே ஆண் மகனுக்கு அழகு.

300. நீரைக்கூட சல்லடையால் அள்ளிவிடலாம்; அது பனிக் கட்டியாகும் வரை பொறுத்திருந்தால்.

301. தன்னையே தான் புகழ்ந்து கொள்பவன் ஒரு முட்டாள். தன்னையே தான் இகழ்ந்து கொள்பவன் ஒரு பைத்தியக்காரன்.

302. தன்னைத்தானே புகழ்ந்துகொள்பவன் தனக்கே இழப்பை உண்டுபண்ணிக் கொள்கின்றான்.

303. மனிதனுக்கு இறைவன் பேசும் தன்மையைக் கொடுத்ததே அவன் தன்னுடைய மனதிலுள்ள எண்ணத்தை மறைப்ப தற்காகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

304. இறைவன் என்று ஒருவன் இல்லாத போதிலும் அவனைப் படைத்துக்கொள்ள வேண்டியது இன்றியமையாததாகும். (வால்டேயர்)

305. தட்டுகிறவனுக்கு கதவு திறக்கப்படாமலில்லை; மனப்பூர்வமாக இறைஞ்சுதல் ஏற்றுக் கொள்ளப்படாமலுமில்லை.

306. நண்பர்களில் மிகக் கெட்ட நண்பர்கள் யாரென்றால் உங்களை சிரமப்படுத்தி, இக்கட்டான சூழ்நிலையில் சிக்கிக்கொள்ள வைக்கிறவர்கள்தான்.

307. ஏழைகளுக்கு நீங்கள் செலவிட்டால் அது தர்மம்; இனபந்துக் களுக்கு செலவிட்டால் அதில் இரண்டு நன்மைகள் இருக்கின்றன. ஒன்று தர்மம்; மற்றொன்று பந்துக்களுக்கு நீங்கள் காட்டும் ஆதரவு. (நபி முஹம்மது (ஸல்))

308. குருடன் யாரென்றால் படித்திருந்தும் கெட்ட காரியம் செய்பவன்.

309. உண்மை வாசற்படி தாண்டுவதற்குள் பொய் ஊரைச் சுற்றி வந்துவிடும்.

310. அறிவிற்கு இந்த உலகம் எப்போதுமே தன் வணக்கத்தைச் சொல்லும். திறமைக்கு ஆதரவைத் தரும். தூய உள்ளமதை வரவேற்கும்.

311. உன்னுடைய விதி உனக்கு நல்லதாக இல்லாதிருப்பின் வேறு விதியை அமைத்துத் தருமாறு இறைவனிடம் கேள்.

312. தன்னைப் புறக்கணிப்பது போன்று தன்னை விரும்புவது அவ்வளவு பெரிய பிழையல்ல.

313. பிசாசுகள் கூடப் புகழ் மொழிகளைக் கேட்டதும் நல்ல தன்மையுடன் நடந்து கொள்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

314. உனக்கே நீ நல்லவனாயிரு; ஏனென்றால், நீ மனிதன். பிறகு நீ மனிதர்களுக்கெல்லாம் நல்லவனாக இருப்பாய். (சேக்ஸ்பியர்)

315. மனிதனுடைய மனச்சாட்சியே இறைவனுடைய அசரீரியாகும்.

316. துன்பமான சமயங்களில் கோழைகள் தங்களின் கால்களினால் சிந்தனை செய்கிறார்கள். (எமர்ஸன்)

317. நன்றாக முடியக்கூடிய செயல்களெல்லாம் நல்ல செயல்களே.

318. ஒரு செயலின் உச்சி போன்றது அதனுடைய முடிவுதான்.

319. நல்ல மனிதர்கள் மறைந்திருக்கவே விரும்புகிறார்கள். பெரிய மனிதர்கள் பேரையும் புகழையும் பிரபல்யத்தையும் விரும்புகின்றார்கள்.

320. ஒரு மனிதனின் சுய பண்புகளை வெறுத்துவிடு. ஆனால் அம்மனிதனை வெறுக்காதே.

321. உன்னுடன் சமநிலையில் உள்ளவர்களுடன் நீ கேளிக்கை, பரிகாசங்களில் ஈடுபடவேண்டும். அதுவும் ஓர் அளவோடு தான் இருக்க வேண்டும்.

322. யாருடைய மனதையும் புண்படுத்தாதே. சில நகை மொழிகளைக் கூறுவதில் தவறில்லை. சிரிப்பில்லாத பேச்சு உப்பில்லாத உணவு மாதிரி.

323. நீண்ட பட்டம் பதவிகளைப் பெற காலியான தலைதான் ஆசைப்படுகிறது.

324. மதிப்பு என்பது பதவிகளைப் பெற்றிருப்பதைப் பொறுத்தன்று. அவற்றைப் பெற நாம் தகுதியுள்ளவர்களாக இருப்பதைப் பொறுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

325. பகைமை கொண்ட பற்றுக்களை ஆதரிப்பது தர்மங்களில் சிறந்தது.

326. யார் உன் தொடர்பைத் துண்டித்தார்களோ அவர்களை ஆதரித்துக் கொள். யார் உனக்கு கொடுக்க மறுத்தார்களோ அவர்களுக்கு நீ கொடு; யார் உனக்கு தீங்கிழைத்தார்களோ அவர்களை மன்னித்து விடு. (முஹம்மது நபி (ஸல்)

327. மதிக்கத்தகுந்த ஒன்றின் மதிப்பை நாம் உணரும்போது தான் அது நம்முடைய மதிப்புக்குரியதாகிறது.

328. ஒரு மனிதன் தன்னுடைய வாழ்க்கையை தன்னுடைய உடலில் எழுதுகிறான். அவனுடைய உடலமைப்பைக் கண்டு வானவர்கள் அவனுடைய வரலாற்றைத் தீட்டுகின்றார்கள்.

329. கவலையினாலேயே மனிதர்களின் கன்னங்கள், உதடுகள், தாடைகளெல்லாம் தங்களின் கனத்தைத் தாங்க முடியாமல் கீழே இழுக்கப்பட்டுத் தொங்குகின்றன. (சார்ல்ஸ் டார்வின்)

330. வளர்ந்துகொண்டே இரு; இல்லையேல் செத்து மடிந்து போ என்பதுதான் இயற்கை விதிக்கும் இரும்புச் சட்டமாகும்.

331. வறுமை என்பது உள்ளத்தால் உண்டுபண்ணிக் கொள்ளப்படும் ஒரு வகையான நோய்.

332. சிந்தனை செய்யாது படிப்பது பயனற்றது; படிக்காது சிந்தனை செய்வது அபாயகரமானது. (கன்பூசியஸ்)

333. பல புத்தகங்களைப் படிப்பதனால் ஒரு மனிதன் அறிவாளியாகவே இருக்க வேண்டும் என்பது நிச்சயம் இல்லை; சில புத்தகங்களை நல்ல முறையில் படிப்பதே ஒருவனை அறிவாளியாக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

334. நமக்கு விருப்பமானவை கிடைக்கவில்லையே என்று ஏங்குவதற்கு முன்னால், நம்மிடம் இருப்பவற்றுக்கு நாம் தகுதி உள்ளவர்களா என்று சிந்தித்தால் நலம்.

335. அறிஞர்களாக இல்லாமலிருந்து அறிஞர்கள் போலப் பாவனை செய்வதைவிட, அறிஞர்களாக இருந்து அறிஞர்கள் போன்று காணப்படாமல் இருப்பது மேல்.

336. ஒருவன் அடக்கமாக இருப்பின் அவன் பிறவி மூடனாக இருக்க வேண்டும்; அல்லது ஆய்ந்தடங்கிய சான்றோனாக இருக்க வேண்டும்.

337. ஒருவன் அறிவைத் தேடிக் கொண்டிருக்கும் வரையில்தான் அறிவாளி.

338. அறிவுக் கோயிலின் படிகள் நம்முடைய அறியாமையை அறிவதுதான்.

339. கூரிய அறிவுள்ள சாணக்கியனாக இருப்பதைவிட விரிந்த இதயம் படைத்த மகாத்மாவாக விளங்குவது எவ்வளவோ மேலானது.

340. அறிவு என்பது நல்ல ஊழியன்; ஆனால் கெட்ட எஜமான்.

341. உணர்ச்சியை அடக்கி ஆள். இல்லையேல் அது உன்னை அடக்கி ஆள ஆரம்பித்துவிடும்.

342. அளவுக்கு அதிகமான நல்ல தன்மையுடன் விளங்குவது எப்பொழுதுமே அபாயகரமானது.

343. மக்களின் தராதரம் அறிந்து அவர்களுக்கு ஆலோசனை கூறவேண்டும். அறிவற்ற முட்டாள்களுக்கு அறிவுரை வழங்குவதால் இழிவைத் தரும்.

344. அறிவுரைகள் பிறருக்கு அறிவிக்கப்படும் பொருளாகவே இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

345. காய்தல், உலர்தல் அற்ற நடுநிலைமை வகிப்பது பெண்களால் இயலாத செயல்.

346. மனிதர்களுக்கு தனித்தனியான புதைகுழிகள் தேவை போன்று, தனித்தனியான வீடுகளும் தேவை.

347. உறவினர்களுடன் சேர்ந்து உல்லாசமாய்ச் சாப்பிடு; ஒய்யாரமாக விளையாடு. ஆனால் அவர்களுடன் வாணிபம் மட்டும் செய்யாதே.

348. பிரிவிலேதான் ஒற்றுமை இருக்கிறது. ஒற்றுமையிலேதான் பிரிவு இருக்கிறது.

349. நீ ஓர் எஜமானாக இருப்பின் சில சமயங்களில் குருடனாக இரு; ஊழியனாக இருப்பின் சில சமயங்களில் செவிடனாக இரு.

350. நம்பிக்கை உள்ள ஓர் ஊழியன் விலை மதிக்கமுடியாத அணிகலன்.

351. ஒரு ஊழியனைப் பார்த்து அவனுடைய எசமான் எப்படிப்பட்டவன் என்பதை அறிந்து விடலாம்.

352. குதிரையில் ஏறியவன் அதன் கடிவாளத்தைப் பிடிக்கும் தன்மையை அறிந்தே குதிரை செயற்படும்.

353. வாசனைத் திரவியங்களை எவன் அதிகம் பூசிக் கொள்கிறானோ, அவன் உடம்பு இயற்கையாகவே நாற்றம் அடிக்கிறது என்று பொருள். எவன் அளவுக்கு மீறி சுய விளம்பரம் செய்து கொள்கிறானோ அவன் இயற்கை யிலேயே தகுதியற்றவன் என்று பொருள்.

354. பொதுமக்கள் கும்பல் என்பது பல கைகள் உள்ள இராட்சதன். ஆனால் அதற்கு மூளையே கிடையாது. (வின்ஸ்டன் சேர்ச்சில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

355. சுதந்திரம் என்பது புனிதமானது. அதனை எவன் பொன்னுக்கும் பொருளுக்கும் ஆசைப்பட்டு விற்று விடுகின்றானோ அவனுடைய விதி நிரந்தர அடிமைத்தன மாகவே இருக்கும்.

356. தன்னைத்தானே அடக்கி ஆளத்தெரியாதவனை உண்மை யில் சுதந்திரம் உள்ளவனாக ஒரு போதும் கூறமுடியாது.

357. சுதந்திரம் என்பது இறைவனிடம் இருந்து கிடைக்கக் கூடியது. தவறான சுதந்திரங்கள் என்பவை சாத்தானிடம் இருந்து கிடைக்கக்கூடியவை.

358. ஓர் அரசாங்கம் வன்மையுடன் வாழவேண்டுமென்றால் நீதிபதிகள் சட்டத்திற்கு கீழ்ப்படிய வேண்டும். மக்கள் நீதிபதிகளுக்கு அடிபணிய வேண்டும்.

359. கீழ்ப்படிதல் இல்லாத சுதந்திரம் குழப்பம்; சுதந்திரம் இல்லாத கீழ்ப்படிதல் அடிமைத்தனம்.

360. ஒருவன் உயிர்வாழ்வதற்காக உண்ண வேண்டுமேயன்றி உண்பதற்காக உயிர் வாழக்கூடாது.

361. ஒழுங்காக உணவை அளவோடு சாப்பிட்டால் நோயும் இல்லை: மருந்தும் தேவையில்லை.

362. உன்னுடைய பணக்கார நண்பன் உன்னை அழைத்தால் மட்டும் அவன் வீட்டுக்குச் செல்; ஏழை நண்பனிடமிருந்து அழைப்பை எதிர்பார்க்காமலே அவன் வீட்டுக்குச் செல்.

363. பேராசையை விட்டு உன்னைக் காத்துக்கொள்; நீ வள வாழ்வு வாழ்வாய்.

364. ஓர் ஆண்டுக்குள் பணக்காரனாகிவிட வேண்டும் என்று விரும்புபவன் ஆறு மாதத்துக்குள் தூக்கு மேடை ஏறி விடுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

365. கல்வி எங்கு நுழைகிறதோ அங்கு அறியாமை அகல்கிறது.

366. மனமே பதற்றமடையாதே. எல்லாம் மெல்ல மெல்லத்தான் நடக்கும்.

367. சரியான சமயத்தில் உதவி செய்கிறவன் இரு மடங்கு உதவி செய்கிறான்.

368. உழைக்கும் மனிதனின் உறக்கம் மிகவும் இனிமையானது.

369. அடக்கமும் எளிமையும் கல்வியின் சிறப்பு.

370. வாதாட எல்லோருக்கும் தெரியும். ஆனால்; உரையாட ஒரு சிலருக்கு மட்டுமே தெரியும்.

371. நட்பு என்பது சமத்துவம்; அறிவில்லாத கோபம் அசட்டுத் தனம்.

372. எதை சிந்திக்கிறாய் என்பதல்ல: எப்படி சிந்திக்கிறாய் என்பதில்தான் கருத்துக்கள் வெளிவருகின்றன.

373. கயிற்றை வெட்டிவிட்டு முடிச்சுப் போட்டால் அந்த முடிச்சு கண்ணுக்குத் தெரிந்து கொண்டே இருக்கும். ஒருதரம் வந்த பகை மீண்டும் எவ்வளவு நெருங்கிப் பழகினாலும் அந்தப் பகை மனதில் நின்று கொண்டே இருக்கும்.

374. நினைவு அனைத்தையும் காக்கும் அரிய கருவூலம். ஒரு மனிதனுடைய உண்மையான உடமை அவனுடைய நினைவாற்றலே.

375. நினைவே அறிவின் தாய்.

376. நினைவின் குறைவில்லாப் பெரும் சுரங்கத்தில் காலமெல்லாம் திரண்ட எல்லையிலா நிதியங்கள் நிறைந்து ஒளிர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

377. நினைவே அறிவிற்கு அடிப்படை என்றும், அதுவே சொல்லாற்றலின் கருவூலம் என்றும், ஆயத்தம் இல்லாமல் பேசுவோருக்கு அது மிகவும் பயன்படக் கூடியது.

378. ஒரு மனிதனின் மனதில் நிலைத்திருப்பவை அவன் செலுத்திய கவனத்தின் விகிதாசாரத்தில்தான் இருக்கும்.

379. நம்பிக்கை உள்ளவன் நினைவில் தன் உள்ளத்தைப் பதித்து விடுகின்றான்.

380. பாரம்பரிய கௌரவமானது ஒரு குடும்பத்தின் வழித் தோன்றல்களுக்குச் சிறப்புமிக்க மேலான கருவூலமாகும்.

381. கௌரவம் என்பது விலைமதிக்க முடியாத மாணிக்கம்.

382. கௌரவத்தைப் பயன்படுத்திக் கொள்வதைவிடப் பதினாயிரம் முறை இறப்பது மேல்.

383. கௌரவத்தை இழப்பதை விட கண்ணை இழப்பது மேல்.

384. நற்பெயரானது செல்வங்களை விட மேலானது.

385. தன்னுடையவும் தன்னுடைய குடும்பத்துடையவும் நற்பெயர் பற்றி கொஞ்சமேனும் பொருட்படுத்தாதவனைப் பற்றி நீ எச்சரிக்கையாய் இரு.

386. தகுதியானது எதுவோ அது கௌரவமானது; கௌரவமானது எதுவோ அது தகுதியானது.

387. ஒழுக்கக் கோயிலுக்குள் நுழைந்துதான் நாம் கௌரவக் கோயிலை அடைய முடியும்.

388. பெருமையும் தாழ்மையும் பிறரால் வருபவை அல்ல.

389. நல்ல ஒழுக்கத்தைப் பெறுவதில் முதல் படி மற்றவரிடம் காணப்பெறும் நல்லொழுக்கத்தை விரும்புவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

390. நல்லொழுக்கம் என்பது உன்னுடைய எதிரியிடம் காணப்பெறும் நல்ல தன்மைகளைக் கண்டுபிடித்து நீ மேற்கொண்டு விடுவதுதான்.

391. சந்தனக்கட்டையிலிருந்து வரக்கூடிய நறுமணமோ சொற்பமானது; ஆனால் ஒழுக்கசீலனிடமிருந்து எழும்பக் கூடிய நறுமணமோ உயரக்கிளம்பி இறைவனை அடைகிறது. (கௌதம புத்தர்)

392. மனிதர்களிலே மிகவும் மேலான ஒழுக்கமுடையவர்கள் எவரெனில் ஒழுக்கசீலர்களாக இருந்து, தங்களின் ஒழுக்க சீலத்தை வெளிக்குக் காட்டாதிருப்பதில் மனநிறைவு கொள்கிறார்களோ அவர்கள்தாம்.

393. பெறத்தக்க பேறுகளிலெல்லாம் மேலான பேறு ஒழுக்கத்தைப் பெற்றிருப்பதுதான்.

394. ஒழுக்கமிருக்கும் மனிதனிடம் இறவா வரம்பெற்ற பொருள் இருக்கின்றது என்று அர்த்தம்.

395. நம்முடைய வாழ்வோ குறுகியது. ஆனால் அதிக ஊழிக் காலம் வரை நிலைத்திருக்கச் செய்வது ஒழுக்கத்தின் வேலையாகும்.

396. உடல் நலமின்றி ஒருவன் மகிழ்ச்சியாக இருக்க இயலுமாயின், நல்லொழுக்கமின்றி மகிழ்ச்சியாக இருக்கலாம்.

397. குற்றம் செய்தவனின் மூளையானது தேள்களால் நிரம்பப் பெற்றிருக்கின்றது.

398. குற்றம் செய்தவன் ஒருவன் தன்னையே தான் தூக்கிலிட்டுக் கொள்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

399. உன் சொற்களைக் கொண்டே உனது உணர்ச்சிகள் மதிக்கப்படும். உனது உணர்ச்சிகளைக் கொண்டே உனது செயல்கள் மதிக்கப்படும். உன் செயல்களைக் கொண்டே உன் வாழ்க்கை மதிக்கப்படும். (சாக்ரடீஸ்)

400. நல்லொழுக்கத்தைப் பின்பற்றுதல் என்பது போராட்டம் நிகழ்த்துவதே ஆகும்.

401. ஒருவனிடம் தீய இச்சைகள் ஏற்படவில்லையாயின் நல்லொழுக்கம் இல்லை.

402. சிரமமான நல்லொழுக்கத்தைப் பின்பற்றுவதை விட எளிதான தீய வழக்கங்கங்களைப் பின்பற்றுவதையே பெரும்பாலானோர் விரும்புகின்றனர்.

403. இறைவன் என்னுடைய பாவங்களை மன்னிப்பது நிச்சயமாக இருந்த போதிலும், மக்களுடைய கண்களுக்கு என்னுடைய பாவங்கள் தெரியாதிருந்த போதிலும், பாவச் செயல்களின் இழிந்த தன்மையைக் கருதி நான் அதனைச் செய்யமாட்டேன். (பிளேட்டோ)

404. உலகத்து மக்கட்கெல்லாம் ஓதலில் சிறந்தது ஒழுக்க முடைமையே

405. கெட்ட காலத்துடன் போராடின் நமக்குத் திட்டமாக சில காயங்கள் ஏற்படத்தான் செய்யும்.

406. வறுமை ஆயிரம் பேர்களை கொன்றிருக்கிறதேயென்றால் பணம் பத்தாயிரம் பேர்களைக் கொன்றிருக்கிறது.

407. பணத்தின் முக்கிய ஆற்றல் என்னவென்றால் அது நம்முடைய தேவைகளை நிறைவு செய்வதுதான்.

408. போதும் என்ற மனம் படைத்தவன் ஏழையாக இருக்க இயலாது, வேண்டும் என்ற மனம் படைத்தவன் உண்மையான பணக்காரனாக இருக்க இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

409. இயற்கைச் செல்வம் போதும் என்ற மனம்தான்; செயற்கை வறுமை, ஆடம்பரம்.

410. நல்ல நம்பிக்கைக்கு உருவாகும் கருத்துக்கு என்றும் அழிவில்லை.

411. பணம், ஆற்றல், திறமை ஆகியவையெல்லாம் வாழ்க்கைக்குரிய பொருள்களேயன்றி அவையே வாழ்க்கை அல்ல.

412. பணமானது நல்லவர்களின் இதயங்களை விரிவு படுத்துகின்றது, கெட்டவர்களின் இதயங்களை இறுகச் செய்கிறது.

413. பெருமைக்காரனுடைய வழிகாட்டும் மொழி என்னவென் றால் "செல்வத்தை ஈட்டு; அதனை உன் உடலில் அணிந்துகொள்" என்பதாகும்.

414. தாராள நோக்கம் கொண்டவனின் வழிகாட்டும் மொழி என்னவெனில் "செல்வத்தை ஈட்டு; அதைப் பிறருடன் பங்கு வைத்துக்கொள்" என்பதாகும்.

415. உலோபியினுடைய வழிகாட்டும் மொழி என்னவெனில் "செல்வத்தை ஈட்டு; அதனைக் குவித்து வைத்துப்பார்" என்பதாகும்.

416. ஊதாரிச் செலவு செய்பவனின் வழிகாட்டும் மொழி என்னவெனில் "செல்வத்தை ஈட்டு; அதிகம் செலவழி" என்பதாகும்.

417. தரகனுடைய வழிகாட்டும் மொழி என்னவெனில் "செல்வத்தை ஈட்டு; அதனை வட்டிக்குக் கடன் கொடு" என்பதாகும்.

418. சூதாடியின் வழிகாட்டும் மொழி என்னவெனில் "செல்வத்தை ஈட்டு; அதனை இழந்துவிடு" என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

419. அறிவாளியின் வழிகாட்டும் மொழி என்னவெனில் "செல்வத்தை ஈட்டு; அதனைப் பிறருக்கு பயன்படுத்து" என்பதாகும்.

420. வறுமை என்பது இழிவன்று. அதிலிருந்து தப்பியோடாது இருப்பதே இழிவு.

421. வறுமையைப் பொறுத்துக் கொண்டிருப்பது இழிவு. செயலாற்றி அதனை எவ்வாறு விரட்டியடிப்பது என்பதை அறியாதிருப்பது அதைவிடப் பெரும் இழிவாகும்.

422. வறுமையானது அறிவுள்ளவர்கள் பற்றிய வரையில் அவர்களை முன்னுக்குக் கொண்டு வருவதற்கு இறைவனே அவர்களுக்கு செய்யும் மறைமுகமான நன்மையாக இருக்கின்றது.

423. வறுமை தீய செயல்களின் தாய்; அறிவின்மை அவற்றின் தந்தை.

424. பணமில்லாத அறிஞன் ஒருபோதும் திறந்து படிக்கப்படாத புனித நூல் போன்று உள்ளான்.

425. கிழிந்த ஆடைகளுனூடேதான் சிறு சிறு தவறுகளும் நன்கு தெரிகின்றன. பகட்டான பட்டு ஆடைகளுக்குக் கீழே பெருந் தவறுகள்கூட மறைந்து விடுகின்றன. (வில்லியம் சேக்ஸ்பியர்)

426. ஒருவனுக்கு வறுமை ஏற்படின் அவனுடைய நற்பண்புகள் எல்லாம் நசிந்தொழிந்துவிடும். தீய பண்புகள் மிகைத்து விடும்.

427. முதுமையும் வறுமையும் ஒருவனுக்கு இருபெரும் சுமைகளாகும்.

428. காலியான கோணிப்பை நிமிர்ந்து நில்லாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

429. உன்னுடைய பணப்பையையும் வாயையும் எச்சரிக்கையாகத் திற. உன்னுடைய பணமும் புகழும் வளர்ந்தோங்கும்.

430. முட்டாள்களின் இதயமானது அவர்களின் வாயில் இருக்கும் போது. அறிவாளியின் வாயானது அவர்களின் இதயத்தில் இருக்கும்.

431. கால் தவறிவிட்டால் மீண்டும் ஒழுங்காக அடியெடுத்து வைக்கலாம். நா தவறிவிட்டால் மீளமுடியாது.

432. வாய் மூடி அமைதியாக இருப்பது அறிவாளிகளின் ஆபரணம்.

433. நாவைப் பார்த்து மருத்துவர்கள் நோயை அறிந்துகொள்வது போன்று, அறிவாளிகள் ஒருவனின் நாவைப் பார்த்து அவனுடைய மூளையிலும், இதயத்திலும் உள்ளவற்றை அறிந்து கொள்வார்கள்.

434. முட்டாளை மலை உச்சியிலுள்ள மனிதனுக்கு நிகராகக் கூறலாம். அவனுக்கு எல்லோரும் சிறியவராகத்தான் தெரிவார்கள்.

435. தன்னுடைய முட்டாள்தனத்தை உணரும் முட்டாள் அந்த அளவு வரையில் அறிவாளியே.

436. தன்னுடைய அறியாமையை அறியாதவன் இருமடங்கு முட்டாளாவான்.

437. ஆழமில்லாத ஓடையானது சல சல என்று ஒலி செய்து ஓடுவது போன்று எப்பொழுதும் இழித்துக் கொண்டிருப்பவன் தன் மூளை காலியாக இருக்கின்றது என்பதை பறை முழக்குகின்றான்.

438. முட்டாள்களை கடைத்தெருவுக்கு அனுப்பினால் அவர்கள் முட்டாள்களாகவே வீடு திரும்புவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

439. முட்டாள் ஒரு கிணற்றுக்குள்ளே கல்லைத் தூக்கிப்போட்டால் அதனை வெளியே கொண்டு வருவதற்கு நூறு அறிவாளி களின் வேலை தேவையாக இருக்கின்றது.

440. முட்டாள்களின் உதவியானது துன்பத்தையே கொண்டு வரும்.

441. முட்டாள்களுடன் பிரயாணம் செய்வதைவிட தனிவழி செல்வது நன்று.

442. முட்டாள்களுடன் சுவர்க்கத்தில் இருப்பதைவிட அறிவாளி களுடன் நரகத்தில் இருப்பது மேல்.

443. பெருமைக்கும் ஏனைய சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்.

444. அறிவாளிகளின் ஒருநாள் வாழ்க்கையும் சரி, முட்டாள்களின் வாழ்நாள் முழுவதும் சரியாகும்.

445. உண்மையான அறிவானது என்னவெனில் அறிய வேண்டியதை அறிவதும், செய்யத் தகுந்தவற்றை செய்வதும் ஆகும்.

446. ஒருவனின் உள்ளத்தை அவன் கூறாமலே விளங்கிக் கொள்ளும் ஆற்றல் உள்ளவர்களே உண்மையான அறிவாளிகளாவர்.

447. வருமுன்னர் தன்னைக் காத்துக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை நெருப்பின் முன் நிமிர்ந்து நிற்கும் வைக்கோல் போர் போன்று அழிந்தொழியும்.

448. நன்றாகவும் எச்சரிக்கையுடனும் செய்யப்பட்ட செயல்கள் அச்சத்தை விட்டும் தங்களைக் காத்துக் கொள்கின்றன.

449. காலந்தாழ்த்திச் செய்யக்கூடியவற்றை காலந்தாழ்த்தியே செய்ய வேண்டும். காலந்தாழ்த்தாது செய்யக்கூடியவற்றை காலந்தாழ்த்தாது செய்ய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

450. நாளை என்ற மொழியைக் காலத்தின் பதிவேட்டில் காணமுடியாது. முட்டாள்களின் நாட்குறிப்பிபேட்டில்தான் காணலாம்.

451. இளமை என்பது ஒருவகைப் போதை. அதாவது அறிவின் காய்ச்சல்.

452. வயதின் மூலமாகவும், அனுபவத்தின் மூலமாகவும் போதிய அறிவு பெறாதவனை வாழ்க்கையில் தேர்ச்சி பெற்றவன் என்று கூறமுடியாது.

453. அனுபவம் என்பது அதிகமான விலை கொடுத்து வாங்கப்பட்ட ஓர் ஆபரணம்.

454. அனுபவம் என்பது அதிகமான விலை பெற்றிருந்தபோதிலும் அதைப்போல் ஆசிரியன் யாருமில்லை.

455. அனுபவமானது முட்டாள்களைக்கூட அறிவாளியாக்குகிறது. ஆனால் அறிவாளிகளைக்கூட முட்டாளாக்குகிறது.

456. உலகத்தின் போக்கு என்னவென்றால் சட்டம் என்று ஒன்றை இயற்றிவிட்டு பழமையான பழக்கவழக்கங்களை பின்பற்றுவதுதான்.

457. பழமை வழக்கம் நம்மைத் தன்னுடைய அடிவருடித் தொண்டனாக ஆக்குகின்றது.

458. நீண்ட நாள் பழக்கவழக்கங்கள் சட்டமாக மாறிவிடுகின்றன. இந்தப் பழமை வழக்கங்கள் மனித இனத்தின் எண்ண உரிமைகள்.

459. அறியாமையயானது பாராட்டப்படும் இடத்தில் அறிவுடன் வாழ்வது தவறு.

460. அறியாமை என்பது மூளையின் நோய்; மூளையின் இரவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

461. ஒரு தவறானது நூறு ஆண்டுகளாக இவ்வுலகில் நிலவி வந்த போதினும் அல்லது பன்னூறு ஆண்டுகளாக இவ்வுலகில் பவனி வந்த போதினும் சரியே, தவறு தவறுதான்.

462. அறியாமையானது இறைவனின் சாபக்கேடு. அறிவானது விண்ணை நோக்கி நாம் பறக்கக்கூடிய சிறகுகளாகும்.

463. நேர்மையானதுதான் வன்மையானது என்று நாம் திட்டமாக நம்பி, அந்த நம்பிக்கையுடன் இறுதிவரை தமது கடமையைச் செய்வோம்.

464. எல்லோரையும் திருப்திப்படுத்தக் கூடிய மனிதன் இன்னும் பிறக்கவில்லை.

465. எல்லோரையும் மகிழ்விக்க முனைகின்றவன் ஒரு முட்டாள்.

466. நீ பனிக்கட்டி போன்று தூய்மையாகவும், பனி போன்று துப்பரவாகவும் இருந்த போதிலும் சரிதான்; நீ அவதூறுகளிலிருந்தும் தப்ப இயலாது. (வில்லியம் சேக்ஸ்பியர்)

467. அவதூறினுடைய நுனியானது வாளைவிடக் கூர்மை ஆனது.

468. காலியான மூளையும் உளறும் நாவும் கைகோர்த்துச் செல்கின்றன.

469. நற்செயல் மணிக்கு ஒரு மைல் வேகத்தில் பரவுகிறதென்றால், அவதூறானது மணிக்கு பத்து மைல் வேகத்தில் பரவும்.

470. கொடிய பிராணிகளில் கொடியது அவதூறு கூறுகிறவன், மென்மையான பிராணிகளில் கொடியது புகழுகின்றவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

471. ஒருவன் உன்னைப்பற்றி அவதூறு கூறுவானாயின் அவன் கூறுவது சரியா அல்லது தவறா என்று உன் மனச்சான்றைக் கேள்.

472. அவதூறு ஒரு பொதுவான தீமை

473. ஓர் அவதூறு எவ்வளவுக்கெவ்வளவு தவறானதாகவும் நம்ப முடியாததாகவும் இருக்கின்றதோ. அவ்வளவுக்கவ்வளவு விரைவாகவும் பரவும்.

474. அவதூறைப் போன்று வேகமாகப் பரவக்கூடியது வேறொன் றுமில்லை. அதைப் போன்று எளிதாகக் கூறக் கூடியதும் வேறொன்றுமில்லை.

475. ஒரு மனிதனைப் பற்றி அவதூறு கிளப்பி விடுகின்றவனும், அந்த அவதூறுகளை எடுத்துரைப்பவனும், அவற்றைக் கேட்பவனும் மனித இனம் முழுவதாலும் வெறுக்கப்பட வேண்டியவனாவான்.

476. இறைவன் ஒரு இனத்தை தண்டிக்க விரும்புகின்றபொழுது அவ்வினத்தின் அதிபதிகளுக்கு அறிவைக் குறைத்து விடுகின்றான்.

477. நல்ல தன்மை என்பது நாம் வெளியில் செய்யும் செயல்களைப் பொறுத்து இருக்கவில்லை; நாம் உள்ளே எவ்விதம் இருக்கின்றோமோ அதைப் பொறுத்திருக்கின்றது.

478. நாம் வாழ்ந்து சென்ற வாழ்க்கையை இன்பக் கண்களால் பார்த்து மகிழ்வெய்வது இரட்டிப்பு வாழ்க்கை வாழ்ந்தது போன்ற செயலாகும்.

479. ஒரு நல்ல மனிதனின் வாழ்வின் மேலான பகுதி என்னவெனில் அவனுடைய சிறிய, பெயரற்ற மறக்கப்படக் கூடிய அன்புச் செயல்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

480. இயற்கையானது மிகவும் மெல்லிய திரையாகும். நீக்கமற நிறைந்திருக்கின்ற பரம்பொருள் அதிலே எங்கனும் பிதுங்கிக் கொண்டு தோற்றமளிக்கின்றது.

481. இயற்கை என்றால் என்ன? ஓர் ஆற்றலின் பெயர்; அந்த ஆற்றலின் கர்த்தா இறைவன்.

482. இயற்கையின் அடையாளங்கள் அறிவாளிகளுக்கு மட்டும் இறைவனைக் காட்டுகிறது. முட்டாள்களுக்கு அவனைக் காட்டாது மறைந்துவிடுகின்றது.

483. இறைவனால் படைக்கப்பட்ட இயற்கைப் பொருட்களைப் பற்றிச் சிந்திப்போமாயின் நாம் இறைவனை நோக்கி முன்னேறிச் செல்வோம்.

484. நீ எச்செயலை ஆற்றும் போதும் இறைவன் உன்னைப் பார்த்துக் கொண்டுள்ளான் என்று எண்ணிக் கொள்வாயாக.

485. இறைவன் நம்மைவிட்டும் வெகு தூரத்தில் இருந்த போதிலும், பிரார்த்தனையானது அவனை பூமிக்கு இழுத்து வந்து நம் முயற்சியோடு அவனுடைய பேராற்றலையும் ஒன்றுசேர்த்து இருக்கின்றது.

486. நம்முடைய ஆன்மாவை விண்ணிற்கேற்றிச் செல்லும் இறக்கைகள்தாம் இறைஞ்சுதல்.

487. தியானம் என்பது இறைவனைப் பார்க்கக்கூடிய கண்களாகும்.

488. இறைஞ்சுதலும் தியானமும் இதயமில்லாத மொழிகளை மட்டும் பெற்றிருப்பதை விட, மொழிகளில்லாது இதயத்தை மட்டும் பெற்றிருப்பது எவ்வளவோ மேலானதாகும்.

489. இறைவனை இதயத்தில் முழுமையாகக் கொண்டவனுக்கு சொர்க்கம், நரகம், செல்வம், வறுமை இரண்டாம் பட்ச வெறுமையானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

490. இறைவன் இல்லை என்று கூறுவதானது அறிவின் குற்றம் மட்டுமன்று; அஃது ஆன்மாவின் நோயுமாகும்.

491. எது முதலில் வரும்; எதனை முதலில் செய்வது என்பதைத் தெரிவதே அறிவாகும்.

492. ஓர் ஒழுங்கான வாழ்வுக்கு முதலாவது தேவை சரியான விதிகள்தாம்.

493. நேர்மை என்பது பிறரை ஏமாற்றாமலிருப்பதும், பிறரிட மிருந்து பெறவேண்டியதற்கு மேல் பெறாமல் இருப்பதும் ஆகும்.

494. நேர்மை அதிகமாகப் புகழுவதையும் பொய்யாகப் பாராட்டு வதையும் இகழுகிறது.

495. சிக்கனம் எனும்போது உடல் உருவத்தையும் மன வலிமையையும் சிக்கனமாகச் செலவு செய்வதையும் குறிக்கும்.

496. தாராளம் சிக்கனத்தை தொடர்கிறது. அது சிக்கனத்துக்கு எதிரானதல்ல. சிக்கனம் உள்ள மனிதன் மட்டுமே தாராளத் தன்மையுடன் இருக்க முடியும்.

497. தன் சொந்த சுதந்திரத்திற்காக பணத்தையோ உடல் உருவத்தையோ மன வலிமையையோ வீணடிப்பவனிடம் பிறருக்கு வழங்குவதற்கு என்று எதுவுமே இருக்காது.

498. வெற்றியின் முக்கால் பாகம் ஒழுங்கு முறைதான்.

499. கவனமில்லாமல் எண்ணி, அவசரமாக செயலாற்றி, ஒழுங்கீனமானவனாய் வாழும் மனிதன் ஆபத்தான மூடன்.

500. தவறான செயலைத் தள்ளி உண்மையான செயலைச் செய்ய வேண்டுமாயின் தவறானவற்றிலிருந்து சரியானவற் றைப் பிரித்தறிய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

501. தீயவற்றைத் தள்ளுவதே நல்லவற்றை அறிவதாகும்.

502. சரியான செயல்களைப் புரிபவன் பிறருக்கு அச்சம், வேதனை, இடர் தரத்தக்க செயல்களைச் செய்யமாட்டான்.

503. நல்ல மனிதன் உயிர் கொல்லும் நஞ்சை வெறுத்து ஒதுக்குவதைப்போல் தந்திரம் புரிதல், ஏமாற்றுதல், நயவஞ்சகம் செய்தல் இவற்றை வெறுத்து விலக்குவான்.

504. உங்களின் தலைவிதி என்பது உங்களின் சுயசரிதையே அன்றி, வேறொன்றுமில்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

505. யோசனையுடமை என்பது, செயல் உலகில் மிகவும் முக்கியமான ஒன்றாகும்.

506. யோசனையுடன் இருந்து கொண்டே மூடத்தன்மையாய்ச் செயல் புரிய ஒரு மனிதனால் இயலாது.

507. உண்மையான செயல்களை உண்மையான மனத்தவரால் தான் செய்ய இயலும்.

508. உண்மையை ஒழுகுவதைக் கொண்டுதான் உணர்ந்து கொள்ள முடியும். விசுவாசமில்லாவிட்டால் உண்மை பற்றிய அறிவே உலகில் இருப்பது அரிது.

509. எல்லா விசுவாசத்திற்கும் துலக்கம் உண்மையான பேச்சுத்தான்.

510. உயர்ந்த விடயங்களைப் படிக்க விரும்பும் ஒருவன் மூளையில் தன்னைக் கவனித்துக் கொள்ளட்டும்.

511. பொய் புகல்வதும், தீயவை பேசுவதும் மிகவும் கீழான ஆன்மீக அறியாமையைச் சேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

512. அவதூறு ஒரு பொதுவான தீமை: அது இருள் நிரம்பியது. மிகவும் கொடியது. அவதூறு தொடங்குவது அறியாமை யிலிருந்துதான்.

513. மதிக்கத்தக்கவராய் கருதி வந்தவரை, ஒரு கணத்தில் தவறாய் கருதச்செய்வதும், நாம் கேட்கும் அவதூறாகும்.

514. ஒருவன் பேசும் சொற்களைக் கொண்டுதான் அவன் எத்தகையவன் என்று இறுதியாக, நிச்சயமாக நிர்ணயிக்கப் படுகின்றது.

515. சொற்களைக் கொண்டே நீங்கள் நல்லவர்கள் என்று நிரூபிக்கப்படுவீர். அல்லது தீயவர் என்று குற்றம் சாட்டப் படும்.

516. சமமான நிலையுடன் இருப்பதென்பது அமைதியான மனத்துடன் இருப்பது எனக் குறிக்கும்.

517. அறிவாளி உணர்ச்சி வயப்படமாட்டான். அவன் விருப்பு, வெறுப்பு இல்லாமல் அமைதியுடன் எல்லாவற்றையும் கவனிப்பான்.

518. சம மனநிலையுள்ள மனிதன் தன் மனத்தில் உணர்ச்சி, வெறுப்பு இவற்றின் சாயல்கூட ஏற்படாதவாறு பார்த்துக் கொள்வான்.

519. சம மனநிலையுள்ள மனிதனின் நாட்கள் இனிமையான வையாயிருக்கும்.

520. விதைப்பதைத்தான் நாம் அறுக்கிறோம். தாமே தேர்ந்தெடுக் காமல் வரக்கூடியவற்றிக்கும் நாமேதான் காரணமாவோம்.

521. உள்ளத்தைத் தூய்மைப்படுத்தினால் வெளியுலகக் கவலை நின்றுவிடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

522. உன் உள்ளேதான் மீட்சியைத் தேடவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தன் சிறையைத் தானே உண்டு பண்ணிக் கொள்கின்றான்.

523. எண்ணங்களின் பிரகாரம்தான் நம் வாழ்க்கையானது நல்லதாய் இருக்கிறது; அல்லது கெட்டதாய் இருக்கிறது.

524. வாழ்க்கை அனைத்துமே காரணங்களைக் கொண்டும், காரியங்களைக் கொண்டும் பூரணமாய் நெய்யப்பட்டவை ஆகும்.

525. உள்ளம் எப்படியோ அப்படித்தான் வாழ்க்கையும், உள்ளம் உள்ளே இருப்பது; வாழ்க்கை வெளிப்படுவது. உள்ளே உள்ளது வெளிப்படத்தான் செய்யும்.

526. மறைந்திருக்கும் ஊற்றிலிருந்து எழும் ஓடையைப் போல் மனிதனுடைய வாழ்க்கையானது அவனுடைய இதயத்தின் இரகசிய பாகங்களிலிருந்து கிளம்புகிறது.

527. மனிதன்தான் அவன் இதயத்தின் காவலாளி; அவனைக் காப்பவனும் அவன்தான்; பாதுகாப்பவனும் அவனேதான்.

528. வாழக்கையின் சகலமும் மனத்திலிருந்துதான் புறப்படுகின்றன.

529. மனத்தை விதியைப் பிழையாது நெய்யும் நெசவாளி என்றால், எண்ணத்தை நூல் என்று கூறலாம்.

530. வாழ்வின் தறியில் நெய்யப்படும் துணிக்குத்தான் ஒழுக்கம் என்று பெயர். மனம் தான், நெய்த ஆடையைத் தானே அணிந்து கொள்கிறது.

531. பராக்கிரமத்தின் நல்ல பகுதி சமயோசிதமே. (வில்லியம் சேக்ஸ்பியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

532. தனக்கான நிலைமைகளை உண்டுபண்ணிக் கொள்ளும் திறன் மனத்திலே இருக்கிறது.

533. மனமானது தான் உறையக்கூடிய நிலைமைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் தன்மை உடையது.

534. பழக்கம். பலவீனம் ஆகிய தளைகளை நாம்தான் உண்டுபண்னிக் கொள்கின்றோம். அவற்றை நாம் நினைத்தால் அகற்றிவிட முடியும். அவை வேறு எங்கும் இருப்பதில்லை. அவை நம் மனத்தில்தான் இருக்கின்றன.

535. தீமையின் பிறப்பிடம் உட்புறம்தான். ஆனால் அதனை விட்டுவிட்டு வெளிப்புறத்தை பழிப்பது துன்பத்தையும் அமைதியின்மையையும் குறைக்காது; பெருக்கும்.

536. எல்லா வளர்ச்சியும் வாழ்க்கையும் உள்ளிருந்து வெளிப்படுவதுதான். அதாவது நம் வளர்ச்சிக்கும் வாழ்க்கைக்கும் பிரதான காரணம் உள்ளம்தான்.

537. ஒரு மனிதனின் வாழ்க்கை அவன் இதயத்தில் இருந்தும் உள் நோக்கத்திலிருந்தும் உண்டாகிறது. அவன் தன் எண்ணங்களாலும் செயல்களாலும் தன் மனத்தை இணக்குவித்திருக்கின்றான்.

538. சிறந்த எண்ணங்களைத் தேர்ந்து மனத்தை மாறுதல் செய்வது விவேகமுள்ள மனிதனின் சக்திக்குட்பட்டவை ஆகும்.

539. மன நிலைகளே பழக்கங்களாக அமைந்துவிடுகின்றன. ஒரு குறிப்பிட்ட எண்ணத்தை இடையறாமல் திரும்பத் திரும்ப எண்ணும்போதுதான் பழக்கம் உண்டாகிவிடுகிறது.

540. ஓர் எண்ணத்தை இடையறாமல் திரும்பத் திரும்ப எண்ணினோமானால் அது இறுதியில் மனத்தின் நிலையான ஒரு பழக்கமாக ஆகிவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

541. மனிதன் இயல்பாகும் தன் அனுபவங்களை திரும்பத் திரும்ப செய்வதனால் அறிவு பெறுகிறான்.

542. ஓர் எண்ணத்தை மனத்தில் பிடித்து வைத்திருப்பதற்கும். சிந்திப்பதற்கும் முதலில் கடினமாகத்தான் இருக்கும். ஆனால், தொடர்ந்து அதனை மனதில் வைத்திருப்போமாயின் அதுவே ஒரு பழக்கமாக ஆகிவிடுகிறது.

543. தன் பழக்கங்களை தன் நிலைகளை அமைக்கவும், திருப்பி அமைக்கவும் இயலும். மனத்தின் வலிமையால்தான் மனிதனின் விமோசனத்திற்கான அடிப்படையே அமைந்திருக்கின்றது.

544. மனிதன் அகத்தை வென்று பூரண விடுதலை பெறுவதற்கான திறந்த கதவும் மனத்தின் மாளிகையில்தான் உண்டு.

545. சரியானதைச் செய்வதைவிடத் தவறானதைப் புரிவதே எளிதானது.

546. புனிதமுள்ளவனாய் இருப்பதை விடப் பாவியாய் இருப்பதே எளிதானது.

547. வரட்சியடையும் வெற்றியைவிட. வளர்ச்சியடையும் மாறுதல் மேலான மகிழ்ச்சியைத் தரும்.

548. மனிதர்களுக்கு பாவம் செய்வது எளிதானது; இயல்பானது. அதற்கு காரணம் என்ன? திரும்பத் திரும்ப செய்வதன் மூலம் பாதகம் பகைக்கக்கூடிய அறிவற்ற சிந்தனைப் பழக்கங்களை அமைத்துக் கொண்டு விடுவதுதான்.

549. வாழ்வானது முற்றிலும் மனத்திலிருந்தே அமைகிறது. மனமானது பழக்கவழக்கங்களின் கூட்டாகும்.

550. பழக்கங்களை மனிதன் விரும்பினால் பொறுமையான முயற்சியின் மூலம், எந்த அளவிற்கும் திருத்திக் கொள்ள முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

551. வாழ்க்கையின் தீமைகள் என்றால் என்ன? அவை மனத்தால் விளையும் தீமைகள்தாம்.

552. மேலான வாழ்க்கை என்பது சிந்தனை, சொல், செயலில் மேலான வாழ்க்கை வாழ்வதாகும்.

553. பெரியதை அறியுமுன் சிறியதை முற்றிலும் புரிந்து தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

554. ஒழுக்கத்தின் பாதை அறிவின் பாதையாகும்.

555. உண்மையின் விதிகளை அறிவதற்கு முன் அடிப்படைகளில் பூரணத்துவம் அடைந்துவிட வேண்டும்.

556. மன ஒழுங்கின் முதல்படி சோம்பலை வெற்றி கொள்வது தான், இதுவே மனத்தை ஒழுங்குபடுத்துவதற்குள்ள எளிதான படி.

557. உண்மையிலேயே பாதையிலிருக்கும் மிகப்பெரும் தடை சோம்பல் ஒன்றேதான்.

558. மனமாறுதல் அவசியம் என்பதை மனிதன் மனத்தில் நன்கு உறுதிப்படுத்த வேண்டும்.

559. ஒருவன் உடம்பை நல்ல முறையில் கட்டுப்படுத்தி உறுதியாக வழிநடத்திச் செல்கின்றான். எதனைச் செய்ய வேண்டுமோ அதனைத் தீவிரமாகச் செய்கின்றான்.

560. சரியான வாழ்வு வாழ வேண்டுமென்று குறிக்கோளைக் கொண்டவன் அவதூறான சொல் உதட்டைவிட்டு வெளியேறு முன் தடுத்து விடுவான்.

561. ஒழுக்கமுள்ள உத்தமன் கண்ணியத்தோடு பேசுவான். இறந்தவர்களைப் பற்றி அவன் நல்லதையே சொல்வான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

562. மகிழ்ச்சியின்மைக்குக் காரணம் தவறான மனநிலைதான், மகிழ்ச்சி ஒழுங்கான மனநிலையில்தான் உண்டாகிறது.

563. வாழ்க்கை என்பது பாடங்களின் தொடர்பாகும். சிலர் அதனைப் பயில்வதில் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.

564. உண்மையைப் பயிலுபவர்களே ஒழுக்கத்தை விரும்புவார்கள்.

565. உண்மையை ஒழுங்கு முறையைக் கொண்டு மட்டும்தான் அடைய முடியும்.

566. ஒழுங்கு முறையானது பொறுமையற்றவனுக்கும் தன்னை மட்டுமே நேசிப்பவனுக்கும் சங்கடமாகத்தான் இருக்கும்.

567. உண்மையைத் தேடி அலைபவனுக்கு ஒழுங்கு முறையானது ஒருபோதும் சங்கடமாயிராது.

568. ஓர் ஒழுங்கு முறையில்லாமல் வாழ்பவன் கவலையிலிருந்தும், வேதனையிலிருந்தும் தப்பவே முடியாது.

569. குறைகூறி வளர்க்கப்படும் குழந்தை பிறரை வெறுக்கக் கற்றுக் கொள்கிறது.

570. அடக்கி வளர்க்கப்படும் குழந்தை சண்டையிடக் கற்றுக் கொள்கிறது.

571. கேலி செய்யப்படும் குழந்தை வெட்கத்தோடு வாழக் கற்றுக் கொள்கிறது.

572. அவமானப்படுத்தப்படும் குழந்தை குற்றவாளியாகிறது.

573. சகிப்புத் தன்மையோடு வளரும் குழந்தை பொறுமையைக் கடைப்பிடிக்கிறது.

574. ஊக்குவிக்கப்படும் குழந்தை மனதில் திண்மை பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

575. புகழப்படும் குழந்தை பிறரைப் நேசிக்கக் கற்றுக் கொள்கிறது.

576. நேர்மையோடு வளரும் குழந்தை நியாயத்தைக் கற்றுக்கொள்கிறது.

577. பாதுகாக்கப்படும் குழந்தை நம்பிக்கை பெறுகிறது.

578. நட்போடு வளரும் குழந்தை உலகோடு நட்புக்கொள்ள கற்றுக் கொள்கிறது.

579. இன்ப துன்பங்களின் காரணம் அவன் அவனே ஆவான். அவன் தான் தன்னுடைய இன்ப துன்பங்களை உண்டுப ண்ணவும் நிலை நிறுத்தவும் செய்கிறான்.

580. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய எண்ணங்களினால் வரையப்பட்டுள்ளான்.

581. மனித இனத்தில் இயற்கையாகவே படித்தரங்கள் இருக்கின்றனவே, அவையெல்லாம் எண்ணங்களையும் அந்த எண்ணங்களின் பிரதிபலிப்பாகிய ஒழுக்கங்களையும் சேர்ந்தவையே.

582. பழிக்கஞ்சாப் பாதகன் தன்னைப் போன்ற பாதகனின் சூழலில்தான் வாழ்கிறான்.

583. மகான்கள் தெய்வீக இசையில் மூழ்கித் திளைக்கும் தன் சகோதரர்களுடன் வாழ்கிறார்கள்.

584. மனிதர்கள் கண்ணாடிக்கு நிகரானவர்கள். அவர்கள் தங்களை ஒழுங்காகப் பிரதிபலிக்கக்கூடிய கண்ணாடியில் தான் தங்களின் முகத்தைப் பார்க்கிறார்கள்.

585. ஒவ்வொரு மனிதனும் தன் எண்ண வளையம் குறுகலா கவோ, விசாலமாகவோ இருந்தபோதிலும் சரிதான் அதற்குள்ளேதான் வாழ்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

586. எவ்வாறு பள்ளி மாணவர்கள் தங்களின் அறிவு அல்லது அறியாமைக்கிணங்க தங்களுக்கேற்ற வகுப்புகளில் அமர்கிறார்களோ, அதேபோன்றுதான் மனிதர்கள் தங்களின் எண்ணத்துக்கேற்ற வாழ்வைப் பெறுகின் றார்கள்.

587. மனிதனுக்கு அவனுடைய மனமாகிய உலகத்துக்குள்ளே அதனைத் தூய்மைப்படுத்தவும் பரிபூணப்படுத்தவுமான எல்லா ஆற்றல்களும் இருக்கின்றன.

588. எந்தச் செயலும் தன்னந்தனியாய் இருப்பதில்லை; நாம் செய்யும் மிக மிக இரகசியமான செயல்களும் நம்முடைய கட்புலனுக்கு தெரியா வண்ணம் பதியப்படுகின்றன.

589. மனிதனின் ஒவ்வோர் எண்ணமும், செயலும் வாழ்க்கைப் பெருநூல் ஒன்றில் எழுதப்பட்டுத் தீர்மானிக்கப்படுகின்றது.

590. நாம் நம்முடைய நண்பர்களைப் பற்றியும், கருத்துக்களைப் பற்றியும் செல்வாக்குப் பற்றியும் பயந்தோமானால் நாம் பதற்றப்பட்டுள்ளோம்; அடிமைப்பட்டுள்ளோம் என்றுதான் அர்த்தம்.

591. மனிதன் பழக்க வழக்கங்களுக்கு அடிமைப்பட்டவனாக உள்ளான்.

592. உண்மையாகவே மனிதன் பழக்கவழக்கங்களான ஓர் உயிர்ப் பிராணியாக உள்ளான்.

593. மனிதன் இலட்சோபலட்சம் எண்ணங்களின் செயல்களின் உருவேயாவான்.

594. மற்றவர்கள் உங்களிடம் எப்படிப் பழக வேண்டும் என எதிர்பார்க்கிறீர்களோ, அப்படித்தான் மற்றவர்களிடமும் நீங்கள் பழக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

595. எல்லா மனிதர்களும் தங்களின் பழக்கவழக்கங்கள் நல்லவையாக இருந்த போதிலும் சரி அவற்றிற்கு அடிபணிந்தே ஒழுகுகின்றார்கள்.

596. ஒருவன் எவ்வளவு தீய பழக்கத்தைக் கொண்ட போதிலும், அவன் அறிவைப் பெறுவானாக இருந்தால் பிறகு தீயவற்றிலிருந்து அவன் விலகிவிடுவான்.

597. ஒருவன் தனக்குத்தானே உண்டுபண்ணிக் கொண்ட தீய பழக்க வழக்கங்களையும், பண்புகளையும் அவன் விரும் பின் உடைத் தெறியவோ, திருத்தியமைக்கவோ முடியும்.

598. மனிதனை அவனுடைய தீய எண்ணங்களே அடிமைப்படுத்துகின்றனவேயன்றி வேறு எந்த ஆற்றலும் அவனை அடிமைப்படுத்தவில்லை.

599. உடலானது மனிதனின் பிரதிவிம்பமே ஆகும். அதிலே நம் உள்ளத்தில் மறைந்து கிடக்கும் எண்ணங்களின் அடையா ளங்களையும் சாயல்களையும் பார்க்கலாம்.

600. மனிதனின் எண்ணத் தூய்மையும் அவனுடைய ஒழுக்க உயர்வும் அவனுக்கு உடல் நலத்தை உண்டுபன்னுவதில் பெரிதும் உதவி செய்கின்றன.

601. மன நலன்களை நாம் திடீரென அடைந்து விடாவிட்டாலும் அவற்றை நோக்கியாவது நாம் அடியெடுத்து வைத்துச் செல்ல வேண்டும்.

602. உள்ளம் வன்மை வாய்ந்ததாக இருக்குமாயின் உடல்நிலை உள்ளத்துக்கு கீழ்ப்பட்ட இரண்டாந்தர இடத்தை அடைந்து விடுகிறது.

603. வன்மையான உள்ளம் வாய்ந்தவர்கள் தங்களின் உடல்நிலை கெட்டு இருந்த போதிலும் அதைப்பற்றிக் கவலைப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

604. நோயுள்ள உடலைப் பெற்றிருப்பதைவிட நோயுள்ள மனத்தைப் பெற்றிருப்பது வருந்தத்தக்க விசயமாகும்.

605. மனிதன் என்று பெயர் கொண்ட ஒருவன் தன்னைப் பற்றியும் தன் உடலைப் பற்றியும் தன் உணர்வு பற்றியும் கொண்டுள்ள வீணான தீய எண்ணங்களை விட்டொழிக்க வேண்டும்.

606. ஒருவன் தன்னுடைய சிறு சிறு துன்பங்களைப் பற்றியும் நோய்களைப் பற்றியும் ஓய்வு ஒழிவு இல்லாது சிந்தித்துக் கொண்டிருப்பதே பலவீனத்தின் அறிகுறியாகும்.

607. மனிதன் துன்பமான சிந்தனையை நினைத்து வருந்துவது எவ்வளவு இலகுவானதோ, அதேபோல் அவன் மகிழ்ச்சி யான சிந்தனையை சிந்திப்பதும் இலகுவான காரியமே.

608. ஒருவனுடைய உடல்நலத்திற்கு மட்டுமன்று அவனுடைய மகிழ்ச்சிக்கும் ஒழுக்கம் இன்றியமையாததாகும்.

609. ஒழுக்க முறைகள் என்ற தெளிவான கண்ணாடியை வைத்துப் பார்த்தால் ஒரு பொருள் ஒழுங்குடன் இருக்கின் றதா? இல்லையா? என்பது தெளிவாகும்.

610. மனிதன் முழுச் சுதந்திரத்துடனும் அரசாள்வதற்கு இறைவனால் அளிக்கப்பட்ட ஓர் அரசாங்கம் இருக்குமானால் அது அவனுடைய மனமும் வாழ்க்கையுமேயாகும்.

611. மனித இனத்தின் மாபெரும் எதிரி உணர்ச்சிதான். அதுவே மகிழ்ச்சியின் கொலை வாளாகும்.

612. ஒருவன் அமைதி பெற விரும்புவானாயின் அவன் உணர்ச்சிகளின் கொடும்பிடியில் அகப்படாது தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

613. அறிவு, அமைதி ஆகிய சிகரங்களுக்குச் செல்லும் முதற்படி என்னவென்றால் சுயநலத்தின் இருட்படலங்களையும் துயரத்தையும் அறிவதுதான்.

614. பேராசை நிரம்பியுள்ள உள்ளத்திலும், அடக்கி ஆளப்படாத உள்ளத்திலும்தான் சுயநல உணர்ச்சி வளர்கிறது.

615. முட்டாள் பிறரைக் குறை கூறுகிறான்; தான் செய்வது சரி என்று வாதாடுகிறான். ஆனால் அறிவாளியோ பிறர் செய்தது சரி என்று கூறித் தன்னையே தான் குறைகூறிக் கொள்கிறான்.

616. தன்னுடைய அறியாமையின் அளவை அறியாதவன் முட்டாளாவான். தன்னுடைய அறியாமையை அறிந்தவன் அறிவாளியாவான்.

617. முட்டாள் அறியாமைச் சகதியில் மேலும் மேலும் ஆழ்ந்து கொண்டே உள்ளான். ஆனால் அறிவாளியோ அறிவை நோக்கி மென்மேலும் உயர்ந்து கொண்டே உள்ளான்.

618. ஒருவன் தன்னுடைய அறியாமையை தெளிவாக உணரும் பொழுதுதான் அறிவை அபிவிருத்தி செய்கிறான்.

619. வேணவா என்றால் நேர்மை, இரக்கம், தூய்மை, அன்பு ஆகிய மேலான பண்புகளை விரும்புவதாகும்.

620. சிறகு அற்ற பறவைகளால் எவ்வாறு பறக்க இயலாதோ, அதே போன்று வேணவா இல்லாத ஒருவனால் தன்னுடைய மிருக இச்சைகளை அடக்கி ஆள இயலாது.

621. ஒருவன் வேணவாக் கொள்ளத் துவங்கிவிட்டான் என்றால் அதன் பொருள் தன்னுடைய தாழ்ந்த நிலையில் அதிருப்தி கொண்டுவிட்டான்; உரிய நிலையை எய்த எண்ணி யுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

622. வேணவாவானது எல்லாவற்றையும் இயற்கைச் செயலாக ஆக்குகிறது.

623. வேணவாக் கொள்வதும், உள்ளொளி பெறுவதும் இரட்டைக் குழந்தைகள் போலாகும்.

624. வேணவா உள்ள மனிதன் சாந்தியில் போய் முடியக்கூடிய பாதையில் அடியெடுத்து வைத்துவிட்டான்.

625. மனிதனுடைய எண்ணத்தின் அளவு எவ்வளவோ, அதற்கேற்ற வண்ணம்தான் அவனுடைய செயல் சாதனை இருக்கும்.

626. வேணவாவின் இன்ப மகிழ்ச்சியானது ஒருவனுடைய மனத்தை தொடும்பொழுது அது உடனே அவனுடைய மனத்தைச் செம்மைப்படுத்தி சீர் செய்கிறது.

627. தூய வாழ்வை விரும்புகிறவன் வேணவா என்ற ஆற்றல் தரும் பேரொளியில் தன்னுடைய உள்ளத்தை ஒவ்வொரு நாளும் புதுப்பித்துக் கொண்டுள்ளான்.

628. எவ்வாறு ஆசைக்கு நாள்தோறும் உணர்வூட்டி வலுவூட்ட இயலுமோ அதேபோன்று வேணவாவுக்கும் வலுவூட்டி வளர்ச்சியடையச் செய்ய முடியும்.

629. நேர்மையை, நேரிய வாழ்வை எய்த வேணவாக் கொள்வதே அறிவின் சரியான வழியாகும். அதுவே சாந்தி பெற ஆற்றப்படும் சரியான முயற்சியாகும்.

630. மனிதர்கள் தங்களின் மாசுள்ள இயல்புகளால் தங்களுக்கே தாங்கள் துன்பமிழைத்துக் கொள்கின்றனர்.

631. அறிவுள்ளவன் தன்னுடைய எண்ணங்களைத் தூய்மைப் படுத்துகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

632. உன்னதமான மனிதன் யாரெனில் தன்னுடைய சுயநலத்திற்கு அப்பாற்பட்டு வாழ்ந்து வருகின்றவன்தான்.

633. தீமை என்பது ஓர் அனுபவமேயன்றி, அது ஓர் ஆற்றலல்ல.

634. கதிரவனின் ஒளியின் முன் இருள் ஓடி மறைவதைப் போன்று. அறியாமையானது அறிவு வெளிச்சத்தின்முன் இருந்த இடம் தெரியாமல் மறைந்தொழிகிறது.

635. மனிதனின் உள்ளத்தில் நன்மையின் புதிய அனுபவங்கள் குடியேறும் பொழுது, தீமையின் வேதனைமிக்க அனுபவங்கள் எல்லாம் ஓடி மறைகின்றன.

636. உண்மையான உயரிய வாழ்வு என்றால் உண்மையான உயரிய ஒழுக்கங்களேயாகும்.

637. அறிவுத்தெளிவு பெற்றவன் கடந்த காலத்தில் சந்தித்த அனுபவங்களை தனக்கு அறிவூட்டிய ஆசான் என்று உணர்கிறான்.

638. உண்மை நெறியில் செல்லும் ஒரு வன்மை வாய்ந்த ஒரு பிராணிக்கு தீமைக்கு அடிபணிவதென்றால் என்னவென்று கூடத் தெரியாது.

639. உண்மையான உயரிய பண்புகளை ஒருவன் மேற்கொள்ளும்போது அவனுடைய வாழ்க்கை இன்ப மயமாக இலங்குகிறது.

640. உயரிய பண்புகளைப் பெற்றவன் உயரிய இன்பத்தை நுகர்வான்.

641. எங்கு உணர்ச்சி உள்ளதோ அங்கு அமைதி இல்லை. எங்கு அமைதி உள்ளதோ அங்கு உணர்ச்சி இல்லை.

642. மனிதர்கள் அமைதி வேண்டி இறைஞ்சுகிறார்கள். எனினும் அவர்கள் உணர்ச்சியைப் பற்றிப்பிடித்து தொங்குகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

643. அன்பும் வெறுப்பும் சண்டையும் அமைதியும் ஒரே இதயத்தில் வாழமுடியாது.

644. மற்றவர்களை வெற்றி கொள்பவன் வீரனேயாயினும், தன்னையே தான் வெற்றி கொள்பவனே மாமனிதனாவான்.

645. மனிதன் தன்னையே தான் வெற்றி கொண்டால்தான் அவனால் பரிபூரண சாந்தி நிலையை எய்த இயலும்.

646. சாந்தி எதனுடனும் யாருடனும் போராடாது; பாரபட்சமாகவும் இராது.

647. பலாத்காரத்தால் ஒருவனை நாம் வீழ்த்தி வெற்றியடைந்து விடலாம். ஆனால், அவனுடைய உள்ளத்தை நாம் வெற்றி கொள்ள இயலாது.

648. தூய உள்ளமும் அறிவுக் கூர்மையும் உள்ளவர்கள் தங்களின் இதயங்களில் அமைதியைப் பெற்றிருக்கிறார்கள்.

649. மனிதர்கள் பிறருக்குத் தாராளமாக வழங்கக்கூடிய பொருள் உலகில் ஒன்று உள்ளதென்றால் அது அறிவுரைதான்.

650. அறிவுரை வழங்குவது எளிது; ஆனால் அதனைப் பின்பற்றுவது கடினம்.

651. அறிவுரைகள் வரவேற்கப்பெறுவதில்லை; அவை எவருக்கு அதிகமாகத் தேவைப்படுகின்றனவோ, அவர்தாம் அவற்றை அதிகமாக வெறுக்கிறார்கள்.

652. ஒருவன் நல்ல அறிவுரைகளை ஏற்றுக்கொள்வது அவன் தன்னுடைய திறமைகளை அபிவிருத்தி செய்து கொள்வதற்கான சிறந்த வழியேயன்றி வேறில்லை.

653. நீ உன்னுடைய நண்பனுக்கு அவனுக்குத் தோதான ஆலோசனைகளை வழங்காதே! அவனுக்கு மிகவும் பயன் எனத் தக்க அறிவுரைகளை வழங்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

654. இளமை மகிழ்ச்சி நிரம்பியது. துன்பத்தோடு யாதொரு தொடர்பும் கொள்ளாது.

655. இளமை - துள்ளித்திரிகின்ற - காளைப் பருவம். இந்தக் காளைப் பருவமே வாழ்வின் காலைப் பருவமாகும்.

656. இளமை வாழ்வில் ஒரு முறைதான் வரும். அதுவும் மின்னல் வெட்டி மறைவது போல் மறைந்துவிடும்.

657. வாழ்க்கையின் மிகவும் முக்கியமான பகுதி இளமைப் பருவம்தான்.

658. இளமைப் பருவம்தான் நாம் ஏதாவது செய்வதற்கும் நாம் எவரோ ஒருவராக உருவாவதற்கும் ஏற்ற காலம்.

659. இளைஞர்களின் உள்ளத்தைக் கவர்ந்துள்ள எண்ணம் எதுவென்று தெரிந்தால் அடுத்த தலைமுறையினரின் ஒழுக்கம் எதுவாக இருக்கும் என்று அறிந்துவிடலாம்.

660. தன்னுடைய வாழ்வின் வசந்த காலத்தை வீணே கழிக்கும் இளைஞர்களைப் பார்ப்பதே துன்பக் காட்சியாகும். வசந்த காலத்தின் இனிய நலன்களை அவன் இழப்பதோடு, வானவர்களின் முழுத் தன்மையால் தன்னை அணிசெய்து கொள்ளும் தன்னுடைய நேரத்தை தீய பண்புகளை மேற்கொள்ளுவதன் மூலம் வீணாக்குகிறான்.

661. இளமை என்பது தொடர்ச்சியான போதையாகும். அது அறிவின் காய்ச்சலாகும்.

662. அடக்கமும் அறிவுடைமையும் முதுமையைத் தழுவி நிற்பது போல, முரட்டுத்தனம் இளமையைச் சார்ந்து நிற்கிறது.

663. குடிகாரர்கள் எவ்வாறு தங்களை நிதானத்தோடு நடந்து கொள்பவர்களாக எண்ணிக் கொள்கிறார்களோ, அவ்வாறே இளைஞர்களும் தங்களை அறிவாளிகள் என்று கருதிக் கொள்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

664. இளைஞர்கள் தங்களுக்கு ஏற்படுத்திக் கொள்ளும் வரையறை எதுவென்றால், குறைவாகப் பேசுவதும் அதிகமாகச் செவி மடுப்பதுமாகும்.

665. இளைஞர்களின் முன்னேற்றங்களில் மிகவும் பாக்கியசாலித்தனம் எதுவென்றால், சொந்தக் கருத்துக்களுக்கு அதிகம் மதிப்பளிக்காததோடு பிறருடைய கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதாகும்.

666. இளமையிலும் வெள்ளைக் காகிதத்திலும் எதுவும் விரைவில் பதிந்துவிடுகிறது.

667. பொய்யின் பெருமை அதனை நம்பச் செய்வதில்தான் தங்கியுள்ளது.

668. மடாலயங்கள் மகான்களை வெறுப்பது போலக் கல்லூரிகள் மேதைகளை வெறுக்கின்றன. (இங்கர்சால்)

669. கல்லூரிகள் கூழாங்கற்களை ஒளிரச் செய்யும்; வைரங்களை ஒளி மங்கச் செய்யும் இடம். (இங்கர்சால்)

670. இருபதாண்டுகளில் பெறக்கூடிய அனுபவத்தைவிட ஓராண்டு படிப்பதனால் ஒருவன் அதிகமான அறிவைப் பெற்று விடுகின்றான்.

671. அறியாமையைத் தவிர வேறோர் அடிமைத்தனம் இவ்வுலகில் இல்லை.

672. அறியாமையைத் தவிர வேறோர் இருள் இவ்வுலகிலே இல்லை.

673. கல்வி அறிவைப் பெற்றிராததைவிடப் பிறக்காமலேயே இருந்துவிடுவது மேலானதாகும்.

674. அறியாமையே துன்பத்தின் ஆணிவேராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

675. அறிவுள்ளவன் வலுவுள்ளவன், அவன் வலுவை அதிகரிக்கச் செய்கின்றான்.

676. ஒரு நிலம் எவ்வளவுதான் வளமுடையதாக இருந்த போதிலும் அதனை உழுது பயிரிடாது தரிசாக விட்டுவிடின் அதனால் எவ்வாறு எவ்விதப் பயனும் ஏற்படாது போய்விடுமோ. அதேபோன்று படிப்பில்லாவிடின் மூளையும் பயனற்றதாகிவிடும்.

677. சலவைக் கல்லுக்கும் சிற்பத்துக்கும் என்ன தொடர்புள்ளதோ அதே தொடர்புதான் கல்விக்கும் ஆன்மாவுக்கும் இருக்கின்றது.

678. ஒரு மனிதன் கல்வியைப் பெறும் வரையில் மனிதனாக மாட்டான்.

679. மனிதனுக்கு அவனுடைய ஆற்றல்கள்மீது அதிகமான ஆதிக்கம் வழங்குவதே கல்வியாகும்.

680. மனிதனுக்கு அவனுடைய உடல், சமூக சூழ்நிலைகளுக்கு ஏற்ற வண்ணம் அவனுடைய செயல்களை அமைப்பதுதான் கல்வி.

681. உனக்கு கொஞ்சம்; எனக்கு கொஞ்சம்; அதுதான் நட்பு

682. நீ யாரையாவது வெறுத்தால் அவனைப் பற்றி மட்டும் ஒருபோதும் பேசாதே.

683. முடியாததை செய்யவேண்டும் என்பது எவருக்கும் கட்டாயமில்லை.

684. அரசாங்கத்தின் முதல் நோக்கம் எல்லா மக்களுக்கும் கல்வி பயிற்றுவதாக இருக்க வேண்டும். (போனாபாட் நெப்போலியன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

685. சுதந்திரத்திற்கும் நீதிக்கும் அடுத்தபடியான முக்கியத்துவம் பொதுமக்களுக்கு கல்வி அளிக்கப்பெற வேண்டும். அது இன்றேல் சுதந்திரமோ நீதியோ நிலைத்திருக்க இயலாது.

686. மக்களுக்கு சிறைக்கூடங்களைக் கட்டுவதைவிட பையன் களுக்கு பள்ளிக்கூடங்களைக் கட்டுவது எவ்வளவோ மேலானது.

687. மனிதன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலெல்லாம் மிகவும் பெரியது எதுவெனில், எல்லோருக்கும் கல்வி போதிக்கக் கூடிய பள்ளிக் கூடங்களை ஏற்படுத்தியதுதான்.

688. இயற்கைத் திறனில்லாத பள்ளிக்கூடங்களைவிடப் படிப்பில்லாத இயற்கைத் திறனுள்ளவர்கள் பெரும் புகழை யும் பண்புகளையும் பெற்றுவிடுகின்றார்கள்.

689. படிப்பின் நோக்கம் அறிவுத் தாகம் தணிக்கவோ, புகழ், பட்டம் பெறவோ இருக்கக் கூடாது. தாம் கற்ற கல்வியை நலம் நல்கும் வகையில் பிறருக்கு உதவ வேண்டும் என்பதற்காக இருக்க வேண்டும்.

690. பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்ட எந்தப் படிப்பையும் நல்லது என்று கருதவும் கூடாது; மதிக்கவும் கூடாது.

691. வீணான புத்தகங்களைப் படிப்பது சிரமமான சோம்பேறித் தனம்.

692. அலங்காரமான ஆடை அணிந்த ஒருவன் செல்வதற்காக முட்டாள்களையும் பெண்களையும் தவிர்ந்து அவனை வேறு யாரும் மதிப்பதில்லை.

693. அழகிய உடைகளையும் புதிய வடிவங்களையும் விரும்பு வதும் அவற்றால் தாம் உயர்ந்துவிட்டதாகக் கருதிக் கொள்வதும் சிறுபிள்ளைத்தனமான முட்டாள்தனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

694. ஒரு குழந்தையை பெரும் பட்டதாரியாக்கவோ, பணக்கார னாக்கவோ கல்வியைப் புகட்டாதே; அவனை மனிதனாக்கு வதற்காக கல்வியைப் புகட்டு.

695. படிப்பது என்பது இன்பம் பயப்பதுதான்; ஆனால் படிப்பதில் பெறும் இன்பத்தை, பிறருக்கு படித்ததைக் கற்றுக் கொடுப்பதில் பெறக்கூடிய இன்பத்தோடு ஒப்பிட்டுக்கூற இயலாது.

696. நீங்கள் உங்கள் குழந்தைகள் எவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவர்களாக உங்களின் பேச்சிலும் வாழ்விலும் இருங்கள்.

697. இளைஞர்களை மிகவும் உயர்தரமான பிரஜைகளாகச் செய்வதற்கு அவர்களுக்கு அறிவுரைகள் வழங்குவது மிகவும் இன்றியமையாததாகும்.

698. கடினமான விசயங்களை இலகுவாக செய்யக்கூடியவனே ஆசிரியனாவான்.

699. பையன்களுக்கு வன்முறையாலும் கடுமையினாலும் கல்வி போதிக்காதீர்கள். அவர்களுடைய உள்ளத்திற்கு உகந்த விசயங்களில் அவர்களின் கவனத்தை திருப்பிவிடுங்கள்.

700. சிறிதளவாவது நீங்கள் மாணவர்களுக்கு படிக்க வேண்டும் என்ற ஆவலை உண்டுபண்ணாமல் அவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது அவர்களை புத்தகம் சுமக்கும் கழுதைகளாக ஆக்குவதற்கான வழியேயன்றி வேறில்லை.

701. இளைஞர்களுக்கு எத்தகைய கல்வி அளிக்கப்படவேண்டும்? அவர்கள் மனிதப் பருவத்தை எய்தியபொழுது அவர்களுக்கு எந்தக் கல்வி பயன்படுமோ அந்தக் கல்வியை அளியுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

702. பெற்றோரின் குரல் கடவுளின் குரலாகும். ஏனெனில் அவர்கள் அவர்களுடைய குழந்தைகளுக்கு கடவுளுடைய பிரதிநிதியாக உள்ளனர்.

703. கல்வியின் வேர் கசப்பாகத்தான் இருக்கும். ஆனால் அதனுடைய பழமோ இனிமையானது.

704. அறிவை இலகுவாகப் பெற்றுக்கொள்ளலாம் என்று இருந்தபோதிலும், பெரும்பாலான மக்கள் அதை இலகுவாகப் பெறுவதிலுள்ள சிறு சிரமத்தைக்கூட ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை.

705. படிப்பில் அதிக நேரத்தை செலவிடுவது சோம்பலை உண்டுபண்ணும்.

706. இரவு தனது வெள்ளிவிளக்கை விண்ணிலே ஏற்றும் நேரம் இருக்கிறதே அதுவே படிக்க வேண்டிய நேரமாகும்.

707. மெதுவாக எரிந்து கொண்டிருக்கும் விறகுகளை மாற்றி வைத்தால் எவ்வாறு தீயை கொழுந்துவிட்டு எரியச் செய்யுமோ, அதேபோன்று படித்துக் கொண்டிருக்கின்ற புத்தகத்தை மாற்றுவதும் மந்தம் அடைந்துள்ள அறிவைச் சுறுசுறுப்படையச் செய்யும்.

708. அறியவேண்டியதை அதிகமாகப் படித்ததினால் சிலர் பையித்தியக்காரர்களாக ஆகிவிடுகின்றார்கள். ஆனால் அறியவேண்டிய நல்லவற்றைப் படித்ததனால் யார்? பைத்தியக்காரர்களாகி இருக்கிறார்கள்.

709. தேர்வுகள் நன்றாகப் படித்துத் தயாரானவர்களுக்குக் கூடச் சிரமமாகத்தான் இருக்கிறது. ஏனெனில் மிகப் பெரும் அறிவாளிகள் கூட விடைகூற இயலாத கேள்விகளைப் பெரிய முட்டாள்கள் கேட்டுவிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

710. உடல் நலனைப் பேணுவது மதக் கடமை போன்றதாகும். ஏனெனில் உடல் நலன்தான் எல்லாச் சமூகப் பண்பாடுகளின் அடிப்படையாகும்.

711. அறிவும் உடல் நலமும் இறைவன் மனித இனத்துக்கு வழங்கிய அருட்பெரும் பேறுகளாகும்.

712. மனிதனின் மிகப்பெரும் பெறுபேறு மனிதத்தன்மை நிரம்பிய உடலின் வன்மையான மூளை அமைந்திருப்பதேயாகும் (கிரேக்க அறிஞர் ஹோமர்)

713. நோயற்ற உடல் ஆன்மாவின் விருந்து மண்டபமாகும்; நோயுற்ற உடல் அதனுடைய சிறைக்கூடமாகும்.

714. உடல் நலமாக உள்ளவர்கள் தங்களின் உடல்நலத்தைப் பற்றி உணர்கிறார்களில்லை. நோயுற்றவர்கள்தாம் அதன் மதிப்பை உணர்கிறார்கள்.

715. பெறுதற்கரிய பெறுபேறுகளிலெல்லாம் உடல் நலன் மிகப்பெரும் பெறுபேறாகும்.

716. வெளுத்துப் போயுள்ள மிதியடி தயாரிக்கும் ஒரு தொழிலாளி நோயுள்ள மன்னனை விட மேலானவனாவான்.

717. ஓய்வும் வேலையும் மாறி மாறிச் செய்வது நீண்டகாலம் ஒருவனை வாழுமாறு செய்கிறது.

718. எப்போதும் வளைக்கப்பட்டிருக்கும் வில் விரைவில் முறிந்துவிடும்; எப்போதும் வேலை செய்துகொண்டிருக்கும் மனித உடல் விரைவில் உடைந்துவிடும்.

719. ஒரு மனிதனின் ஒழுக்க நிலையை அறிய வேண்டுமென்றால் அவனுடைய இறுதி வெற்றியையோ, தோல்வியையோதான் பாரக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

720. ஒழுக்கமுள்ள ஒருவனை எவரும் வெற்றிகொள்ள இயலாது. அவன் உரமிக்க பாறையின்மீது நிற்பவனாவான்.

721. வலிமையை ஓர் ஒழுக்கம் எனக் கூறலாம். அதற்கு எதிரான தீமை சோம்பல்.

722. வலிமையை தவறாகப் பயன்படுத்துவதற்குப் பதிலாக வலிமையே இல்லாதிருந்துவிடுவது மேலாகும்.

723. எப்பொழுதும் எச்சரிக்கையுடனிருப்பதே விடுதலையின் விலையாகும்.

724. ஏதாவது செய்ய வேண்டியிருக்குமாயின் அதனை உடனே செய்துவிடு; அதனை தீவிரத்துடன் செய்துவிடு.

725. குளிர்ந்த நீர் ஆழமாய் ஓடும்.

726. ஞாலத்தின் மிகப்பெரும் ஆற்றல்களெல்லாம் ஒலி இல்லாதவைதாம்.

727. அமைதி என்பது உணர்விழந்து கிடக்கும் இறப்பு நிலையல்ல. அது ஒருமுகப்படுத்தப்பட்ட வலிமையின் முடிவாகும்.

728. ஊக்கத்தை ஓர் உயரிய உடமை என்று கூறலாம். அது நம்பிக்கையை வழங்குகிறது.

729. எச்சரிக்கை எல்லாத் திறன்களுக்கும் ஒரு காவலாகும். அதிகத் துப்பறிபவன் என்று குறிப்பிடலாம்.

730. எச்சரிக்கையின்மை அறிவின்மையைத்தான் காட்டும். அறிவின்மை என்பது மூடத்தனத்திற்கு இடப்பட்ட வேறொரு பெயர்தான்.

731. சிக்கனமுள்ளவன் செம்பை வெற்றியாக மாற்றுவான்; வெற்றியை தங்கமாக மாற்றுவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

732. ஆடையிலும் அணிகலனிலும் ஆடம்பரத்தைக் காட்டுவது காலி மனத்தைத்தான் காட்டுகிறது.

733. அடக்கமும் ஆன்ற ஒழுக்கமும் உள்ள மக்கள் தங்கள் ஆடையில் எளிமையாயிருப்பார்கள்.

734. அறிவும் நன்மையும் அலங்கரிக்கும் மனத்தின் அழகை ஆடம்பரமான உடை அணிந்திருக்கும் உடலால் அதிகப்படுத்திவிட முடியாது.

735. மகிழ்ச்சியில் பொழுது போக்குவதை வாழ்க்கையின் தேவைகளுள் ஒன்றென்று கூறலாம்.

736. ஒரு மனிதன் தன் அன்றாடக் கடமைகளை முடித்துக் கொண்ட பின் களங்கமற்ற மனத்துடன் கவலையற்ற உள்ளத்துடன் உல்லாசமாகப் பொழுது போக்கக் கிளம்ப வேண்டும்.

737. ஒருவன் தன் நேரத்தை முழுதும் வேலையிலோ, முழுதும் ஓய்விலோ கழிக்கக்கூடாது.

738. வேலைக்குப் பின் ஓய்வும் ஓய்வுக்குப் பின் வேலையுமாக மாற்றிக் கொள்வது நீண்ட வாழ்விற்கும் பயனுள்ள வாழ்விற்கும் அவசியமாகும்.

739. மூளை வேலை செய்பவர்கள் வேலைக்குப் பின் ஓய்வெடுத்துக் கொண்டால்தான் மீண்டும் புத்தார்வத்துடன் வேலை செய்ய முடியும். அப்பொழுதுதான் அவர்களின் வேலையின் தன்மையும் அளவும் சிறப்பாக அமையும்.

740. உழைக்கும் ஒவ்வொரு மனிதனும் போதிய அளவு உறங்க வேண்டும். அளவுக்கதிகமாய் உறங்குவது உகந்ததல்ல.

741. காலத்தை நாம் எல்லோரும் ஒரே அளவில்தான் பெற்றிருக்கிறோம். எவருக்காக வேண்டியும் காலம் நீட்டப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

742. பயனுள்ள காரியங்களுக்கே தன் காலத்தை செலவிடுபவன் அறிவின் மதிப்பில் வளர்கிறான்.

743. வீணடிக்கப்பட்ட உடல்நலத்தைக்கூட திரும்பப் பெற்று விடலாம்; ஆனால், பாழாக்கப்பட்ட காலத்தை ஒருபோதும் திரும்பப் பெறமுடியாது.

744. காலமென்பது மூலதனத்தின் பொற் பேழையாகும். (வில்லியம் ஷேக்ஸ்பியர்)

745. சிந்திப்பதற்காகவும் திட்டமிடுவதற்காகவும் வைகறை யிலேயே எழுந்துவிடும் ஒருவனிடம் திறன் தானே வந்துவிடும்.

746. சிக்கனம் சேமிப்பதைவிடச் சிறந்ததாகும். அதற்கு நம் வாழ்வின் எல்லா அம்சங்களுடனும் தொடர்பிருக்கிறது.

747. பணத்தைப் பற்றி நீ கவனமாயிரு. பணம் உன்னைக் கவனித்துக் கொள்ளும்.

748. ஆற்றலையும் வலிமையையும் ஒழுங்காகப் பயன்படுத்து வதால் விளைவதே திறமை.

749. ஒருவனுடைய சுபீட்சம் அவனுடைய திறமையின் அளவிலேயே இருக்கும்.

750. ஒரு செயலைக் கருத்தோடும் கவனத்தோடும் ஆற்றுவதன் மூலமே திறன் சேர்கிறது.

751. நல்ல மனிதன் தன் சிந்தனையை பயன்படுத்துவதில் திறமையுள்ளவனாயிருப்பான். அறிவே மிகச் சிறந்த திறனாகும்.

752. அறிவுடனும் திறனுடனும் வேலை செய்பவனுக்கு உலகில் ஏராளமான இடம் இருக்கவே செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

753. மலட்டு விதவையைப் போலவே, மலட்டு மனமும் வாழ்க்கைப் போரில் மாண்டுவிடுவது உறுதி.

754. ஆதரவாற்றல் அதிகமுள்ள மனிதனே புதியதைக் காண்கிறான், அற்புதங்களை வெளிப்படுத்துகிறான், முன்சென்று முனைந்து செயலாற்றுகிறான்.

755. ஆதரவாற்றல் முதிர்ந்து முழுமைபெறும்போது அது தனித்தன்மையாகிறது. எங்கு தனித்தன்மையுண்டோ, அங்கே மேதைத்தன்மை உண்டு.

756. மனித வாழ்க்கை என்பது ஒருவருக்கொருவர் கொடுத்து உதவிக் கொள்வதேயன்றி பறித்துக் கொள்வதல்ல.

757. நேர்மையில்லாவிடில் வலிமையும் சிக்கனமுமிருந்தும், ஒரு பயனுமில்லை. அவை இறுதியில் தோற்றுப் போய்விடுவது உறுதி.

758. நேர்மையாளன் மாறா விதிகளின் பாதையில்தான் நிற்பான். அவன் மனித சமுதாயத்தை பிணைத்து நிற்கும் சட்டங்களின் பாதையில்தான் நிற்பான்.

759. மனித சமூகத்தின் முதுகெலும்பே நேர்மைதான். மனித உறவுகளின் ஆத்ாரமாய் இது இராவிட்டால் நம்பிக்கை இராது.

760. எவ்விதம் பொய்யன் எல்லோரையும் பொய்யன் என்று கருதி அவ்வாறே நடத்துவானோ, அவ்விதமே நேர்மையாளனும் எல்லோரையும் நேர்மையாளன் என எண்ணி அவ்வாறே நடத்துவான்.

761. நேர்மையுள்ள மனிதனிடம் அவனுக்குத் தெரியாமலே ஒரு சிறப்பு இருக்கும். அது அவன்கூடவே செல்லும். அது பார்ப்பவரைப் பயபக்தி கொள்ளச் செய்வதுடன் அவர்களைத் துணிவு கொள்ளவும் செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

762. அறிவாளிகளை விட நேர்மையாளர்கள்தான் உலகில் மதிப்பில் உயர்ந்த இடத்தைப் பெற்றிருப்பார்கள்.

763. நேர்மையின் சிறப்பு மனித இயல்பில் மிகவும் சிறந்த ஒன்று.

764. நேர்மை தவறாத ஒருவன் உண்மையிலேயே வீரன்தான். அவனிடமுள்ள வீரத்தை வெளிக்கொண்டு வருவதற்கு சந்தர்ப்பங்களே தேவை.

765. கண்ணியமே வெற்றிக்குச் செல்லும் நிச்சய வழியாகும். நேர்மையற்றவர்களுக்கு துன்பமும் துயரமும் விரைவில் வந்து சேரும்.

766. குடிகாரன் தன் தீய பழக்கத்தினால் விளையும் உடனடி இன்பத்தைத் தான் நினைக்கிறான். இறுதி இழிவைப்பற்றி நினைத்துப் பார்ப்பதில்லை.

767. அறியாதவர்கள் தாம் நேர்மையின்மை, சுபீட்சத்துக்கு குறுக்குவழி எனக் கருதிக் கொள்கிறார்கள். அதுவே அவர்கள் நேர்மையற்ற செயல்புரியக் காரணமாகும். (நெப்போலியன் ஹில்)

768. நேர்மையாளன் தோல்வியுறலாம்; ஆனால், அதற்குக் காரணம் நேர்மையாயிருந்ததாகாது. அவன் தோல்விகூட கௌரவமானதாய் இருக்கும்.

769. நேர்மையை எல்லோரும் போற்றவே செய்கின்றார்கள்; நேர்மையற்றவர்கள் கூடப் பிறரிடம் நேர்மையைக் காணும்போது அதனைப் பாராட்டத் தவறுவதில்லை.

770. அச்சமின்மை நேர்மையுடன் வருவதாகும். நேர்மையாளனுக்குத் தெளிவான விழிகளும் கூசாத பார்வையும் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

771. ஒருவன் தன் கடமைகளை நிறைவேற்றிவிட்டானானால் அவன் பிறகு எதற்கும் அஞ்சவேண்டியதில்லை.

772. நேர்மையாளன் கடன் வாங்காது தவிர்த்துக் கொள்ள முயலுவதை கடன் தன்னை மிகைத்துவிட்டால் அஞ்ச மாட்டான். தன் உழைப்பை இரட்டிப்பாக்கிக் கடனை அடைப்பான்.

773. நேர்மையற்றவர்கள் எப்போதும் அஞ்சிக்கொண்டே இருப்பார்கள்.

774. வலிய மனிதர்களுக்கு வலிய நோக்கங்களிருக்கும். வலிய நோக்கங்கள் வலிய சாதனைகளுக்கு வழிகோலும்.

775. சிறப்பாக ஒரு நிலையம் இருக்குமென்றால் அதற்குக் காரணம் அது ஒழுங்காக, முறையாக அமைக்கப் பட்டிருப்பதுதான்.

776. சில துறைகளில் ஒழுங்கீனன்கூட வெற்றி அடையலாம் தான். அதனால் ஒழுங்குமுறை வெற்றிக்கு அப்படி ஒன்றும் அவசியமில்லை என்று கருதிக் கொள்ளக்கூடாது.

777. ஒழுங்குமுறையில் ஒருவித மேதைத்தன்மையே இருக்கிறது எனலாம். அது அற்புதங்களைக் கூடச் செய்யக்கூடும்.

778. ஒழுங்கு முறையுள்ள மனிதன் சிறிதும் ஆசையில்லாமல் மிகவும் குறுகிய காலத்தில் மிகவும் அதிகமான வேலைகளைச் செய்து முடிப்பான்.

779. மனித சமுதாயத்தின் பெரும் சாதனைகள் அனைத்தும் ஒழுங்குமுறை அடிப்படை மீதுதான் அமைந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

780. ஒழுங்குமுறை உண்மையிலேயே வளர்ச்சிக்கான அடிப்படை விதிகளுள் ஒன்றாகும். அதுதான் உலகின் கோடானகோடி மக்களை ஒன்றிணைக்கிறது.

781. எந்த வேலையையும் ஒழுங்காகவும், முறையாகவும் செய்ய வேண்டுமென்னும் விருப்பம் ஒவ்வொரு மனிதனுக்கும் அமைந்திருத்தல் அவசியம். அப்போதுதான் அவன் குறிப்பிடத்தக்க வெற்றி ஏதாவது பெறமுடியும்.

782. ஒழுங்கு முறையற்ற மனத்தைப் பயிற்சி பெறாத மனம் என்று கூறலாம்.

783. ஒழுங்கு என்னும் சட்டத்தைக் கொண்டே இயந்திரம், தொழில், ஒழுக்கம், இனம், பேரரசு இவையனைத்தும் கட்டுப்படுகின்றன.

784. ஆயத்தம் என்பது ஊக்கமாகும். ஒரு நிலைமையைப் புரிந்து கொண்டு அதனைச் சமாளிக்கத்தக்க ஆயத்தத்துடன் இருக்கும் உணர்ச்சியே அது.

785. ஒருவன் ஒழுங்கு முறையைத் தவறாது பின்பற்று வானாயின் எந்தப் பொருளை எவ்விடத்தில் பெற்றானோ, எடுத்தானோ அவ்விடத்தில் வைத்து மீண்டும் பெற்றுக் கொள்ளும் ஒழுங்கு முறையை ஏற்படுத்திக் கொள்வான்.

786. தவறு செய்யும் ஊழியன் தன் எசமானுக்கு ஒரு தொந்தரவு ஆவான்.

787. முன்னேற வேண்டும் என்னும் விருப்பமுள்ள மனிதன் தன் தவறுகளைத் திருத்திக் கொள்கிறான். பிறர் தவறுகளில் இருந்தும் பாடம் கற்றுக் கொள்கிறான்.

788. பயன் என்பது ஒரு செயலில் ஒரு முறையைப் பின்பற்றுவதால் விளையும் நேரடிப் பலனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

789. பயன் விளைய வேண்டுமென விரும்பினால் சாத்தியமான இலட்சியத்தை தேர்ந்தெடுக்க வேண்டும்.

790. அறிவற்றவர்களே காரிய சாத்தியமற்ற காரியங்களில் ஈடுபடுவார்கள்; பயனற்ற கொள்கைகளையும் போட்டுக் குழப்பிக் கொள்வார்கள்.

791. இயலாத செயல் ஒன்றாக மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்ளக்கூடாது.

792. ஒரு கொள்கை நிச்சயமாகப் பயனளிக்கும் என்றிருந்தால் தவிர அதனைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருப்பதில் பொருள் இல்லை.

793. தச்சன் நாற்காலியைச் செய்கிறான்; நிர்மாணன் கட்டிடத்தை எழுப்புகிறான், தொழிலாளி இயந்திரத்தை சமைக்கிறான், அறிவாளி பூரண ஒழுக்கத்தை உருவாக்குகிறான்.

794. ஐயப்பட்டுக் கொண்டேயிருக்கும் ஒருவன் எதனையும் ஆற்றமாட்டான். அது கானல் நீர் போன்றதாகும்.

795. முழு விபரமும் அறிந்திருத்தல் என்பது ஆளத்தக்க ஓர் இயல்பாகும். ஒழுங்குபடுத்தி ஆளும் வலிமையை அளிப்பதும் அதுவே.

796. பரிவு என்பது ஆழமான உணர்த்தமுடியாத மௌன மென் உணர்வாகும். அது தன்னலம் மறுத்த மேன்மைப் பண்பில் பொதிந்திருக்கின்றன.

797. பரிவுள்ள மக்கள் உரக்கப் பேசிக்கொண்டு அலைய மாட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் அடக்கத்துடன், அமைதியாய் உறுதியாய் பெருந்தன்மையுடன் இருப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

798. பரிவின்மையை உதாசீனத்திலிருந்தும், நகைச் சொல்லில் இருந்தும் கொடிய கேலியிருந்தும் கண்டிப்பிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம்.

799. உண்மைகள் கொள்கைகளை நியாயப்படுத்தவில்லை என்றால், கொள்கைகளை மாற்றியமைத்துக்கொள். உண்மைகளை மாற்றி அமைக்க முயற்சிக்காதே. (அல்பிரட் ஐன்ஸ்டீன்)

800. பரிவின்மைக்குக் காரணம் அகந்தைதான். பரிவுக்கு காரணம் அன்பாகும். அகந்தை அறியாமையுடன் இணைந்தது. அன்போ அறிவோடு பிணைந்தது.

801. ஒருவன் தான் புரிந்த உதவிகளைக் கூறி அதற்குப் பிரதியாக தான் பெற்ற அவமதிப்புகளைப் பற்றி குறைபடுவானானால், அவன் பரிவுள்ள செயல் ஒன்றும் ஆற்றவில்லை என்றே சொல்ல வேண்டும்.

802. பரிவிற்கு சுவையளிப்பது என்பது தன்னை மறந்த அடக்க நிலையாகும்.

803. பரிவு என்னும் சொல்லின் உண்மையான பொருள் பிறர் துன்பங்களுடனும் துயரங்களுடனும் ஒன்றாகி விடுவதுதான்.

804. பரிவுள்ள மனிதனை ஒருவன் என்று கூறமுடியாது. அவனில் பலர் இருக்கின்றனர்.

805. பரிவைப் பெற்றவன் ஒருபோதும் ஒருவனைக் கடுமையாகக் கண்டிக்க மாட்டான். ஒருபோதும் அவன் வாயிலிருந்து அறிவற்ற அநியாயக் கொடிய தீர்ப்பு ஒன்றும் வெளிப்பட்டு விடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

806. ஒரு மனிதனின் உள்ளத்தில் பரிவு பிறக்க வேண்டும் என்றால் அவன் தன் இதயத்திலிருந்து ஏமாற்றும் இழி எண்ணத்தையும், அறிவற்ற தன்மையையும், தன்னலத்தையும் எடுத்து எறிந்துவிட வேண்டும்.

807. இடர்பட்டபின் எஞ்சுவது அது விட்டுச் சென்ற அறிவுதான். அதனையே பட்டறிவு எனப்படுகிறது. அதுதான் பிறரின் துன்பங்களைத் தெரிந்து கொள்ளச் செய்கிறது.

808. ஒரு மனிதன் பல வகைகளிலும் பெருந்துன்பம் பெற்றுப் பூரணமடைந்து விட்டானானால் அவன் கண் கலங்கிக் கவலையடையும் மக்களுக்கு ஆறுதல் அளிக்கும் மையமாக அமைகின்றான்.

809. ஒரு தாய் துன்புறும் தன் குழந்தையின் வேதனையை எப்படியும் உணர்ந்து கொள்வது போல், பரிவு உள்ளவன் துன்பப்படும் மக்களின் வேதனையைத் தெரிந்து கொள்வான்.

810. பரிவு என்பது உலகம் எங்கும் வழங்கும் ஆன்மீக மொழியாகும். அதனை மனிதர்கள் மட்டுமல்ல மிருகங்களும் கூடப்புரிந்து கொண்டு பாராட்டுகின்றன.

811. தன்னலம் பிறருக்குப் பாதகம் நேரும்போது தன்னை மட்டும் காத்துக் கொள்ள தூண்டுகிறது. ஆனால் பரிவோ தன்னைத் தியாகம் செய்து பிறரைக் காக்கத் தூண்டுகிறது.

812. அன்பின்மை ஒரு மனிதனின் குணத்தை கெடுக்கிறது. நாளடைவில் அவன் முகத்தைக்கூட கெடுத்துவிடுகிறது.

813. தாராளத் தன்மை அன்புடன் இணைந்ததாகும். அன்பை அமைதியின் சகோதரி என்றால் தயாளத்தை வலுவுள்ள சகோதரன் எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

814. மென்மை கடவுள் தன்மை போன்றதாகும். கடினம் விலங்குத் தன்மை போன்றதாகும்.

815. ஒரு பக்திமானை மற்ற பக்திமானிடருந்து பிரித்துக் காட்டக்கூடிய குணம் மற்ற எல்லாக் குணங்களையும் விட மென்மையான குணம் ஒன்று மட்டும்தான்.

816. அறிவாளி தன்னிடமிருக்கும் சினத்தை எல்லாம் வெற்றி கொண்டவனாவான். அதனால் அவனுக்கு எப்படி மற்றவர்களின் சினத்தை வெற்றி கொள்வது என்பது தெரியும்.

817. உள்நோக்கத்தை பரிவின் பரிசு எனலாம். பரிவுள்ள மனம் அதிகம் நோக்கும் அரிய மனமாகும்.

818. அறிவற்ற மூடன்தான் சட்டையையும் தொப்பியையும் பார்த்துவிட்டு தான் அந்த மனிதனை பார்த்துவிட்டதாக கருதுவான்.

819. பரிவுள்ளவன் சட்டைகளையும் தொப்பிகளையும் பற்றிக் கவலைப்படமாட்டான். அவன் மனிதர்களைத்தான் பார்ப்பான்.

820. வெறுப்பினால் ஒரு மனிதன் ஒரு மனிதனை தவறாய்த் தீர்மானிக்கின்றான். அன்பினால் ஒரு மனிதன் ஒரு மனிதனை புரிந்து கொள்கிறான்.

821. உணரும் இதயமும் பாாக்கும் விழிகளும் பிரிக்க வொண்ணாதவையாகும். பரிவுள்ள மனிதன் முன்னறி விப்புச் செய்யும் மனிதன் ஆவான்.

822. பரிவமைந்த உள்நோக்கே விடுதலை. மகிழ்ச்சி. வலிமை இவற்றை உணரும் நிலைக்கு ஒருவனை உயர்த்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

823. உண்மையுள்ள ஒருவன் உண்மையிலேயே மிகப்பெரும் வலிமையாளன்தான். அவன் வேறு எந்த வலிமையுள்ள வனாக இருந்தாலும் அந்த வலிமைக்கும், மிகப் பெரும் அறிவு வலிமைக்கும் உண்மையை அதனுடன் ஒப்பிட முடியாது.

824. வெட்கம் இளைஞனுக்கு அணிகலனாகும். முதியோனுக்கு அதுவே அவமானமாகும்.

825. புத்துலக முழக்கங்களுள் ஒன்று, இயற்கைக்குத் திரும்பு என்பதாகும்.

826. குறைந்த மனங்களே அலங்காரங்களைப் பின்பற்ற விரும்பும்.

827. ஒருவன் தன் அறிவையும், ஆன்மீக ஆற்றலையும் காத்துக் கொண்டு எளிமைக்கு திரும்புவதால்தான் பெரிய மனிதனாகிறான்.

828. எங்கு உண்மை இருக்கிறதோ, அங்கு எளிமை இருந்து கொண்டிருக்கும். அதாவது நாம் இயற்கையில் பார்க்கி றோமே அத்தகைய எளிமை, அதுவே உண்மையான எளிமையாகும்.

829. கவர்ச்சி எளிமையின் நேரடிப் பலனாகும். எல்லா இயற்கைப் பொருட்களிலும் இது உண்டு.

830. மனிதர்களுக்குள்ள கவர்ச்சியைச் செல்வாக்கு என்கின்றோம். போலித்துறவிகள் சிலர் பணத்திற்கு கவர்ச்சியை விற்பனை செய்து தங்களை விளம்பரம் செய்கிறார்கள்.

831. சில மக்கள் தலைவர்கள் தங்களிடமிருக்கும் உண்மையின் வலிமையால் கவர்பவர்களேயாவர். அவர்களின் உண்மை யின் அளவு, அவர்களின் கவர்ச்சியின் அளவாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

832. ஒருவன் அறிவுள்ளவனாயிருந்தாலும் சரிதான்: அவன் உண்மை இல்லாதவனாய், அவன் நீண்ட நாள் தலைவனாக இருக்க முடியாது.

833. கூர்மதியை உண்மையாளர்களின் உடமை எனலாம். உண்மையாளர்களின் முன்னிலையில் எல்லா வேடங்களும் கலைந்து விடுகின்றன.

834. ஏமாற்றுபவர்கள் அனைவரும் உண்மையாளர்களின் கூரிய பார்வைக்குத் தெளிவாகத் தெரிந்துவிடுகின்றனர்.

835. உண்மையாளன் தான் புரியும் செயல் அனைத்திலும் தன் ஒழுக்க முத்திரையைப் பதிக்கின்றான்.

836. வெறுப்பை விரட்டியடிப்பது பெரும் சாதனையாகும். வெறுப்பு ஒரு மனிதன் செல்லும் வழியில் பல தடைகளைக் குவிக்கின்றது.

837. மனிதன் விருப்பு வெறுப்பற்ற அதாவது பாரபட்சமற்ற தன்மையை அடைய வேண்டுமாயின் அவன் தன் உடன்பிறந்த அகங்காரம் என்னும் தீங்குணத்தை அகற்றிவிட வேண்டும்.

838. அகங்காரம் ஒருவனைத் தன் சொந்தக் கோணத்திலிருந்தே எல்லாவற்றையும் பார்க்கச் செய்கிறது. வேறு கோணங்களி லிருந்து எதனையும் பார்க்கவிடாமல் தடுக்கிறது.

839. வெறுப்பு ஓர் ஆதாரமுமில்லாமல்கூட ஒரு விசயத்தில் ஒரு முடிவுக்கு வரச் செய்கிறது. அதன்பின் அந்த முடிவிற்கு மாற்றமான எதனையும் ஆராய மறுக்கச் செய்துவிடுகிறது.

840. வெறுப்பு அறிவிற்கு பெரும் தடையாக அமைந்துவிடுகிறது. அது ஒருவனை இருளுக்கும் அறியாமைக்கும் இழுத்துச் சென்றுவிடுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

841. வெறுப்பானது புத்தொளி காணாமல், அதிக அமுதைப் பாராமல், தெய்வீக கீதத்தை கேளாமல் மனத்தை மூடிவிடுகிறது.

842. ஒரு பக்கமே பேசுபவன் தன் அற்பக் கருத்தை கட்டிப்பிடித்துக் கொண்டு, அதுவே உலகின் உன்னதப் பொருள் என்று எண்ணிக் கொள்கிறான்.

843. உலகை அதன் வெறுப்புக்களையும், விரோதங்களையும் கொண்டு நோக்கினால், அது தத்தம் கட்சியே உண்மை யானது என்று விவாதிக்கும் வழக்கறிஞனைப் போன்றிருக்கிறது.

844. பாரபட்சமின்மை ஒரு வட்டம் போன்றாகும். ஒரு பக்கம் மட்டும் பார்ப்பவன் உண்மையில் ஒரு பகுதியை மட்டும் பார்க்கிறான்.

845. பாரபட்சமற்ற மனிதன் தன் விருப்பு வெறுப்பில்லாமல் சோதிக்கிறான்; நிறுத்துகிறான்; ஆராய்கிறான். அவனுடைய ஒரே விருப்பம் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதுதான்.

846. உண்மையான சிந்தனையாளன் மனித இனம் சூழப்பட்டிருக்கிற அந்த உணர்ச்சிச் சுழிக்கு அப்பால் அதற்கு மேலாக வாழ்கிறான்.

847. உண்மையான சிந்தனையாளன் மக்களுள் மிக மேலானவனாவான். அவன் விதி மிகச் சிறந்ததாகும். அவனுடைய விருப்பு வெறுப்புள்ள மனம் தெய்வீக நிலையை அடைகிறது. அது உண்மையின் ஒளியில் மூழ்கிக் குதிக்கிறது.

848. பாரபட்சமற்ற மனிதனிடம் உள்ள ஒளிமிக்க மணி பொறுமைதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

849. மனிதன் தன்னை அறிவுடன் அடக்குவதில் தொடங்க வேண்டும். பிறகு அவன் பொறுமையின் அழகிய பாடங்களைத் தொடங்க வேண்டும்.

850. பாரபட்டசமற்ற அமைதியாளன் மகிழ்ச்சியுள்ளவன் மட்டுமல்ல, அவனிடம் எல்லா ஆற்றல்களும் அமைந்திருக் கின்றன. அவன் நிச்சயமானவனாக இருக்கின்றான், சீர்தூக்கிப் பார்ப்பவனாக இருக்கின்றான்.

851. அக்கறையின்மையை அமைதியுடன் போட்டுக் குழப்பக்கூடாது, ஏனென்றால் இரண்டும் எதிரெதிர்க் கோடியிலிருப்பவையாகும்.

852. தன்னடக்கம் செல்வத்திலும் சிறந்ததாகும். அமைதியோ அழியா அருட்கொடையாகும்.

853. பாரபட்சமற்ற மேன்மகனிடமே அறிவு இருக்கின்றது. அறிவின் ஆலோசனைகளே அவனை வழிநடத்துகின்றன. அவையே அவனை இனிய பாதைகளின் வழியாக மகிழ்ச்சி மலிந்த இடங்களுக்கு அழைத்துச் செல்கின்றன.

854. அறிவிற்கு பல பக்கங்கள் இருக்கின்றன. அறிவுள்ள மனிதன் மற்றவர்களுக்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்கின்றான். அவர்களின் நன்மைக்காகவே அவன் வேலை செய்கிறான்.

855. அறிவுள்ள ஒவ்வோர் எண்ணமும், சொல்லும், செயலும் விந்தை உலகிற்கு சிறகடிக்கின்றன. ஏனென்றால் அவை மேன்மை கொண்டு ஆக்கப்பட்டவையாகும்.

856. அறிவு அழும் சிறுகுழந்தை போன்றாகும். மூடத்தனம், மமதை, பலவீனம், எதிர்பார்க்கும் நிலைக்கு அப்பால் வளர்ந்ததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

857. அறிவானது ஞானக் கிணறாகும்; வலிமையூற்றாகும்; அது ஆழமானது. எல்லாவற்றையும் கொள்ளக்கூடியது. அதன் விரிந்த மேன்மையில் அது சிறியவற்றைப் புறக்கணிப் பதில்லை.

858. அறிவுள்ள மனதுக்கு ஆதாரம் தேவையில்லை. அது தானாகவே அறிவின் தளத்தில் நிற்கும்.

859. அறிவு ஒருவனை அடையும்போது அவன் உயர்கிறான், உருமாறிவிடுகிறான். புதிய நோக்கங்களும் வலிமை களுமுள்ள புதிய மனிதனாக அவன் ஆகிவிடுகிறான். அவன் புதிய ஞாலத்தில் வாழ்கிறான்.

860. தன்னம்பிக்கை எதனையும் மறைக்காது. அது அறியாததை ஒப்புக்கொள்கிறது. அறியாததை கற்கவும் அது வெட்கப்படு வதில்லை. எங்கு கர்வமிருக்கிறதோ அங்கு அடக்கமிராது.

861. தன்னம்பிக்கையும் அடக்கமும் அதிகம் இணக்கமுள்ளவை ஆகும். மிக மேலான தன்னம்பிக்கை மிக மேலான அடக்கத்துடன் உறவு கொண்டிருக்கும்.

862. உண்மையை உறுதியாகப் பிடித்துக் கொண்டிருப்பவர்கள் உண்மை ஒன்றிலேயே விமோசனம் தேடுபவர்கள். தங்களைத் தவிர்த்து வேறு எவரிடமும் உதவி தேடமாட்டார்கள்.

863. தன்னம்பிக்கையை வீரத்தின் சாரம் எனலாம். பெரியார்கள் அனைவரும் தன்னம்பிக்கையாளர்கள்தான்.

864. ஒரு பக்தனின் உள்ளொளி என்றால் என்ன? அது தன்னம்பிக்கைக்குக் கொடுக்கப்பட்ட மற்றொரு பெயராகும்.

865. மனிதனிடமிருக்கும் பெரும் சங்கடம் அவன் தன்னை நம்பாதிருப்பது தான். அதுதான் அவனின் மிகப்பெரும் பலகீனம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

866. தீர்மானமே ஒருவனைப் பலவானாக்குகிறது. சலனப் படுபவர் வலுவில்லாதவரேயாவார். தயங்கும் மனிதன் அழிந்த மனிதன்.

867. எது தனக்குத் தெரியும்? எது தனக்குத் தெரியாது? என்பது பற்றி ஒரு மனிதன் ஒரு தீர்மானத்திற்கு வந்திருக்க வேண்டும்.

868. தன் அறியாமையைக் காட்டுவதில் காட்டும் விரைவை அவன் தன் அறியாமையை ஒப்புக் கொள்வதிலும் காட்ட வேண்டும்.

869. உறுதி துரிதமாகத் தீர்மானத்துக்கு வரும் இதயத்தில்தான் பிறக்கிறது.

870. கௌரவம்; உறுதியுள்ள மனத்தை மேலான ஆடை கொண்டு அணிவிக்கின்றது.

871. உறுதியற்ற மனம் எவ்வித உறுதியான கொள்கைக்கும் வசப்படாமல், சமத்துவ நிலை பெறாமல், அமைதி நிலையுறாது, சபலப்பட்டுக் கொண்டே இருக்கும்.

872. கௌரவமுள்ள மனிதன் அவமதிக்கப்பட்டவனாய் அடிமைப் படுத்தப்பட்டவனாய் இருக்கமாட்டான். அவன் ஒரு பார்வையில் ஒரு சொல்லால் தன்னைத் தாழ்த்தமுறப்படும் எந்த முயற்சியினையும் முறியடித்துவிடுவான்.

873. கௌரவமுள்ளவன் பிறரின் மதிப்பைப் பெறக் காரணம் அவன் தன் மதிப்பு உள்ளவனாய் இருப்பது மட்டுமல்ல, அவன் மற்றவர்களைக் கௌரவத்துடன் மேலான முறையில் நடத்துவதுமாகும்.

874. ஒரு மனிதன் நிலையான கொள்கையை ஒன்றின் அடிப்படையில் செயலாற்றும் அளவுதான், உள அமைதியும் கௌரவமும் பெற்றிருப் பான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

875. சுதந்திரம் என்பது வலிமையும், தன்னடக்கமும் உள்ள மனிதனின் பிறப்புரிமையாகும். எல்லா மனிதர்களும் சுதந்திரத்தை விரும்புகிறார்கள், அதனை அடைய வேண்டுமென முயற்சிக்கிறார்கள்.

876. சுதந்திரம், விடுதலை, மீட்சி இவையெல்லாம் உழைப்பின் மூலம் கிடைப்பவை; சோம்பல் மூலம் கிடைப்பவையல்ல.

877. தன்னைக் காப்பாற்றிக் கொள்பவனே சுதந்திரவானாவான். தன்னம்பிக்கையாளனாவான். விடுதலையுள்ளவனாவான்.

878. குறிப்பிட்ட ஒன்றுமட்டும் தனியாக நின்று வெற்றிபெற முடியாது; அது கௌரவத்துடன் சம்பந்தப்படாத வரையில்.

879. உண்மையைப் போதிப்பவன் கொள்கைகளை உறுதியாய்ப் பற்றியிருக்க வேண்டும். அவற்றிலிருந்து அவன் அகன்று விடக் கூடாது.

880. நிலையான கொள்கைகளுக்காகப் பாடுபடும் ஒருவன் விவரங்களால் விளையும் குழப்பங்களால் தனக்குப் பாதகம் செய்து கொள்ள மாட்டான்.

881. விதிகள் பிடிபடாத வரையில்தான் விவரங்கள் முக்கியமாகக் கருதப்படும். விதிகளின் வெளிச்சத்தில் விவரங்கள் இரண்டாந்தரமான விபரங்களாகவே காணப்படும்.

882. விதியைத் தெரியாமல் விபரங்களிலேயே மூழ்கிக் கிடப்பவன் சரியான வழி தெரியாமல் தடுமாறுவான்.

883. விதிகளை அறிந்தவன் எல்லா விபரங்களையும் தெரிந்து கொண்டிருப்பான். அவன் அவற்றை முழுமையாகப் பிடித்துக் கொண்டவனாவான்.

884. எல்லாப் பொருள்களுக்கும் ஒரு விதி உண்டு. அதுவே பொருள்களின் சட்டம் எனப்படுகிறது. எல்லாப் பொருள்களும் தம் சட்டத்திற்குப் பணிகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

885. ஒழுக்கமுள்ள மனிதன் எப்பொழுதும் ஆசிர்வதிக்கப் பட்டவனாய் இருக்கின்றான். அவன் வாழ்க்கை முழுதும் வெற்றியாகவே இருக்கிறது.

886. அறிவாளியின் ஓர் உறுதியான பத்திரமான அடிப்படை மீதுதான், அழியா உண்மையின் விதிகளின் மீதுதான், தங்கள் வாழ்க்கையைத் தீர்மானித்தார்கள்.

887. ஒருவனுடைய முகத்தைப் பார்த்ததும் அவனுடைய அகத்தை விளங்கிக் கொள்ள இயலுவது போன்று, ஒரு நூலின் தலைப்பைக் கண்டதும் அதன் உள்ளே என்ன உள்ளது என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

888. உன்னையே நீ வெற்றிகொண்டு விட்டால், நீ உண்மையில் வெற்றி பெற்றுவிட்டவனாவாய். அதன் பின் நீ ஒரு தனி மனிதனல்ல. ஓர் அமரன்.

889. குறைவாகப் பேசுகிறவனுக்குச் சாதகமாகவே எல்லாம் உள்ளது. அவன் பொதுவாக மேலான மனிதனாகக் கருதப்படுகிறான். அவன் ஒரு முட்டாளாக இல்லாவிடிலோ, மிகவும் மேலான மனிதனாகக் கருதப்படுகிறான்.

890. ஒரு மனிதன் தன்னுடைய ஆன்மாவுக்குள் மிகவும் அமைதியுடனும், சுதந்திரத்துடனும் ஓய்வு கொள்வது போன்று, வேறு எங்கும் ஓய்வு கொள்ள இயலாது.

891. தியானம் என்பது ஆன்மாவின் கண்ணாடியாகும். அதன் மூலம் மனிதன் இறைவனைத் தன்னருகில் காண்கிறான்.

892. சிலருக்கு அண்ட கோளங்களைப் பற்றியெல்லாம் தெரியும் எனினும் தங்களைப் பற்றி மட்டும் ஒன்றும் தெரியாது.

893. ஒவ்வொருவனும் தனக்கேதான் சிறிதளவே அறிந்தவனாக உள்ளான். தன்னை அறிவதுதான் மனிதனுக்கு மிகவும் கடினமாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

894. உன்னை அறிவதையே உன்னுடைய தொழிலாக வைத்துக்கொள். அகில உலகத்திலும் கடினமான பாடம் ஒன்று இருக்குமானால் அது இதுவேயாகும்.

895. ஒருவன் மற்றவர்களுக்கு எவ்வளவுதான் நன்றாக விளங்கிய போதிலும், அவன் தன்னைத்தான் அறியாத நிலையில் இறந்து விடுவானாயின் அவனுக்கு அவனுடைய இறப்பு மிகவும் துன்பம் பயப்பதாக ஆகிவிடும்.

896. அறிவாளர்களும் சரி, அறவாளர்களும் சரி, தங்களையே தாங்கள் அறிவதற்குப் பெரிதும் முயல்கிறார்கள்.

897. உன்னையே நீ உனது மாபெரும் எதிரி கவனிப்பது போன்று கவனிப்பாயாக! அப்பொழுதுதான் நீ உன்னுடைய மாபெரும் நண்பனாவாய். (வில்லியம் ஷேக்ஸ்பியர்)

898. மாமனிதன் தனித்திருக்கும் பொழுது தன்னையே தான் கவனிக்கிறான். தன்னுடைய இதயத்தில் யாதேனும் மாசு இருக்கிறதா என்று சோதித்துப் பார்க்கிறான்.

899. நீ பகலில் ஆற்றிய செயல்கள் பற்றி இரவில் உன்னையே கேள்வி கணக்குக் கேட்கும் வரையில், உன்னுடைய இமைகள் உன்னுடைய கண்களை மூட அனுமதியாதே.

900. எவரும் உன்னைப்பற்றி குறை கூறினால் அக்குறை உன்னிடமிருந்தால் திருத்திவிடு. இல்லையாயின் அறிவுத் தெளிவு பெற்றுவிடு.

901. தன்னை அறிவது ஒருவனைத் தன்னுடைய தகுதியையும் அறியச் செய்கிறது. அதன் காரணமாக அவன் அறிவின் வலுவில் நிற்கிறான்.

902. நீ உன்னை உன்னுடைய கருத்துக்களாகிய துலாக்கோலில் வைத்து நிறுத்துப் பார்க்காதே. அதற்கு மாறாக, அறிவாளிகள் உன்னைப் பற்றிக் கொள்ளும் முடிவு உன்னுடைய தகுதியின் அளவுகோலாக அமையட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

903. அளவுக்கதிமான தன்னபிமானம் உள்ளவர்கள் தங்களுடைய முட்டைகளைப் பொரிப்பதற்காக பிறர் வீட்டுக்குத் தீ மூட்டவும் தயங்கமாட்டார்கள்.

904. மனிதனால் இழைக்கப்படும் எல்லாத் தவறுகளுக்கும் அளவுக்கதிகமான தன்னலமே காரணமாக அமைந்துள்ளது.

905. குறிப்பிட்ட நேரத்தின்படி வராதவர்கள் வரவேற்கத் தகாதவர்கள். அறிவுரை கேட்டுச் சென்று அதன்படி செயலாற்றாதவர்களும் அப்படியே.

906. ஒருவனும் தனக்காக மட்டும் இவ்வுலகில் வாழ்வானானால் அவன் உண்மையில் தனக்காகவும் வாழவில்லை; வேறு எவருக்காகவும் இந்த உலகில் வாழவில்லை என்றுதான் பொருள்.

907. பிறருக்காக சிறிதேனும் வாழாதவன் தனக்கே தான் சிறிதேனும் வாழாதவனே.

908. ஒவ்வொருவனும் தன் காரியம் பற்றிய வரையில் பேச்சு வன்மையுள்ளவனாகத்தான் இருக்கிறான்.

909. தன்னலக்காரன் தான் எவருக்கு சில முக்கியமான நலன்களைத் தடைசெய்தானோ, அவர்களைவிட அதிமாகத் தன்னுடைய தன்னலத்தின் காரணமாகத் துன்புறுகிறான்.

910. நாம் நம்முடைய நலனில் காட்டும் ஒவ்வோர் அக்கறையும் நமக்குச் சுவன வாழ்வையே இல்லாமல் ஆக்கிவிடுகிறது.

911. ஒரு மனிதன் தனக்கேதான் அதிகம் அதிமாகவே மறுக்கும் பொழுது அவன் அதிகம் அதிகமாக மனிதனிடமிருந்து பெறுகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

912. மேலான பொருள்களை நுகர்வதில்கூட நிதானமாகவும், அமைதியாகவும் இருக்க வேண்டும்.

913. நிதானம் என்ற எல்லைக்கு அப்பாற்பட்டு செல்லக்கூடிய எதுவும் நிலையற்ற அடித்தளத்தைப் பெற்றிருக்கிறது.

914. மனிதனின் உண்மையான வரம்பு நிதானமேயாகும். அந்த வரம்பைக் கடந்து நாம் ஒரு தடவை சென்றுவிடின் நம்மைக் காவல் காக்கும் வானவர் நம்மைவிட்டும் பிரிந்துவிடுவார்.

915. எல்லாத் தத்துவங்களுடைய நடுப்பகுதியும் நிதானமே ஆகும். நிதானம் தவறிச் செயலாற்றுவது மனித இனத்தை இழுக்கடையச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

916. நீ வீரம் பொருந்திய வெற்றியாளனா? நீ உன்னுடைய ஆசைகளையும் ஆபாசங்களையும் எதிர்த்து போர் புரிந்தால்தான் உண்மையான வீரனாகத் திகழ்வாய்.

917. மிகவும் ஆற்றல் உள்ளவன் எவனெனில் தன்னையே தான் அடக்கி ஆள்கிறானே அவனேதான்.

918. நீ உன்னை உன்னுடைய கைப்பிடியில் வைத்திருப்பாயாக.

919. எவன் தன்னை அடக்கி ஆண்டு, தனக்கே தான் சட்டமாக இருந்து கொள்கிறானோ அவனுக்கு சட்டம் என்ற ஒன்று தேவையில்லை.

920. ஒரு மனிதன் தன்னுடைய குடும்பத்தை ஆட்சி செய்யும் தகுதி பெறுமுன் தன்னையே தான் ஆட்சி செய்து பழக வேண்டும்.

921. ஒரு அரசாங்கத்தை ஆட்சி செய்யும் தகுதி பெறுமுன் தன்னுடைய குடும்பத்தை ஆட்சி செய்து பழக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

922. எதையும் தன்னடக்கமின்றி அவசரப்பட்டுச் செய்வது அவமானத்தையும் ஆபத்தையும் விளைவிக்கும்.

923. இனம் என்பது தவறில் தொடங்கி பச்சாதாபத்தில் முடிவடைகிறது.

924. ஒரு மனிதன் வன்மையானவனா அல்லவா என்பதை அறிய அவன் தன் உணர்ச்சிக்கு அடங்கிவிடும் இயல்பினனா என்பதை அறிந்தாலே போதும்.

925. மெதுவாக சினமுறுபவன் வன்மையாளர்களைவிட மேலானவனாக உள்ளான். தன்னுடைய உணர்ச்சிகளை அடக்கி ஆள்பவன் ஒரு நகரத்தை வெற்றி கொள்பவனை விட மேலானவனாக உள்ளான்.

926. உனக்கு எந்நிலை ஏற்பட்ட போதிலும் அமைதி குலையாது ஒரே நிதானமாக இரு. அப்படி இருக்கும் நீ பலருக்கு வழிகாட்டும் ஒளி விளக்காவாய்.

927. ஒரு மனிதனின் உண்மையான தன்மையை அறிய வேண்டுமானால் அவனுக்கு அதிகாரத்தை கொடுத்துப் பாருங்கள்.

928. பெரும் செயல் ஆற்றுவதற்கு முதலில் தேவைப்படுவது தன்னம்பிக்கையேயாகும். தன்னையே நம்புவதுதான் வெற்றியின் இரகசியமாகும். அதுவே வீரத்தின் சத்தாகும்.

929. நீ யாரைப் பார்த்தும் சந்தேகப்படு. ஆனால் உன்னைப் பார்த்து மட்டும் சந்தேகப்படாதே.

930. மனிதர்கள் தங்களுக்கிடையே ஆற்றலைப் பயன்படுத்தாது பிறருடைய உதவியை எதிர்பார்த்து ஏங்கி நிற்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு அவர்களுடைய உதவியே போதுமானதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

931. ஒவ்வொரு மனிதனுடைய நம்பிக்கையும் தன்னிலேதான் அமைந்திருக்கிறது.

932. தன்னையே தான் நம்பியிருத்தல் போன்ற நிச்சயமானது வேறொன்றுமில்லை.

933. உன்னையே நீ நம்பு, உன் கையே உனக்கு உதவியாகும். பிறருடைய உதவி கிடைத்தாலும் கிடைக்கும். கிடைக்கா விட்டாலும் இல்லை. ஆனால் உன்னுடைய உதவியோ உனக்கு நிச்சயமானதாகும்.

934. உனக்கு ஒரு ஊழியன் இருந்து, அவனுக்கு நீ விரும்பக் கூடியவனாக இருக்க வேண்டுமானால் உனக்கே நீ ஊழியம் புரிந்து கொள்வாயாக. (பெஞ்சமின் பிராங்ளின்)

935. ஒரு மரம் பூத்துக் காய்த்துப் பழுப்பதற்கு முன் அது மண்ணில் வேரூன்றி வளர்ந்திருக்க வேண்டியது போல், மனிதனும் தன் காலின் உறுதியுடன் நிற்க வேண்டும்.

936. மொழி பெயர்ப்பாளன் கவிஞனாக முடியாதது போன்று, மற்றொன்றைப் பார்த்து வரைபவன் ஓவியனாக இருக்க முடியாதது போன்று, பிறருடைய உதவியை எப்போதும் நாடுபவன் ஏழையாகவே இருப்பான்.

937. தாங்கள் சரியான பாதையில் இருக்கிறோம் என்று நம்புகிறவர்கள் பொதுவாக எதையாவது சாதிக்கவே செய்திருக்கிறார்கள்.

938. உண்மையில் நம்பிக்கை கொண்டவர்கள் எப்பொழுதும் தங்களைப்பற்றி ஒரு பெருமித உணர்ச்சி உள்ளவர்களா கவே உள்ளனர்.

939. நீ உன்னையே மதித்து அதனால் நன்மை அடையும் பொழுது நீ உன்னுடைய ஆசிரியரை வீட்டுக்கு அனுப்பி விடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

940. உங்களையே நீங்கள் மதியுங்கள்! இதனை எல்லாவற்றை யும் விட மேலாகக் கருதுங்கள்.

941. தன் மதிப்பு என்பது ஒரு மனிதன் அணிந்து கொள்ளக்கூடிய மேலான ஆடையாக உள்ளது. அதனை அவன் அணிந்து கொண்டதும் தன்னையே தான் புது ஆற்றல் மிகுந்த ஒரு புது மனிதனாகவே காண்கிறான்.

942. நீ உன்னையே தாழ்வாக கருதும்பொழுது வேறு யார் உன்னை உயர்வாக கருதுவார்கள், உன்னையே நீ கைவிட்டு ஓடும்பொழுது பிறர் யார்? உன்னைப் பின்பற்றத் துணிவார்கள்.

943. ஒரு மனிதன் மகிழ்ச்சியாயிருப்பதற்கு அவன் தன் பற்றிய வரையில் தனக்கேதான் விசுவாசமுள்ளவனாக இருப்பது இன்றியமையாத தாகும்.

944. என்னைப் பற்றி நான் என்ன எண்ணுகிறேன் என்பதை விட, மற்றவர்கள் என்னைப்பற்றி என்ன எண்ணுகிறார்கள் என்பது பற்றி நான் அதிகமாக கவலையுறவில்லை. நான் என்னாலேயே செல்வனாக இருப்பனேயன்றி, கடன் வாங்கி செல்வனாக இருக்க விரும்பவில்லை.

945. தன் மதிப்புள்ளவன் ஒருபோதும் தலை வணங்கித் திரிய மாட்டான்; பிறருடைய தயவில் வாழவும் விரும்பமாட்டான்.

946. உன்னுடைய வாக்கை முறிக்குமாறோ., உன்னுடைய தன் மதிப்பை இழக்குமாறோ செய்யக்கூடிய எதனையும் உனக்கு நன்மை பயப்பதாக கருதாதே.

947. தன்னையே தான் மதிக்கிறவன் பிறரிடமிருந்து அபாயம் நீங்கியவனாக உள்ளான். எவராலும் துளைக்க இயலாத இரும்பு அங்கியை அவன் அணிந்துள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

948. தன்மானமுள்ளவர்கள் அங்குமிங்கும் அலைந்து திரிந்தோ அல்லது பிறர் கூப்பிட்ட குரலுக்கெல்லாம் ஓடியோ ஒருபோதும் தங்களையே தாங்கள் மலிவாக செய்து கொள்ள மாட்டார்கள்.

949. நீதி, நேர்மை ஆகியவற்றின்மீது எழுதப்பட்டுள்ள தன்மதிப்பு பெரும்பாலும் நற்பலனையே நல்குகிறது.

950. அறிவாளி தன்னுடைய அறியாமையை உணர்ந்திருக்கும் பொழுது, முட்டாளோ தனக்கு எல்லாம் தெரியும் என்று எண்ணிக்கொண்டே சுருங்கி நிற்கிறான்.

951. எந்த இடத்தில் தான் அறிவாளி என்று ஒருவன் கருதுகின்றானோ அந்த இடமே அவனுடைய வலுவற்ற இடமாகும்.

952. ஒரு மனிதனுடைய மூளையில் இயற்கை ஓர் ஓட்டையைப் போடும் பொழுது அதனை தற்பெருமை என்ற கடினமான மருந்து தடவப்பட்ட துணியால் மூடி மறைத்துவிடுகிறது.

953. அளவுக்கதிகமான பெருமை ஒருவனை நகைப்பிற்கிடமாக ஆக்கும் பொழுது, அவனோடு கூடிய பெருமை ஒருவனை அவ்விதம் ஆகாமல் தடுக்கிறது.

954. நம்முடைய குறைகளை உணர்ந்து நாம் மனம் வருந்தாவண்ணம் நமக்கு இயற்கை பெருமை உணர்வை நல்கி இருக்கிறது.

955. மற்றொருவன் கூறுவானானால் பெரும் கௌரவமாக இருக்கக்கூடிய ஒன்று, அதனைச் செய்பவனே கூறினால் ஒன்றுமில்லாமல் மண்ணாய்ப் போய்விடும்.

956. ஒரு மனிதனுடைய புகழ் மற்றவர்களின் வாயிலிருந்து வரும்பொழுது இனிமையாகவும், கவர்ச்சியாகவும் முது இனிமையற்றதாகவும், கொடூரமாகவும் ஆகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

957. மக்கள் உன்னைப் பற்றி நன்றாகப் பேச வேண்டுமென்று விரும்புகிறாயா? அவ்விதமானால் உன்னைப்பற்றி ஒன்றும் புகழ்ந்து பேசாதே.

958. தற்புகழ்ச்சிக்காரன் தன் அண்டை அயலார்களை விட்டும் அதிகத் தொலைவில் வாழ்வான்.

959. இருபேர்களில் ஓர் அறிவாளி கூடத் தன்னைத்தான் புகழமாட்டான்.

960. நீங்கள் உங்களுடைய பெருமையைப் பற்றி குறைவாகப் பேசினால் மற்றவர்கள் அதைப்பற்றி அதிகமாக எண்ணிக் கொள்ளுவார்கள்.

961. நம்முடைய மனைவியைப் பற்றி பிறரிடம் யாதொன்றும் கூறக்கூடாது என்பதை நாம் ஒப்புக் கொள்கிறோம். ஆனால் நம்மைப் பற்றி அதை விடக் குறைவாகப் பேச வேண்டு மென்பதை நாம் அறிந்திருக்கிறோமில்லை.

962. ஒருவன் தன்னைப் புகழ்ந்து கூறும்பொழுது அதனை நம்பாத உலகம் ஒருவன் தன்னை இகழ்ந்து கூறும்பொழுது அதனை அப்படியே நம்பிவிடுகிறது.

963. உலோபன் தன்னைச் சீர்மையாளன் என்றும், கோழை தன்னை எச்சரிக்கையுடன் செயலாற்றுபவன் என்றும் கருதிக் கொள்வதும் தன்னையே தான் ஏமாற்றிக் கொள்வதாகும்.

964. நீங்கள் உங்களுடைய தந்தையர்களின் கூடாரத்தில் கிடந்து உறங்க வேண்டாம். உலகமே முன்னேறிக் கொண்டுள்ளது. அத்துடன் சேர்ந்து நீங்களும் முன்னேறுங்கள்.

965. மனித இயல்புள்ள அனைத்தும் முன்னேறவில்லையாயின் அவை பின்னுக்கே தள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

966. தன்னையே தான் ஏமாற்றிக் கொள்வது போன்ற எதுவும் எளிதான செயலாக இல்லை. ஏனெனில் நாம் எதனை விரும்புகிறோமோ அதனை நாம் அப்படியே நம்பி விடுகின்றோம். அதனால் நாம் எதிர்பார்ப்பதோ உண்மைக்கு நேர்மாற்றமாக உள்ளது

967. மிகப்பெரும் அறிவாளிகள்கூட நேற்று இருந்ததைவிட இன்று அதிமான அறிவு பெற்றிலங்கக் கூடும். இன்று இருப்பதைவிட நாளைக்கு மேலான அறிவு பெற்று திகழக் கூடும்.

968. பேச்சில் சமயோசிதம், சொல்வன்மையை விட மேலானது.

969. நிறுவையில் போடும்போது அதிகக் கனமாக இருப்பது நற்பண்பு.

970. எவனுடைய இதயம் மிருதுவாகவும், இரத்தம் வெதுவெதுப்பாகவும், மூளை வேகமாகவும், ஆன்மா அமைதியாகவும் ஆகிக் கொண்டுள்ளதோ அவனே வாழ்க்கையில் முன்னேறிக் கொண்டுள்ளான்.

971. பறவை ஒன்று தன் இனத்து பறவைகளுடன் பறப்பது போல், மனிதன் தன் உருவத்தை ஒத்த மற்றவர்களுடன் நட்பு கொள்கின்றான்.

972. நீங்கள் ஒரு மனிதனை மிகவும் நேசிக்க விரும்பினால் அவன் வளர்க்கும் நாயையும் விரும்பத் தலைப்படுவீர்கள்.

973. நம்பிக்கையுடைய இரண்டுபேர் உட்கார்ந்து உரையாடும் போது, அவர்களில் ஒருவன் மற்றவன் விரும்பாததை வெளியிடக்கூடாது.

974. நல்லவர்களின் உள்ளம் இரகசியங்களுக்கு கல்லறை போன்றது. கல்லறைக்குள் செல்லும் பிரேதம் அழிந்து போவது போல் அவர்களின் உள்ளத்துக்குள் செல்லும் இரகசியம் மறைந்து போய்விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

975. நீங்களும் தவறு செய்யக்கூடும் என்று நம்பாத யாருடனும் நட்புக் கொள்வதில் நன்மை கிடையாது. கோபமடையும் போது உங்கள் மர்மங்களைப் பகிரங்கப்படுத்துபவர் களையும் நண்பர்களாக்கிக் கொள்ள வேண்டாம்.

976. சந்தேகத்தை விட்டொழியுங்கள்; ஏனெனில் அதிலிருந்து கிடைக்கும் நன்மை குறைவு. அதிலிருந்து உருவாகும் தீமை அதிகம். இது சகோதரர்களுக்கு மத்தியில் பகைமையைத் தோற்றுவிக்கும்.

977. உங்களில் ஒருவன் தன் சகோதரனின் சவத்திலிருந்து மாமிசம் சாப்பிட விரும்புவானாக இருந்தால் அவன் தன் சகோதரனைப் பற்றி புறம் பேசட்டும்.

978. மனிதர்களாகிய நாம் நட்பினால் உருப்பெறும் உரிமைகளையும் கடமைகளையும் தேவையின் அளவுக்கேனும் தெரிந்துகொள்ள வேண்டும்.

979. எவரோடு இருக்கும்போது தனித்திருப்பது போன்ற உணர்வு ஏற்படுகின்றதோ அவர்களே சிறந்த நண்பர்கள்.

980. தன்னைப் போல் நண்பர்களை மதிக்காத யாருடனும் நீங்கள் நட்புக் கொள்வதில் நன்மையில்லை.

981. வாழ்க்கையில் துன்பத்தைக் கண்டு ஓடுகிறவன் குருட்டு நம்பிக்கைகளில் புகலிடம் தேடுகிறான். இதைப் போலி மதவாதிகள் பயன்படுத்துகிறார்கள்.

982. மனத்துடன் போராடுவதும், மனதைவிட்டு பயந்து ஓடுவதும் அதன் தீய தன்மைகளுக்கு ஊக்கம் தருவதே ஆகும்.

983. அன்புக்கு சமய சித்தாந்தங்கள் தேவையில்லை. அது கோட்பாடுகளை அறியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

984. ஓர் உண்மையான ஞானி சாதாரணமாகத்தான் தோற்ற மளிப்பாரே தவிர, ஞானியைப் போன்ற தன்மையில் காணப்படமாட்டார்.

985. பொறாமை என்றால் நீ துன்பத்தில் வாழ்கிறாய் என்பது பொருளாகும்.

986. காரணம் கொண்டு மகிழ்பவன் உண்மையில் மகிழ்ச்சியில் இருப்பவன் அல்ல.

987. மனிதன் எப்படியோ அப்படியே அவனுடைய மதமும் ஆகிவிடுகிறது. மனிதனின் குணங்கள் அவனுடைய மதத்திற்கும் வந்துவிடுகிறது.

988. அன்பு இல்லாதவனின் வாழ்க்கையில் புன்னகை உற்சாகம் முதலியவை இருக்காது.

989. எங்கே தேடுதல் இருக்கிறதோ அங்கே அடையும் தாகமும் இருக்கிறது.

990. உண்மையான அன்பு எல்லாவற்றையும் நேசிக்கும். அன்புக்கு அன்பைத் தவிர வேறு எதுவும் தெரியாது.

991. அநேகமான மக்கள் மொழி அறிஞர்களாகவே வாழ்கின்றனர். இது ஒரு போலியான வாழ்க்கை.

992. எவன் ஒருவன் சமூகத்தோடு ஒட்டியோ அல்லது புறம்பாகவோ செல்லாமல் தன் வாழ்வை அறிந்து வாழ்கிறானோ அவன்தான் உண்மையான புரட்சிக்காரன்.

993. சொர்க்கத் தன்மையை அடைவதற்கு ஏற்ற தகுதிகள் அனைத்தும், நம் பூமிக்கு உண்டு. ஆனால், இது நாம் உபயோகப்படுத்துவதில் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

994. வாழ்வைப் பரிணமிப்பதற்கு எவன் ஒருவன் தன் சக்தி அனைத்தையும் செலவழிக்கிறானோ அவன்தான் உண்மையான மதத்தன்மை உடையவனாகிறான்.

995. நீங்கள் விடுதலையை விரும்பினால் அது உங்கள் ஞானத்தை விரும்புவதற்கு சமம். நீங்கள் உங்களை அறிந்து கொள்ள வேண்டுமானால் உங்களைப் பற்றிய ஞானம் வேண்டும்.

996. உங்களுடைய இயற்கைத் தன்மையை நீங்கள் ஒரு தடவை அறிந்து கொண்டால் போதும் அதுதான் ஞானம், அதுதான் கடவுள் தன்மை.

997. உன் உள்ளத்தில் வன்மையுடன் ஆட்சி செய்யும் எண்ணம் நீ உறங்கும்போதும் உன்னுடைய உள்ளத்தில் வேகமாக வேலை செய்து, இரத்தத்தோடு கலந்து உடல் முழுவதும் பாய்ந்து பரவி உன்னை அறியாமலே இயங்கச் செய்யும்.

998. மனிதன் வாழ்வது மூளைக்கல்; முயற்சிக்கே. இறைவன் வரங்களை விற்பனை செய்கின்றான். முயற்சியே அதன் விலை. (தோமஸ் அல்வா எடிசன்)

999. சிந்திப்பதானால் நிதானமாகச் சிந்தியுங்கள். செயற்படுவதானால் உறுதியோடு செயற்படுங்கள். விட்டுக் கொடுப்பதானால் மன நிறைவோடு விட்டுக் கொடுங்கள். எதிர்ப்பதானால் யோசித்து திடமாக எதிர்த்துவிடுங்கள்.

1000. நாம் பழகிய முறைகளிலேயே செயல்களையெல்லாம் செய்துவிட்டு, முடிவுகளை மட்டும் வித்தியாசமான முறையில் எதிர்பார்ப்பதுதான் உலகில் மிகப் பெரும் முட்டாள்தனம். (அல்பிரட் ஐன்சடீன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் ஏனைய பிற நூல்கள்:

1. தர்மத்தின் தியாகம் (சிறுகதை)

2. அறப்பணியில் ஆசிரியர்கள் (சம்பவங்கள்)

3. பிரிவுக்குள் பிணைப்பு (சமூக நாவல்)

## வெளிவரவிருப்பது:

1. நேசத் தூண்டுதல் (சமூக நாவல்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சகோதரர் ஹிதாயத்துல்லாஹ் மீர்சா அவர்கள் மனிதநேயக் கருத்துக்களை மூலதனமாக வைத்து எழுதும் ஓர் உன்னதமான எழுத்தாளன்; சிந்தனையாளர்.
இவரது எழுத்துக்கள் பலதை வாசிக்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைக்கப் பெற்றிருந்தேன். மனிதநேய விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படும் இவரது கதைகள் கட்டுரைகள், கவிதைகள் மனதை மெல்ல வருடிச் செல்லும் தென்றல் காற்றைப் போன்ற நடையைக் கொண்டு மிளிர்கின்றன.

இங்கு "நெறிகள் ஆயிரம் படி" எனும் நெறிகள அறிவுரைகள் பல அடங்கிய ஒரு தொகுப்பினை ஆசிரியர் அவர்கள் தொகுத்துத் தந்துள்ளது தமிழ் கூறும் நல்லுலகுக்கு கிடைத்த ஒரு அறநெறிப் பெட்டகம். அதில் நுழைந்து எழுபவர்கள் புடம்போட்ட தங்கமாய் மின்னி எழுவார்கள் என்பது எனது கருத்தாகும்.
எவ்வாறு நிர்வாணமான ஓர் உடலுக்கு ஆடை அணிகலன்கள் அணிவித்தால் அது அழகாக மிளிருமோ அதுபோல இந்த "நெறிகள் ஆயிரம் படி" எனும் நூலுக்கு நான் அணிவிக்கும் இவ் அணிந்துரை இதற்கு ஒரு படி மெருகூட்டும் என்பது எனது கணிப்பாகும். மேலும் இத்தொகுப்பில் ஒரு சில நெறிகள் திரும்பத் திரும்ப வாசித்து மனசிலே பதிய வைத்து பாராட்டத் தகுந்த உயரிய கொள்கைகளையும், அறிவுரைகளையும் கொண்டிருப்பது இத்தொகுப்பின் சிறப்பம்சங்களில் ஒன்று.

**டாக்டர் ஆ. முகம்மது ஜாபீர்,**
பதிவு வைத்திய அதிகாரி,
மாவட்ட வைத்தியசாலை, நிந்தவூர்

ISBN 978-955-52414-0-3

An-Noor Offset, Kalmunai - 0776167535

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org